

# பிரளயம்

செங்கை ஆழியான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரளயம்

(சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றநாவல்)

செங்கை ஆழியான் க. குணராசா

கமலம் பதிப்பகம்,
82, பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்: இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ முதற் பதிபபு, யூன் 1975 (வீரகேசரி வெளியீடு)
❋ இரண்டாம் பதிப்பு, நவம்பர் 1989
❋ (C) கமலா குணராசா, 82, பிறவுண் வீதி, யாழ்.
❋ அச்சுப்பதிவு: கே. ரி. அச்சகம், யாழ்ப்பாணம்.
❋ அட்டை: திரு. ந. ராஜரட்னம், பேபி போட்டோ.
பல்கலைக்கழக வீதி, யாழ்ப்பாணம்.
❋ வெளியீடு: கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
❋ விலை: ~~30/-~~ 200/=

❋ *PIRALAYAM - A Noval in Tamil by Sengaiaaliyan (K Kunarasa, B. A. Hons (Cey.). M A. SLAS)*
❋ *(C) Kamala Kunarasa, B A (Cey.). 82, Brown Road, Jaffna.*
❋ *Frist Edition June 1975. (Virakesary Pirasuram - 30)*

❋ *Second Edition. November, 1989.*

❋ *Published by Kamalam Pattippakam Jaffna*

❋ *Cover: Mr. N. Rajaratnam, Baby Photo. Jaffna.*

*Mr R. Patkunam, Jaffna.*

❋ *Printers K T. Printers, Jaffna.*

❋ *Pages:* 16 + 122 = 138

❋ *Price: 30/-*

**கமலம் பதிப்பகம்**

**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

செங்கை ஆழியான் அவர்கள் ஈழத்தின் நவீன தமிழிலக்கியத்துறையில் கால்நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாகத் தமது ஆளுமையின் சுவடுகளை ஆழமாகப் பதித்து நிற்பவர்; பல சிறுகதைகளையும் இருபத்தைந்து நாவல்களையும் எழுதி முடித்தவர்; தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பவர்; தமது படைப்புகள் மூலம் ஈழத்தின் வடபுலமாந்தரின் சமூக பண்பாட்டுக் கூறுகள் பலவற்றுக்கு இலக்கிய வாழ்வளித்தவர். இவரது இலக்கியப் பங்களிப்பு தொடர்பாகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிந்திக்கவும் எழுதவும் எனக்கு வாய்ப்பு கிட்டியது. குறிப்பாக 1978ம் ஆண்டு வெளிவந்த எனது ஈழத்து தமிழ் நாவலிலக்கியம் நூலிலும், 1988 மல்லிகை இதழிலும் இவரது படைப்பிலக்கியப் பணி தொடர்பான எனது அபிப்பிராயங்களை முன்வைத்துள்ளேன். இவரது படைப்பொன்றுக்கு அணிந்துரையாளனாக என் கருத்துக்களை முன்வைப்பது இதுவே முதல் முறையாகும்.

பிரளயம் என்ற இந்நாவல் 1971ம் ஆண்டில் சிரித்திரன் சஞ்சிகையில் மயானபூமி என்ற தலைப்பில் தொடராக வெளிவந்தது; சில மாறுதல்களுடன் 1975ல் 'பிரளயம்' எனப் பெயர் மாற்றம் பெற்று வீரகேசரிப் பிரசுரமாயிற்று; இப்போது இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது. ஈழத்திலே படைப்பிலக்கியமொன்று இரண்டாம் பதிப்புப் பெறுவதென்பது ஒரு சாதனைதான். இத்தகுசாதனை செங்கை ஆழியான் போன்ற பரந்த வாசக வட்டமுடைய ஒரு படைப்பாளனுக்கே சாத்தியம். இச்சாதனைத் துணிவு வாழ்த்தி வரவேற்றற்குரியது.

இந்த நாவலின் கையயகப் தமிழர் சமுதாயத்தின் சாபக்கேடுகளிலொன்றான சாதிப்பிரச்சினை தொடர்பானது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இருபதாண்டுகட்கு முன் இப் பிரச்சினை 'கொதிநிலை'யில் இருந்தபோது எழுதப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிரதேசத்தின் சலவைத்தொழிலாளர் சமூகம் தனது 'அடிமை-குடிமை' நிலையில் இருந்து விடுபடத் துடித்த உணர்வுநிலையே கதைக்கரு. கல்வி, பாரம்பரியத்திலிருந்து வேறுபட்ட தொழில் முயற்சிகள் என்பன மேற்படி துடிப்புக்குச் செயல்வடிவம் கொடுக்கத் துணை நிற்கின்றன. உயர் சாதியினர் எனப்படுவோரின் இளையதலைமுறையில் ஒரு சாரார் மத்தியில் நிலவிய மனிதாபிமானம், பொதுமை நோக்கு என்பன மேற்படி உணர்வு நிலைக்குக் கைகொடுத்து வரவேற்கின்றன. இவற்றால் அப்பிரதேசத்தில் ஒரு சமுதாய மாற்றம் [பிரளயம்] நிகழத் தொடங்குகிறது. இந்த வரலாற்றுப் போக்கு வண்ணார்பண்ணைக் கிராமத்தின் ஒரு சலவைத் தொழிலாளி குடும்பத்தின் கதையாக விரிகின்றது பாரம்பரிய 'அடிமை-குடிமை' நிலையினின்று விடுபடக் கல்வியை ஒரு வலுவான கருவியாகப் பற்றி நிற்க முயலும் ராணி என்ற பாத்திரத்தை முன்வைத்து இக்கதை நிகழ்த்தப்படுகின்றது. தொடக்கத்தில் அவளது உணர்வோட்டத்தை ஒப்புக்கொள்ளத் தயங்கிய குடும்பம் ஈற்றில் வாழ்த்தி வரவேற்கின்றது. உயர்சாதியினர் எனப்படுவோரால் தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்குப் பிராயச்சித்தமாகத் தன்னையே தியாகம் செய்துகொள்ள முன்வரும் மகாலிங்கம் என்ற பாத்திரம் உயர்சாதி இளைய தலைமுறையின் ஒரு சாரார் மத்தியில் நிலவிய மனிதாபிமானம், பொதுமை நோக்கு என்பவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்தி அமைகிறது. கதைமுடிவிலே நெஞ்சத்தை விட்டகலாமல் நிலைத்து விடுகின்றது. ஒரு கிராமியக் களத்தின் மாந்தரை அவர்களது இயல்பான குணம்சங்களுடன் காட்டி சுவை பொருந்தக் கதை கூறிச் செல்கிறார் ஆசிரியர்.

இந்த நாவல் ஈழத்தின் தமிழ்நாவல் வரலாற்றிலும் செங்கை ஆழியானது படைப்பிலக்கிய வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையது. ஈழத்துத் தமிழ் நாவல்களில் சாதிப்பிரச்சினை இந்த நூற்றுண்டின் முதற்கால் நூற்றுண்டுப் பகுதியிலேயே இடம் பெறத் தொடங்கி விட்டது. இடைக்காடரின் நீலகண்டன் ஓர்சாதி வெள்ளாளன் (925) எஸ். தம்பிமுத்துப்பிள்ளையின் அழகவல்லி (1926)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன இவ்வகை முதல் முயற்சிகளாகும். இவை இப் பிரச்சினையின் புறத்தோற்றத்தின் சில கூறுகளை மட்டும் மேலெழுந்தவாரியாக நோக்கியவையே. இப்பிரச்சினையின் பல்வகைக் கூறுகளை ஆழ்ந்து நோக்கிச் சமுதாய வரலாற்று நோக்கில் நாவல் படைக்கும் முயற்சிகள் ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்தே ஆரம்பித்தன இளங்கீரனின் தென்றலும் புயலும் (1956) செ. கணேசலிங்கனின் நீண்ட பயணம் 1965 என்பது இம்முயற்சிகட்கு தோற்றுவாய் செய்தன. நீண்ட பயணம் இவ்வகையில் காத்திரமான ஒரு முதல் முயற்சியாகும். இதனைத் தொடர்ந்து இவ்வகையிற் பல நாவல்கள் எழுதப்பட்டன. அவற்றில் ஒன்றே இப் பிரளயம். இவ்வாறு சமுதாய வரலாற்று நோக்கில் நாவல் படைக்கும் முயற்சியில் முக்கியமான இருவகை அணுகுமுறைகள் காணப்பட்டன. ஒருவகை இப்பிரச்சினையைப் பொதுவுடைமைக் கோட்பாட்டடிப்படையில் ஒரு வர்க்கப் போராட்ட வரலாறாக நோக்குதல்; இன்னொருவகை, இதனை சமுதாயத்தின் இயல்பான சிந்தனை மாற்றத்தின் வரலாறாக நோக்குதல். இவற்றில் முதல்வகை அணுகுமுறை செ. கணேசலிங்கன், கே. டானியல் என்போரால் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது அணுகுமுறையை மேற்கொண்டோரில் ஒருவர் செங்கை ஆழியான். அவரது இந்த நாவல் இவ்வணுகு முறைக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ள தரமானதொரு ஆக்கமாகும் தாழ்த்தப்பட்டோர் உயர்த்தப்பட்டோர் இருசாராரிடத்தும் நிகழும் சிந்தனை மாற்றங்கள் இயல்பாகவே சமுதாய மாற்றத்திற்கு இட்டுச் செல்லும் என்பதை இந்நாவல் உணர்த்தியமைகிறது.

சாதிப்பிரச்சினையைப் பொருளாகக் கொண்ட ஈழத்துத் தமிழ் நாவல்கள் பலவும் சலவைத் தொழிலாளர் சமூகத்தை ஏனைய தாழ்த்தப்பட்டோருடன் இணைத்தே நோக்கியுள்ளன. குறிப்பாக கே. டானியல் அவர்களின் நாவல்களில் பஞ்சமர் என்ற பொதுப் பிரிவில் இச் சமூகத்தினர் காட்டப்பட்டனர். சலவைத் தொழிலாளர் சமூகத்தை மட்டுமே தனிக்கவனத்தில் கொண்ட படைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வகையிலும் இந்நாவல் குறிப்பிடத்தக்க முக்கியத் துவமுடையதாகிறது.

செங்கை ஆழியானது படைப்பிலக்கிய வரலாற்றிலே குறிப்ப க நாவல் வரலாற்றிலே தொடக்கத்தில் அவர் கற்பனை கலந்து கதை கூறுபவராகவே இலக்கிய உலகிற்கு அறிமுகமானார். நந்திக்கடல், நாகநாட்டு இளவரசி என்பன இவ்வகைப் படைப்புகளே. அடுத்த கட்டத்தில் சமகால சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளையும் பிரச்சினைகளின் புறத் தோற்றங்களையும் அங்கத அணுகுமுறையிற் சுட்டிக் காட்ட முற்பட்டார். முற்றத்து ஒற்றைப்பனை, கொத்தியின் காதல் என்பன இவ்வகை முயற்சிகட்குப் பொருத்தமான சான்றுகளாவன. இந்தச் சமகால சமூகப் பார்வை ஆழம் பெறத் தொடங்கிய ஒரு காலகட்டத்தையே பிரளயம் என்ற இந் நாவல் புலப்படுத்தி நிற்கிறது. சமூகப் பிரச்சினைகளை அவற்றின் இயல்பான தளத்தில் அணுகவேண்டும். அவற்றை இயல்பு மாருது சித்தரிக்க வேண்டும். அச்சித்தரிப்பில் ஒரு தீர்வும் உணர்த்தப்பட வேண்டும் என்ற வகையில் அவரது இலக்கியக் கொள்கையில் ஏற்பட்ட பரிணமத்தை இந்நாவல் உணர்த்தியமைகின்றது. இக்கொள்கைப் பரிணமமே பின்னர் காட்டாறு என்ற இவரது முக்கிய படைப்புக்கான திசைகாட்டியாக அமைந்தது எனலாம். காட்டாறு நாவலில் இவர் சுரண்டும் வர்க்கத்திற்கெதிரான போர்க் குணமுள்ள எழுச்சியை முன்வைத்துள்ளார் என்பது இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியதாகும் இவ்வகையில் செங்கை ஆழியானது நாவல் வரலாற்றில் பிரளயம் ஒரு 'மைல்கல்' ஆகும்.

பதினைந்து ஆண்டுகளின் முன் பிரளயம் முதற்பதிப்பு வெளிவந்தபோது அதனை ஒரே மூச்சில் வாசித்து முடித்து அதில் வரும் மகாலிங்கம் என்ற பாத்திரத்தின் பண்பில் மனம் நெகிழ்ந்தேன். அப்பாத்திரப் படைப்புக்காக ஆசிரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைப் பாராட்டி கடிதம் எழுதியதாக நினைவு. பின்னர் ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் நூலில் அதனை 'நெஞ்சை விட்டகலாத பாத்திரம்' எனச் சுட்டியிருந்தேன் (ப. 86) தொடர்ந்து தனிமனித தியாகங்கள் மூலம் சமுதாய மாற்றத்தை எதிர்பார்க்க முடியுமா என்ற வினா எழுவதாகவும் சுட்டியிருந்தேன். இப்போ அணிந்துரைக்காக அந்நாவலை மீண்டும் வாசித்தபோது அது தனிமனித தியாகமல்ல ஒரு புதிய தலைமுறைச் சிந்தனை எழுச்சியின் பிரதிபலிப்பே என உணர்ந்தேன். இதைவிட என் முன்னைய அபிப்பிராயத்தில் மாற்றம் இல்லை.

இந்நாவல் பற்றிய முன்னைய கணிப்பில் (ஈ. த. நா. இல பக் 86) இதில் வரும் சலவைத்தொழிலாளியின் குடும்பம் அதற்கான இயல்பான தன்மைகளுடன் சித்தரிக்கப்படவில்லை எ றும் ஒரு தூரத்துப் பார்வையாகவே தெரிகிறது என்றும் சுட்டியிருந்தேன் ஆசிரியர் இவ்விரண்டாம் பதிப்புக்காக திருப்பி யெழுதிய வேளையில் அக்குறைகளைக் களைய முயன்றுள்ளமை தெரிகிறது. முக்கியமாக பாத்திரங்களின் உரையாடலில் பிரதேசப் பேச்சுவழக்கினைப் பயன்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தியுள்ளார். இது வரவேற்கத் தக்கது.

செங்கை ஆழியான் அவர்கள் ஒரு படைப்பாளி மட்டுமன்றிப் பொறுப்பு வாய்ந்த ஒரு அரச அலுவலரும் கூட. அத்துடன் அவர் யாழ் இலக்கிய வட்டத்தின் தலைவருமாவார் (1989-90) இலக்கிய ஆக்கங்கட்கு தரமதிப்பிட்டுத் பரிசுவழங்கும் இலக்கியப் பேரவைப் பொறுப்பாளராகவும் இருந்தார் ஈழத்துத் தமிழிலக்கிய உலகில் அவருக்கு ஒரு தனி இடம் உளது அதனை மேலும் அழுத்தமாகவும் விசாலமாகவும் அமைத்துக் கொள்ள அவர் தொடர்ந்து முயலவேண்டுமென வாழ்த்தி அமைகிறேன்.

யாழ். பல்கலைக் கழகம் — கலாநிதி நா. சுப்பிரமணியம்

10-10-1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இனியவர்,

எளிமையானவர்

பிறர் மனம்

நோகப் பேசத்

தெரியாதவர்.

எனது சின்னம்மான்

**அமரர் ஆ. வைத்திலிங்கம்**

அவர்களின்

நினைவாக

இந்நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

ஈழத்தில் தமிழ் மக்களிடையே பரவியுள்ள சமூக நோயான சாதிப்பாகுபாட்டின் இழிநிலைகளைச் சித்திரித்து 1925ம் ஆண்டில் இடைக்காடர் எழுதிய 'நீலகண்டன் ஒரு சாதி வேளாளன்' என்ற முதல் நாவலிலிருந்து 1989ம் ஆண்டில் சோமகாந்தன் எழுதிய 'விடிவெள்ளி பூத்தது' என்ற நாவல் வரை பல நாவல்கள் வெளிவந்துள்ளன. சொக்கன் (1963) செ. கணேசலிங்கன் (1965), செங்கை ஆழியான் (1971), கே. டானியல் (1972), தெணியான் (1973), செ. யோகநாதன் (1976), தி. ஞானசேகரன் (1979), சோமகாந்தன் [1989] ஆகிய புனைகதை ஆசிரியர்கள் சாதிப்பிரச்சினைகளின் பல்வேறு கொடூர வடிவங்களைத் தத்தமது நாவல்களில் சித்திரித்துள்ளனர்.

காலவரன் முறையில் நாவலிலக்கிய நவீன வடிவத்தில் முதன்முதல் சாதிப்பிரச்சினையைக் கருவாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் 'சீதா' ஆகும்; அதனை ஆக்கியவர் சொக்கன் ஆவார். இந்த நாவல் 1963 இல் 'விவேகி' யில் தொடராக வெளிவந்தது, பின்னர் 1974 இல் நூலுருப் பெற்றது. அவரை அடுத்து சாதி வேறுபாட்டினை எரியும் பிரச்சினையாகத் தமது நீண்ட பயணம், சடங்கு, போர்க் கோலம் முதலான நாவல்களில் செ. கணேசலிங்கன் சித்திரித்துள்ளார். அவரின் பின் சாதிப் பிரச்சினையை அடிநாதமாகக் கொண்டு ஆக்க இலக்கியம் படைத்தவர் செங்கை ஆழியான் ஆவார். 1971 இல் 'மயான பூமி' என்ற தலைப்பில், இந்தப் 'பிரளயம்' நாவல் 'சிரித்திரனில்' தொடர் நவீனமாக வெளிவந்தது. பின்னர் 1975 இல் வீரகேசரிப்பிரசுரமாக நூலுருப் பெற்றது; 1975 ஆம் ஆண்டுக்குரிய சாகித்யமண்டலப் பரிசினையும் சுவீகரித்துக் கொண்டது. அத்துடன் 1982 இல் இலங்கை வானொலியில் ஒரு மணி நேர நாடகமாக, பாலையில் மலரும் பூக்கள் என்ற தலைப்பில் ஒலிபரப்பாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிப்பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டு, நாவல்களை ஆக்கிய இலக்கியகர்த்தாக்களில் சொக்கன், செங்கை ஆழியான், தி. ஞானசேகரன், சோமகாந்தன் ஆகியோர் தவிர்ந்த ஏனைய நால்வரும், சாதிப் பாகுபாட்டினை வர்க்கச் சார்புடைய பிரச்சினை எனக் கருதினர்; தமக்கு இழைக் கப்படும் கொடுமைகளைத் தீர்ப்பதற்கும் தரமறுக் கப்படும் உரிமைகளைப் பொறுவதற்கும் கிளர்ந்தெ ழும் மக்கட் போராட்டமே தீர்வு எனக்கருதி ஆக்கவிலக் கியம் படைத்ததால், அவை இறுதியில் யதார்த்தப்பண்பி யிலிருந்து விலகியமைந்தன. ஆனால் ஏனையோர் சாதிப் பாகுபாட்டினைச் சமூக விமர்சன நோக்கில், நடைமுறைச் செயற்பாட்டினடியாக, யதார்த்தப்பண்புடன் நோக்கினர். அதனால் அவர்களது நாவல்கள் கருவிலும், சமூகச் செய்தி லும் வேறுபட்டமைந்தன.

சாதிப்பிரச்சினைகளை மையமாகக் கொண்டு நான் இரண்டு நாவல்கள் எழுதியுள்ளேன். ஒன்று உங்கள் கரங் களில் இருக்கும் பிரளயம்; மற்றையது 1987 இல் ஈழ நாட்டில் வெளிவந்த 'அக்கினி', இவற்றைவிட 'அக்கினிக் குஞ்சு' என்ற குறுநாவலிலும், சிரித்திரனில் 'வெளிவந்த 'நிலமகளைத்தேடி ' என்ற குறு நாவலிலும் சாதிப்பிரச் சினைக்கு நான் காட்டுந்தீர்வு வித்தியாசமானது பிரளயத் திலும் அக்கினியிலும் இச்சமூகத்திலிருந்து சாதிப் பாகு பாட்டினை நீக்குவதற்கு உடனடி மார்க்கமாக மூன்று சமூகச் செய்திகளை முன் வைத்துள்ளேன். என நம்புகின் றேன். சாதி ஏற்றத் தாழ்வினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கல்வி வசதி, செல்வவசதி, தொழில் மாற்ற வசதி ஆகிய மூன்றும் கிடைக்கில் சமூக அந்தஸ்து தாமே கிடைப்ப தாக இந்த நாவல்களில் அனுபவ பூர்வமாகச் சித்திரித் துள்ளேன். பிரளயம் நாவலின் கல்வியாலும் சாதியடிப் படையல்லாத தொழில் மாற்றத்தாலும் சமூகத்தில் ஏற்படும் மாற்றத்தைக் காட்டியுள்ளேன் அதனால் தான் 'பிரளயம்' முதலாம் பதிப்பின் முன்னுரையில் ஒரு சமூகத்தின் விழிப்பையும் மாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றத்தையும் இந்த நவீனம் பேசுகின்றது' எனக் குறிப்பிட்டுள்ளேன். நிலமகளைத்தேடி என்ற குறுநாவலில், யாழ்ப்பாண மண்ணில் ஒரு குழி நிலந்தானும் உரிமையில்லாத ஒருவன், சாதிப்பாகுபாட்டால் பாதிக்கப்பட்டவன், வன்னிக்கு வந்து தனக்கென நிலத்தையும் யாழ்ப்பாண மண்ணில் நிலத்தை வாங்கக்கூடிய பணத்தையும் தேடிக் கொள்கிருன். அக்கினியில் இரண்டு மூன்று ரூபாவிற்காகப் பத்துத் தென்னைமரங்களில் ஏறித் தேங்காய் பறித்த ஒருவன் வெளி நாடு சென்று இரண்டு மூன்று இலட்சங்களோடு வருகின்ருன். குடிசை மாளிகையாகிறது; அவனிடம் மற்றவர்கள் தொழில் பொறுகிருர்கள் கடன்பெறுகிருர்கள்; சகோதரர்கள் கல்வியில் உயர்கிருர்கள். இவற்ருல் அவர்களது சமூக அந்தஸ்து உயர்கிறது. எனவே, சாதிப் பாகுபாட்டால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகள் மற்றவர்களால் வழங்கப்படுவன வல்ல; அவர்களால் எடுக்கப்படுபவை. தொழில் செல்வம், கல்வி ஆகியவற்ருல் வஞ்சிக்கப்பட்ட மக்கள் அவற்றை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பது என் நாவலின் செய்திகள் என் இவ்வகை நாவல்களின் பாத்திரங்கள், சமூகத்தில் தம்மை உயர்த்திக் கொள்ளும் மார்க்கத்தை யதார்த்த பூர்வமாகக் காண்பிப்பார்கள்; கல்வி, செல்வம், தொழில் என்பனவற்றில் சமூகத்தில் உயர்ந்துள்ளவர்களைப் பார்த்து ஆசைப் பட்டு அவர்களைத் தம்மட்டத்திற்கு வீழ்த்தி மகிழ்வு காண விழைபவர்களல்லர்; கல்வி, செல்வம். தொழில் என்பனவற்றைப் பெற வழிகண்டு, அவர்கள் மட்டத்திற்குத்தம்மை உயர்த்த நினைப்பவர்கள். அதுதான் இன்றைய யதார்த்தம்; கண்கூடு.

சாதிப்பாகுபாட்டின் கொடூரப் பிரச்சனைகளுக்கு வர்க்கமுரண்பாடுகளே அடிப்படைக் காரணமாயினும், போர்க்குணங் கொண்ட தொழிலாள ஒன்றிணைப்பு, மக்கள் போராட்டமாக வெடிப்பதற்கு நமது நாட்டின் நவீன சோஷலிச ஜனநாயக அரசமைப்பில் உடனடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கமிருப்பதாகத் தெரியவில்லை; இலவசக் கல்விவசதி. இலவசப் பாடநூல் வசதி விரும்பிய தொழிலைச் செய்யும் உரிமை என்பன இந்த மண்ணில் சலருக்கும் கிட்டும் தடைப்படா நன்மைகளாகும். பெரிய இலக்கினை அடைவதற்குமுதல், தம் நிலைப்படிகளை திடமாக உருவாக்கிக் கொள்வதில் எவ்வித இடருமில்லை. அத்தகு திடமான நிலைப்படிகளை உருவாக்கும் மார்க்கங்களே, சாதிப்பாகுபாட்டினை நிலைக்களமாகக் கொண்ட என் நாவல்களின் சமூகச் செய்திகள் என்பேன்.

'பிரளயம்' நாவலிற்கு என் இனிய நண்பா கலாநிதி நா. சுப்பிரமணியம் தக்கதோர் முன்னுரை தந்துள்ளார் என் நாவல்களை மதிப்பீடு செய்து, நாடறிய உயர்த்தியவர்களில் அவருக்கு மிகுந்த பங்குள்ளது. அன்னாருக்கு இச்சந்தர்ப்பத்தில் என் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இரண்டாம் பதிப்பின் அட்டைக்குரிய நிழற்படத்தை அன்பர் திரு என். ராஜரத்தினம் அவர்கள் கலாபூர்வமாக எடுத்துத்தந்துள்ளார். நாடகக் கலைஞர், அண்ணர் இ. பற்குணம் அவர்கள் அந்த நிழற் படத்தில் ஒரு கதாபாத்திர மாகக்காட்சி தந்துள்ளார். அவருக்கும் நன்றி. நல்லமுறையில் அச்சிட்டு வழங்கிய கே. ரி. அச்சகத்தினருக்கும் நன்றி.

மேலதிக அரசாங்க அதிபர் (காணி)
கச்சேரி, கிளிநொச்சி.
10-11-1989

செங்கை ஆழியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரளயம்

## 1 ஓர் அரசகுமாரி

வைகறை இனிமையாக மலர, இருள் மெதுவாக விலகத் தொடங்கியது. மென் புகார் முற்றாக நீங்கி விட வில்லை. பாலை விறகு எரிந்து படர்ந்த புகைப் போர்வை போல பனிப்புகார் திரை விரிந்திருந்தது.

ராணி சோம்பலை முறித்தபடி முற்றத்தில் கால்களைப் பதித்தாள். இரவு பெய்த மழையினால் நீர் ஊறிப் பொருமி யிருந்த நிலம், சில்லென்ற குளிர்ச்சியை ஊட்டியது. அவ ளுக்கு அது வழக்கமான குளிர்ச்சிதான். பனியும், மழையும். அவளின் வைகறைத் துயில் களைப்பை நிறுத்திவிட முடி யாதவை. அவை அவளின் தோழிகள்.

முற்றத்தில் தாழ்வாரத்தோடு சடைத்து வளர்ந்திருந்த சீமைக்கிளுவை மரங்கள் எதிர்பாராது வீசிய காற்றினால் அலைப்புற்றன. ராணியால் உடனே ஒதுங்கிவிட முடியவில்லை பனித்துளிகளாகச் சிந்திய மழைத்துளிகள் அவள் உடலைத் தழுவிச் சிதறின.

''சாய் '' என்று வெறுப்போடு உடலை நெளித்துக் கொண்டாள். நிலத்தோடு சோரக் கட்டியிருந்த பாவாடை யை மெதுவாகத் தூக்கிப்பிடித்தபடி, முற்றத்தைக் கடந்து சென்று தலைவாசல் திண்ணையில் அமர்ந்து கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவாசலும் வீடும் ஒன்றையொன்று நோக்கியவாறு கட்டப்பட்டிருந்தன. இரண்டையும் இணைத்தபடி அடுக்களை அமைந்திருந்தது. இரண்டு அறைகள், நீளவாட்டில் ஒரு சாலைக் குறுக்கு வாட்டில் இன்னொருசாலை, ஆகியவற்றைக் கொண்ட பழைய காலத்து வீடு அது. ராணியின் பாட்டனாரால் கட்டப்பட்டு அவர் அரசோச்சிய அரண்மனை அது சுவர்கள் செம்மண்ணினால் எழுப்பப்பட்டிருந்த போதிலும் வெண் சுண்ணாம்பு பூச்சினால் அவை துப்புரவாக விளங்கின.

தலைவாசல் முற்றாகக் கல்லால் கட்டப்பட்டது. கூரை மட்டும் தென்னங் கீற்றுக்களால் வேயப்பட்டிருந்தது. அடுக்களை சிறியதொரு குடிசை .குனிந்துதான் அதன் உள்ளே நுழைய வேண்டும். சுவர்களாக பனைமட்டைகள் நெருக்கமாக வரியப்பட்டிருந்தன.

ராணி திண்ணையில் இருந்தவாறு தனது வீட்டை ஒரு கணம் நோட்டம் விட்டாள். அவள் பிறந்த சாதிக்குள் உண்மையிலேயே அவளின் குடும்பம் வசதியானதுதான் ராணியின் தகப்பன் வேலுப்பிள்ளை ஒரு சலவைத் தொழிலாளி.

நேர்மைக்குப் பயந்த மனிதர் அவர். ராணி தனது விழிகளைத் தலைவாசலுள் செலுத்தினாள்.

அடுக்கடுக்காக அழுக்குத் துணி மூட்டைகள். அவை சுமை சுமையாகக் கட்டப்பட்டு வெளுத்துச் சலவைசெய்வதற்காக ஒருமூலையில் இருந்தன. மறுமூலையில் ஸ்திரிக்கைப் பெட்டியின் சூட்டினால் எரிந்து கறுத்துவிட்ட நீள் மேசையொன்றில் சலவை செய்து மடித்த உடுப்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

எத்தனை வீட்டு அழுக்கு மூட்டைகளோ அவை?

சிவத்தக் கரை போட்ட சேலையால் கட்டப் பட்டிருக்கும் துணிமூட்டை யாருக்குச் சொந்தமானது என்று ராணிக்கு நன்கு தெரியும். அது விதானையார் வீட்டிற்குரியது. அந்த சிவத்த கரைச் சேலையைத்தான் விதானையார் மனைவி வீட்டிலிருக்கும் போது கட்டிக்கொள்வாள். ராணி கல்லூரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் போகும் வேளைகளில் பலதட்வைகள் இதைக் கண்டிருக்கிறாள். ஒரு சேலையைத்தான் மாற்றுது கட்டுகிறாளோ என்ற சந்தேகம் அவளுக்கு ஏற்படுவதுண்டு.

விதானையார் வண்ணார் பண்ணையிலே பணத்தால் கணிக்கத்தக்க ஒரு புள்ளி; 'அவருக்கு ஏன்தான் இவ்வளவு கஞ்சத்தனமோ?''

ராணிக்கு ஒரு சம்பவம் நினைவிற்கு வருகின்றது மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி அது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்ததாக இருக்கவேண்டும்.

அப்போது அவளிருக்கும் தலைவாசல் கல்கட்டிடமாக இல்லை மண் தலைவாசலாகவே விளங்கியது. வேலுப்பிள்ளை ஊரின் துணிகளை அந்தத் தலைவாசலுள் தான் வைப்பது வழக்கம் நிலம் மண்ணாக இருந்த படியால் பலகையினுல் அசவுகட்டி ஊத்தைச் சுமைகளை அதில்அடுக்கி வைப்பார்

அப்படி வைத்தும் ஒரு அழுக்குச் சுமை நிலத்தில் விழுந்ததால் அதன் ஒருபுறம் கறையானுக்கு இரையாகி விட்டது அதை முதன் முதலாகக் கண்டவள் ராணிதான். அவள் தந்தையை எழுப்பி வந்து காட்டினாள்.

வேலுப்பிள்ளை தலைமீதுகைவைத்துச் செயலற்றுக் குந்தி விட்டார்.

''என்ன ஐயா செய்வது? தற்செயலாக நடந்தது தானே?'' என்றாள் ராணி.

வேலுப்பிள்ளை மகளை ஏறிட்டுப் பார்த்தார். பின் கறையானுக்கு இரையாகிக் கிடக்கும் துணிமூட்டையைப் பார்த்தார்.

''உது விதானையார் வீட்டான் பிள்ளை. என்ரை இருபது வருஷத் தொழிலிலை உப்பிடி ஒருக்காலும் நிகழ்ந்ததில்லை நான் விதானையாருக்கு என்ன சொல்லப் போகிறனோ?'' என்று இடிந்து போனார்.

ராணி மூட்டையை அவிழ்த்துப் பார்த்தாள். மேலே சுற்றிக் கட்டியிருந்த படுக்கை விரிப்பும் ஒரு சேலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே கறையானுக்கு இரையாகிப் பொத்தல் விழுந்து கிடந்தன.

வேலுப்பிள்ளை பயந்தது போலவே சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. விதானையார் ஏறிப் பாய்ந்தார்.

''உது என்ன வேலுப்பிள்ளை, நீ செய்த வேலை? கவனக் குறைவாகக் கறையானுக்கோ, மாட்டுக்கோ, கொடுத் திட்டு உதுசரிவராது''என்று ஏசினார். விதானையாரின் மனைவி இன்னும் இரண்டு முழம் உயரப் பாய்ந்தாள்.

''உது கட்டாடி, கறையான் கிறையான் தின்னல்லை நீ மாத்துக் கொடுத்து என்ர அருமந்த சேலையை கெடுத்துப் போட்டாய்'' என்று சீறி விழுந்தாள்.

வேலுப்பிள்ளைக்குப் பொய் பேசத் தெரியாது. விதானை யார் மனைவி கூறிய அபாண்டமான பழியைக் கேட்டு விறைத்துப் போனார்.

''மாத்துக்கு நான் ஊர்ச்சீலையளைக் கொடுக்கிறதில்லை பிள்ளை அதுக்குப் புறம்பா வச்சிருக்கிறன் உண்மையாகக் கறையான் தான் திண்டிட்டது.''

விதானையார் குறுக்கிட்டார்

''அது எனக்குத் தெரியாது வேலுப்பிள்ளை உன்ரை கூலி யிலை பிடிச்சுக் கொண்டுதான் தருவன்.''

''வேலுப்பிள்ளை திலகூறமுடியாது'' அப்படியே செய் யுங்கோ'' என்றார். அன்று வேலுப்பிள்ளை வீடு திரும்பிய போது கூடவே நாகலிங்கத்தையும் கூட்டிவந்தார் நாக லிங்கம் ஒரு மேசன் அடுத்த இரு வாரங்களுள் மண் தலை வாசல் கல் கட்டிடமாக மாறிவிட்டது. ஆனால் அம்மாவின் ஆறுபவுண் சங்கிலி அடைவு கடைக்குப் போய் விட்டது,

ராணி திண்ணையை விட்டிறங்கி அடுக்களையை நோக்கி நடந்தாள்.

பொழுது நன்றாக விடிந்து விட்டது. இன்னும் ஒருவரும் படுக்கையைவிட்டு எழும்பவில்லை வழமையில் ஐயா நேரத் தோடு எழும்பிவிடுவார். அவர் கூட இன்னமும் எழவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றிரவு படுக்கும் போது வழக்கத்தை விடநேரமாகி விட்டது. கந்தையா வீட்டு உடுப்புகளுக்கு பெட்டி போட்டு முடிய நள்ளிரவாகி விட்டது. நாளை கடைக்காரக் கந்தையர் வீட்டு உடுப்புகள் கொடுத்தாக வேண்டும்.

இராசு வீட்டிலில்லை அவன் மனைவியோடு மாமா வீட்டிற்குப் போனவன் தான் ஒரு வாரமாகியும் திரும்பவில்லை அவன் வீட்டிலிருந்தால் ஐயாவிற்கு உதவி செய்வான் மள மளவென்று பெட்டி போட்டு உடுப்புகளை அடுக்கி விடுவான்

ராணி ஆச்சியை எழுப்பினுள்.

''என்ன பிள்ளை ?''

''விடிஞ்சு போச்சணை எழும்பு ''

ஆச்சி எழுந்து பாயிலே குந்திக் கொண்டாள். அவளுடைய கை தலையணைக்கு கீழே எதையோ தேடியது.

ராணிக்கு தெரியும் அது என்னவென்று.

'ஆ துவங்கிட்டா சுருட்டு குடிக்கக் கூடாதென் றெல்லே அண்ணை உனக்குச் சொன்னவர்!?

'அவன் கிடக்கிறுன் பிள்ளை. பழகின பழக்கத்தை விட முடியுமே? அது தவணம். நெருப்புப்பெட்டியை எடுத்துத் தந்திட்டுப் போ.' பிள்ளை

வேலுப்பிள்ளையும் எழுப்பி பாயைச் சுருட்டி வைத்தார்.

'பிள்ளை தம்பி எழும்பிவிட்டானே? போன முறையும் சோதனையில் குண்டு. இந்த முறையாவது பாஸ் பண்ணிஞன் எண்டால் '

''அவனும் எழும்பவில்லை ஐயா ..' என்று கூறியபடி ராணி அறைக்குள் போனுள்.

'தம்பி எழும்படா... ஏய் சுபத்திரா உனக்கு என்னடி இன்னும் நித்திரை எழும்பு.. கண்மணி நீயும் எழும்பி முகத்தைக் கழுவு. பாய் எங்கேயோ கிடக்குது இவள் வெறுந்தரையில் கிடக்கிறுள் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு அலுவல்களையெல்லாம் முடித்துக் கொண்டு ராணி கல்லூரிக்குப் புறப்பட்டபோது நேரம் எட்டரை யாகி விட்டது. அவள் புறப்படுவதைக் கண்டு ஆச்சி வழக் கம்போல் முணுமுணுத்தாள்.

"என்ன படிப்பு வேண்டிக்கிடக்கு வயதும் பதினெட் டாச்சு எங்கடை சாதியிலே எங்க வீட்டைப்போல வேறு எங்கேனும் படிக்கினமே?''

''நாங்கள் படிக்கிறதாலே உனக்கு என்னணை ஆச்சி கஷ்டம்'' என்று குறும்பாகக் கேட்டாள் ராணி.

''அதில் லைப்பிள்ளை குசினிக்கை முடங்கப்போற வண்ணத் திக்கும் படிப்பு தேவையோ? மூத்த பொம்பிளைப் பிள்ளை வீட்டோடு இருந்தால் எவ்வளவு உதவியாக இருக்கும்''

ராணியின் தம்பி கனகசிங்கம் ஆத்திரத்தோடு குறுக் கிட்டான்.

''விசர்கதை கதையாதை ஆச்சி. நீயே இப்படிச் சொன் னல் மற்றவை எப்படிச் சொல்லுவினம்? நாங்க எல்லாம் படிக்காமலே தோய்த்துச் திரிய வேண்டும் என்று நீயும் எண்ணுகிறாய். உது இனிச் சரிவராது அக்காவும் படிக்கிறது தான். கண்மணியும் படிக்கிறது தான். நானும் படிக்கிறது தான் சுபத்திரா மூதேசி தான் படியாமல் நெசவுக்குத் திரியுது.''

நெசவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த சுபத்திராவுக்கு கனகசிங்கம் கூறியது கேட்டது.

''இஞ்சை மூதேசி கீதேசி என்று பேசாதே நீ மட்டும் படிப்பிலே திறமோ? போன முறையும் எஸ். எஸ். ஸி. குண்டு. பேச வந்திட்டார்'' என்று கறுவிக் கொண்டாள் சுபத்திரா.

''இந்த முறை பாரடி, நான் 'சீ' யோட பாஸ்பண்ணிக் காட்டுறன் என்றான் கனகசிங்கம்.

''எங்கடை அண்ணர் இந்தமுறை கட்டாயம் பாஸ்பண் ணுவார்...'' என்றாள் கண்மணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனசிங்கத்திற்கு அவளும் தன்னைப் பகிடி பண்ணுவது போலப்பட்டது. நறுக்கென்று கண்மணியின் தலையில் குட்டி விட்டான்.

'ஐயோ பார் அக்கா ' என்று சிணுங்கினுள் கண்மணி ராணி தம்பியைக் கடிந்துவிட்டு கண்மணியை அணைத்துக் கொண்டாள்.

இவற்றையெல்லாம் பார்த்தபடி வீட்டுத் திண்ணையிலி குந்தியிருந்தார். வேலுப்பிள்ளை. குழந்தைகளின் சண்டையில் அவர் தலையிடுவது கிடையாது அமைதியாக இவற்றைப் பார்த்து ரசித்துக் கொள்வார்.

அடிதடி அளவிற்குப் பிள்ளைகளின் சண்டை போனது கிடையாது. போனலும் பார்த்துக் கொள்வதற்கு ராணி இருக்கிறுள்.

கனகசிங்கம் எப்போதுமே துடுக்கானவன். தங்கைக ளோடு அவன் ஓயாது சண்டை போடுவான் சுபத்திராவும் ஒரு வாயாடி தான். கண்மணி மட்டுமே அப்பாவி ஆனல் மூவருமே ராணிக்கு அடக்கம்

ராணி தலைமை வகிக்கப் பிறந்தவள்

குழந்தைகள் படித்து முன்னேறுவதைப் பற்றி வேலுப் பிள்ளைக்கு உள்ளூர மகிழ்ச்சி அவர் சாதிக்குள் அவரது குழந் தைகள் தான் படிக்கிறுர்கள்.

ராணி இம்முறை பல்கலைக்கழக தேர்வுப் பரீட்சை எடுக்கப் போகிறுள் நிச்சயமாக அவள் சித்தியடைவாள், என்பதில் அவருக்கு சந்தேகமேயில்லை அதன்பின் அவளைப் பல்கலைக்கழகம் அனுப்புவதா? இல்லையா? என்பதுதான் பிரச்சினை. இது ஒரு வினவாக அவருள் உருவெடுத்துள்ளது

பணத்தைப் பொறுத்த மட்டில் அவர் ஏழையுமல்ல பணக்காரருமல்ல. முதுசக் காணிகளும் சீதனக் காணிகளு அவரிடம் இருக்கின்றன. நேர்மையாகத் தனது தொழிலைச் செய்து முன்னேறியவர் அவர். தொழிலும் நன்கு நடக் கின்றது வருவாயும் பரவாயில்லை சுபத்திரா நெசவுக்கு பாய் உழைத்துப் பணம் சம்பாதிக்கிறுள். ஆனல்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை சின்னத்தம்பி வடிவில் அல்லவா இருக்கிறது.

சின்னத்தம்பி ராணிக்கு முறைப்பையன் மனைவி பொன்னுவின் அண்ணன் மகன். தமையனின் மகளைத் தா மூத்தவன் இராசுவிற்கு அவள் கட்டி வைத்திருக்கிறாள்.

சின்னத்தம்பி ராணிக்காக வளர்பவன். கல்யாணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான்.

தந்தையோடு சேர்ந்து தொழில் செய்யும் அவன் ராணி மேல் படிப்பு படிப்பதை விரும்புவானா?

இது விடயமாக வேலுப்பிள்ளை தனது மூளையைப் பல தடவைகள் குழப்பி இருக்கிறார். பதில் தான் கிடைக்கவில்லை

ராணியின் படிப்பை நிறுத்துவதா?

''என்ன படிப்பு வேண்டிக் கிடக்கு. உவையள் படிச்சு என்ன உத்தியோகம் பார்க்கப் போகினம் சும்மா மறிச்சுப்போட்டு வீட்டு அலுவலைப் பார்க்கச் சொல்லு...''

''உந்த வயதிலை நாங்க இரண்டு பிள்ளையளும் பெத்துப் போட்டம் என்ன படிப்பு வேண்டிக் கிடக்கு ''

உந்த விதானையார் கூட தன்ரை மோளை மறிச்சுப் போட்டார் நீ மட்டும் படிப்பிக்கிறாய்...?

இப்படி எத்தனையோ பேர்களது அபிப்பிராயங்களை வேலுப்பிள்ளை கேட்டிருக்கிறார்.

''நாங்க எல்லாரும் படிக்க வேணும். படிக்காததாலை தான் எங்கடைசாதி இப்படிக்கிடக்கு படிப்பாலை தானே எல்லாரும் முன்னேறி இருக்கினம் எங்கடை ரீச்சர் கூட இதைத்தான சொல்கிறு. உங்களைக் கும்பிட்டுக் கேட்கிறன் ஐயா எங்களை மறிச்சுப் போடாதையுங்கோ'' என்று ஒரு நாள் ராணி கூறினாள்.

'ராணி இந்தச் சாதியிலை பிறந்திருக்கக் கூடாது தப்பிப் போய் இதில் பிறந்துவிட்டாள்.' என அவர் எண்ணிக்கொள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அவளின் அடக்கம் அழகு இவை ஆருக்கு வரும் அவள் ஒரு அரசகுமாரி' என்று பலதடவைகள் அவர் மனம் கூறிக் கொள்ளும்.

"'ஐயா போயிட்டு வாறம் —ராணி''
'ஐயா போயிட்டு வாறம் —கண்மணி''
'ஐயா போயிட்டு வாறம்... —சுபத்திரா''
'ஐயா போயிட்டு வாறன் கனகசிங்கம்''
'எல்லாருக்கும் ஐயா தான் வேணும் ஆச்சி தேவையில்லை, என்று பொன்னு முணுமுணுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. சுபத்திராவின் துயர்

கல்லூரி முடிவதற்கு இன்னும் இரு பாடநேரங்கள் இருந்தன. புவியியல் கற்பிக்கின்ற ஆசிரியை அன்று கல்லூரிக்கு வராத படியினுல் அவர்கள் நூல்நிலையத்திக்கு வந்து படித்துக் கொண்டிருந்தார்கள் ராணியின் வகுப்பில் பன்னிரண்டு மாணவிகளே இருந்தனர் அந்தப் பன்னிரண்டு பேரும் நூல் நிலையத்தை அமளிப்படுத்த போதுமானதாக இருந்தது.

ஊர்க் கதைகளை ஒருவருக்கொருவர் சுவையாகப் பரிமாறிக் கொண்டனர்,

"ஒமப்பா அந்தப் பொடியன் ரஜனிக்கு கடிதம் கொடுக்கேக்கை அம்பிட்டுப் போச்சாம்'

"உவ மீனுன்மணியின்ரை விஷயம் எல்லா வீட்டுக் காரருக்கும் தெரிஞ்சு போச்சு "

'இந்தமுறை சரித்திரத்திற்கு என்ன கேள்வி போடு வாங்கள் போனமுறை வலுசுகமப்பா ...."

இந்த ரீதியில் அவர்கள் பேச்சுக்கள் அமைந்திருந்தன ராணி அதிகம் பேச்சில் கலந்து கொள்ளவில்லை அவர்கள் கூறுவதைக் கேட்காமலுமில்லை. பழையதொரு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

கல்லூரி மணி அடித்து ஓய்ந்தது. வேறு வகுப்பு மாணவிகள் குபபலாக நூல்நிலையத்தினுள் புகுந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தா மனோன்மணி வாறு" என்று கோகிலா கூறினாள். ராணி நிமிர்ந்து பார்த்தாள்.

மனோன்மணி அவர்களோடு கூடவே படித்தவள். கல்விப் பொதுத் தராதர வகுப்பில் இரு ஆண்டுகள் தவறி விட்டதால் பின்தங்கி விட்டாள்.

ராணிக்குப் பின்னால் இருந்த வாங்குகளில் அவர்கள் அமர்ந்தார்கள். ஏனோ ராணியைக் கண்டால் மனோன்மணிக்குப் பிடிக்காது.

இருவரும் இருப்பது வண்ணார்பண்ணை தான். அதுதான் காரணமோ தெரியவில்லை.

மனோன்மணி கடைக்காரக் கந்தையாவின் மகள்.

"ஓ எங்கடை அண்ணன் டொக்டருக்குப் படிக்கிறார் மற்ற அண்ணன் என்ஜினியருக்கு படிக்கிறார்" என்றாள்.

-மனோன்மணி யாருக்கோ கூறிக்கொண்டிருந்தாள். வீண் பெருமையிலே வாழ்கிற வகுப்பைச் சேர்ந்தவள் அவள். தனது குடும்பத்தை மாணவிகள் மத்தியில் உயர்த்திப் பேசுவதில்அவளுக்கு அலாதியான இன்பம் என்பது ராணிக்குத் தெரியும். ராணி மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்.

உண்மையிலே மனோன்மணியின் மூத்த தமையன் வாமதேவன் மூன்று தடவைகளாக பத்தாவது வகுப்பில் சித்தி பெறாது வீட்டிலே தங்கிநிற்பவன். அவளது இரண்டாவது தமையன் மகாலிங்கம்......

மகாலிங்கத்தைப் பற்றி எண்ணும் போது ராணிக்கு ஒரு மரியாதை உணர்வு பிறக்கிறது. அவன் ஓர் ஆசிரியன் தமையனின் அடிச்சுவட்டைப் பின்பற்றாதவன். ஏதோ கட்சி கூட்டம் என்று திரிபவன்.

மகாலிங்கத்தைப் பற்றி வண்ணார்பண்ணையில் உயர்வாகவே பேசிக்கொண்டார்கள்.

"ஊருக்கு உழைப்பவன்..."

உண்மைதான். அவன் முன்னின்று செய்த செயல்களை ராணி கேள்விப்பட்டிருக்கிறாள். 'ஆனால் மனோன்மணி அவர்களை டாக்டர் என்ஜினியர்களாக ஏன் உயர்த்தி விட்டாள்?,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவளோடு படிக்கின்ற மாணவிகள் பலர் இப்படித் தான் தற்பெருமையடித்துக் கொள்பவராக இருக்கின்றார்கள். தகப்பன்மார் சுருட்டுத் தொழிலாளர்களாக இருக்க ஆசிரியர், அப்போதிக்கரி, என்று கூறிக்கொள்பவர்களும் இருக்கின்றார்கள். உள்ள தொழிலை ஏன் மறைப்பான்? உண்மையைக் கூறுவதில் என்ன கேவலம் இருக்கின்றது?'' என்ற சிந்தனையில் மூழ்கியிருந்த ராணிக்கு, இருந்தாற் போல தனது பெயர் மனோன்மணியின் பேச்சில் அடிபடும் உணர்வு ஏற்பட்டது.

''உவ எங்கடை கட்டாடியின்ரை மோள் தான் ... அவவுக்கு பெரிய எண்ணம் '' என்று மனோன்மணி கூறுவது கேட்டது.

''இவள் வண்ணாத்தியோ?'' என்று வேறொரு மாணவி ஆச்சரியப்படுவதும் தெரிந்தது.

அவர்களது வார்த்தைகள் கொடிய வேல்களாக ராணியின் செவிகளுள் இறங்கின. தான் ஒரு வண்ணாத்தி என்பதற்காக அவள் ஒருபோதும் வெட்கப்படவில்லை ஆனால் பேசுபவர்கள் ஏன் அப்பெயரைக் கேவலமாக உச்சரிக்க வேண்டும்?

''நீ சரியான கள்ளன்'' என்ற வார்த்தைகள் அன்போடு கூறும் சொற்களாகவும் இருக்கலாம். கோபத்தோடு இகழ்ந்து கூறும் சொற்களாகவும் இருக்கலாம். பேசும் முறையில்தானே அர்த்தம் அமைகிறது.

ராணி இப்படியான வார்த்தைகளைப் பலதடவைகள் கேட்டவள் ஆனாலும் கேட்கும் போதெல்லாம் அவை அம்புகளாக அவள் நெஞ்சைத் துளைக்கின்றனவே?

மெதுவாகத் தலையைக் குனிந்து கொண்டாள், ராணி அவளின் கண்கள் கலங்கின.

''ராணி கவலைப்படாதையும்'' என்று ஆறுதல் கூறினாள் கோகிலா; ''இவையின்ரை கொட்டத்தையெல்லாம் அடக்கவேணும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி கண்களை யாருக்கும் தெரியாமல் துடைத்துக் கொண்டாள். அவளின் உள்மனம் கூக்குரலிட்டது.

''ஒரு வண்ணாத்தி கல்வியிலே உன்னிலும் உயர்ந்தவள் என்பதை நிரூபிக்கிறன் பார்''

ராணி பத்திரிகையை மூடிவைத்துவிட்டு எழுந்தாள். கல்லூரிவிட இன்னமும் வெகுநேரம் இருந்தது ராணிக்கு மண்டை சிதறிவிடும்போல வேதனைகள் தலையைக் குடைந்தன. தனது வகுப்பிற்குள் சென்று தனிமையாக அமர்ந்து கொண்டாள்.

அவளுக்குத் தனிமை தேவைப்பட்டது.

''கட்டாடியின் மோள்......'' உண்மைதான். அவள் கட்டாடி வேலுப்பிள்ளையின் மகள்தான். அதில் என்ன கேவலம் இருக்கிறது? அவருக்கு மற்றவர்களைப் போல கால் இல்லையா? கையில்லையா? உணர்வுதான் இல்லையா?

ஐயா நேர்மையாகத் தான் உழைக்கிருர். விதானை யார் போலக் கையெழுத்துப் போடக் கைலஞ்சம் வாங்குகிருரா? அல்லது மஞேன்மணியின் தகப்பன் போல கடையில் கள்ளச்சாராயம் விற்கிருரா?

''வண்ணான் ஊரை ஏமாற்றிப் பிழைக்கவில்லையே?' ராணி தனிமையில் குமுறினாள். நடந்து முடிந்து போன ஒரு சம்பவம் நினைவில் எழுந்தது சுபத்திராவின் படிப்பு நின்ற கதை அது.

சுபத்திரா படிப்பில் சுமாரானவள். குடும்பத்திலேயே மிகவும் அமைதியானவள் அவள் தான். கனகசிங்கத்தோடு சண்டைபிடித்தாலும் அன்பும், ஆதரவுமானவள். ஆச்சியின் மறு அச்சு அவள்.

எல்லாரையும் போல அவளும் கல்லூரிக்குப் போய் வந்தாள். அப்போது எட்டாம் வகுப்பு படித்துக்கொண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்தாள். ஒரு நாள் காலை பாடசாலைக்குப் போகும் நேரம் வந்தும் சுபத்திரா ஆயத்தமாகவில்லை.

''ஏன் சுபத்திரா இன்று பள்ளிக்கு வெளிக்கிடவில்லையா' என்று ராணி கேட்டாள்.

''நான் வரவில்லை அக்கா'' என்றாள் சுபத்திரா.

''ஏன் தொடமாட்டியா..?''

''இல்லை, இனிமேல் நான் பள்ளிக்கு வரமாட்டன்... எனக்கு படிக்க விருப்பமில்லை.''

சுபத்திராவின் பதில் ராணியைத் திகைக்க வைத்தது. ''ஏனடி ?'' ராணியால் தொடர்ந்து பேச முடியவில்லை.

''அவள் விரும்பாட்டி நிக்கட்டுமே... எனக்கும் உதவியாக இருக்கும்..'' என்றாள் ஆச்சி.

ராணி ஆச்சியைச் சுட்டெரித்துவிடுபவள் போலப் பார்த்தாள்.

''நீங்கள் சும்மா இருங்கோ ஏன் சுபத்திரா போக மாட்டன் என்கிறாய் ?''

சுபத்திரா தமக்கையை ஏறிட்டுப்பார்த்தாள். அவளின் விழிகள் கலங்கி இருந்தன.

''வகுப்பில் பகிடி பண்ணுகிறார்கள், அக்கா..''

''என்னெண்டு .?''

ஒரு கணம் அந்த வீடு நிசப்தத்தில் ஆழ்ந்தது.

''ஆர் பகிடி பண்ணுகினம்..?'' என்று கோபத்தோடு கேட்டான் கனகசிங்கம்.

ராணி தம்பியைப் பார்த்த பார்வையில் அவன் மௌனியாகிவிட்டான்.

''இஞ்சை பார் சுபத்திரா, அவையள் பகிடிபண்ணினால் நமக்கென்ன? நாம் படிச்சு முன்னேறவேணும்... நான் சொல்வதைக் கேள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் சுபத்திரா தொடர்ந்து கல்லூரிக்குப் போகச் சம்மதிக்கவில்லை.

அன்று இரவு ராணி படுக்கையில் படுத்திருந்து ஏதோ நூலொன்றைப் படித்துக்கொண்டிக்கும் போது, சுபத்திரா பக்கத்தில் வந்து அமர்ந்தாள்.

''என் மீது கோபமா அக்கா. ''

ராணி புத்தகத்தை மூடிவைத்து விட்டு தங்கையைப் பார்த்தாள்.

''சீச்சி ,இல்லை ,ஏன்?''

சுபத்திரா தமக்கையைப் பார்த்தபடி பேசாது இருந்தாள். சற்றுநேர மௌனத்தின் பின்-

''பகிடி பண்ணினதிற்காக மட்டும் படிப்பை விட்டன் என்று நினைக்கிறியா, அக்கா?'' என்றாள் சுபத்திரா.

வியப்போடு ராணி விழித்தாள்.

''நேற்றுப் பின்னேரம் நான் தனியாக வந்தன் இல்லையா? அம்மன் கோவிலடியிலை வரும் போது அந்த வாமதேவன் -- அதுதான் மனோன்மணியின்ரை தமையன் குறுக்கே சைக்கிளில் வந்து ஏதோ காகிதத்தை என்னிடம் நீட்டினான். நான் ஓடிவந்திட்டன், ..எனக்குப் பயமாக இருக்கிறது அக்கா

ராணி வியப்போடும் துயரத்தோடும் தங்கையைப் பார்த்தாள்.

''இதுக்குப் பயந்தா நீ படிப்பைப் பாழாக்கிக்கொண்டாய் ?''

''எனக்கு என்னமோ பயமாக இருக்கு அக்கா, இனிமேல் நான் வெளியிலை போகவே மாட்டன்' சுபத்திராவின் வார்த்தைகளில் உறுதியிருந்தது

மௌனமாக சில பொழுது தங்கையையே உற்றுப் பார்த்தாள் ராணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபத்திரா உண்மையில் வயதிற்கு மிஞ்சிய வளர்ச்சியைக் கொண்டிருந்தாள். மருட்சி என்றும் ஆட்சி செலுத்தும் சற்றுப் பெரிய அவள் விழிகள் கலங்கி நிற்க. தாமரை இலைத் தண்ணீராகக் கண்ணீர் முத்துக்கள் தேங்கி நிற்பதும் அழகாகத்தான் இருந்தது. சுபத்திரா பொது நிறந்தான் அடக்கயாகப் பின்னிவிட்டும் கூட அவளின் கூந்தல் இடுப்புக்கிழ் இறங்கித்தான் நிற்கும். சுபத்திரா நடந்து செல்லும் போது பின்னல் நடைக்கு இணங்க அசைவுறும். அது ஒன்றே அவள் அழகிற்குப் போதும்.

"என்ன அக்கா சிந்தனை"?

"சுபத்திரா" என அன்போடு அழைத்த ராணி "உலகிலே இப்படியெல்லாம் நடக்கிறதுதான். நாங்கள் மிகவும் கவனமாக இருந்தால் சரி. இதுக்காக நீ படிப்பை நிறுத்திக்கொண்டது சரியாக இல்லை என்றுள்"

சுபத்திரா தமக்கையின் பாயில் படுத்துக்கொண்டாள்.

"அதுமட்டுமல்ல அக்கா"

"ஏன் இன்னமும் இருக்கா?"

"எங்க வகுப்பிலே நான்தான் மிகப்பெரிய பெண்ணாக இருக்கிறன் அதுவும் வெட்கமாக இருக்கு..."

ராணியால் பின் எதுவுமே பேசமுடியவில்லை. பல காரணங்களுக்காகத்தான் சுபத்திரா தனது படிப்பைக் குழப்பிக்கொண்டாள் என்பதை அவள் புரிந்துகொண்டாள்

நினைவில் இவையெல்லாம் எழுந்து நின்றன. கேலிக்குப்பயந்து சுபத்திரா கல்வியை விட்டிருக்கலாம்- ஆனால், ராணி அவ்வாறு செய்யமாட்டாள். அவள் கோழையல்ல.

வகுப்பில் எவ்வளவு நேரம் அப்படிச் சிந்தனைவயப்பட்டிருந்தாளென்று ராணிக்கே தெரியாது.

"பள்ளிவிட்டிட்டுது எழும்பு ராணி" என்று கோகிலா அவளை உலுப்பியபோதுதான அவள் உணர்வு பெற்றுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியும், அவள் வீடும் நெருங்கியேயிருந்தன, வீதியின் இரண்டு முடக்குத்திரும்பினால் அவளுடைய வீடுதா. பிறவுன் றோட்டில் திரும்பி வடபுறமாக நடந்துகொண்டிருந்த வேளையிலும் வகுப்பறைச் சம்பவமே நிலை தாகி நின்றது. கூடவே பல மாணவிகள் வந்தாலும் எவருடனும் பேசாது ராணி வந்துகொண்டிருந்தாள்.

இந்த றோட்டில்தான் சுபத்திரா வேலை செய்கின்ற நெசவாலை இருக்கிறது.

நெசவாலையைக் கடந்தால், ராணி வீட்டுக்குத்திரும்புகிற முடக்கு வரும், அந்த முடக்கில்தான் நரியன்குண்டு என்ற சிறிய குளம் இருக்கிறது. வண்ணார் பண்ணை சலவை தொழிலாளருக்குரிய குண்டு அது. மழை காலத்தில் இக்குண்டில் நீர் நிரம்பி வழியும். அதன் கரையில் பெரிய தம்பிரானுக்கு சிறிய கோயில் அமைந்திருக்கிறது. கோயிலின் முன்னால் பெரியதொரு அரசமரம். அக்கோயில் அவள் சாதியினருடையதுதான் வேலுப்பிள்ளை சிறிய கொட்டிலாக இருந்த அந்தக் கோயிலை பணம் சேர்த்து கல்கட்டிடமாக்கினார்.

நரியன் குண்டிற்கு மேற்கே வீதிக்கு அப்பால் அமைந்திருந்த கடை கந்தையாவிற்குச் சொந்தமானது. அந்த இடத்தில் ஒரே ஒரு கடையாக இருந்தமையால் வியாபரம் நன்கு நடந்தது.

கந்தையர் பெரும்பாலும் கடையில் இருப்பது இடையாது. அவருடைய மனைவிதான் கடையை நடத்தி வருகிறார் படிப்பறிவில்லாத தாழ்ந்த வகுப்பினர் வாழும் பகுதியாக அது இருந்ததால் அவருடைய மனைவி வைத்ததுதான விலை

நரியன் குண்டில் இப்போது வெள்ளம் நிரம்பி நிற்கிறது. பலர் தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள் ராணியின் தந்தையும் சிலசமயம் அங்கே நிற்கலாம்.

ராணியின் கால்கள் பெரிய தம்பிரான் கோயில் முன் சற்றுத் தரித்து நின்றன. மனதிற்குள் கடவுளை, வேண்டிக்கொண்டு மீண்டும் நடந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்து விசாலித்த அரசமரத்தின் கீழ் கரத்தை வண்டிகள் பல நின்றிருந்தன, சலவைத் துணிகளைச் சுமந்து வந்த வண்டிகள் அவை. ராணி வீட்டு வண்டி அங்கு இல்லையே? நின்றிருந்தால் அந்தச் சிவத்தக் காளை ராணியைக் கண்டதும் துள்ளிக் குதிக்குமே.

ராணிக்குந் பக்கத்தில் வந்த கோகிலா வலப்புறந் திரும்பி யாரையோ பார்த்துச் சிரிப்பது போல உணர்வு தட்டியது. அவள் திரும்பிப்பார்த்தாள்.

கந்தையரின் கடைவாசலில் வாமதேவன் நின்றிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. சுபத்திராக் குஞ்சு

வேப்பம் பூக்கள் தூறிய மழையினுல் பிடிப்பிழந்து முற்றமெல்லாம் சிதறிக் கிடந்தன. வெண்மலர்ப் பரவல் தூய வெண் கம்பளத்தினை நினைவுபடுத்தியது. கம் என்ற வாசனை எழுந்து. திண்ணையில் உட்கார்ந்து பாடசாலைப் புத்தகம் ஒன்றினைப் படித்துக் கொண்டிருந்த ராணியின் மூக்கில் ஏறியது.

"பாழாப்போன மழை. உள்ள பூவெல்லாத்தையும் கொட்டிப் போட்டுதே" என்று சாபம் வைத்தாள் பொன்னு. வடகம் போட வேண்டிய பூக்களையெல்லாம் மழை சிதைத்து விட்டதே என்ற கவலை அவளுக்கு.

மனைவி போடும் சாபம் தலைவாசலில் சலவை செய்த உடுப்புகளுக்குத் தண்ணீர் தெளித்து மடித்துக் கொண்டிருந்த வேலுப்பிள்ளைக்குக் கேட்டது.

"நீ மழையைத் திட்டுகிருய், மழை பெய்ததாலேதான் நரியன் குண்டுக்கை கொஞ்சம் தண்ணியாவது நிக்குது" என்ருர் அவர்.

"ஆச்சிக்கு ஒன்றுமே கூடாது" என்ருள் ராணி. வேலுப்பிள்ளை பெரிதாகச் சிரித்தார். பொன்னு அடுக்களைக்குள் போய் விட்டாள்.

மழை பெய்து ஓய்ந்திருந்ததால் வீசிய காற்றில் தண்மை காணப்பட்டது. அது ராணியின் உடலைக் குளிரச் செய்தது. ஆனுல், வேலுப்பிள்ளையின் உடம்பு முழுவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்வையில் குளித்திருந்தது. ஸ்திரிப் பெட்டியின் உஷ்மல் கரி வெக்கை அவரை வியர்வையால் குளிப்பாட்டி இருந்தது.

தளர்ச்சி அடையாத தேகம் அவருடையது என்றாலும் வயதானவர்தானே? தந்தையைப் பார்க்க ராணிக்குப் பரிதாபமாக இருந்தது. மெதுவாக எழுந்து தலைவாசலுக்குப் போனாள்.

''ஐயா, இராசு அண்ணை எப்ப வரப் போகிறாராம். நீங்க ஒருவர் எவ்வளவு எண்டு வேலை செய்கிறது..?''

வேலுப்பிள்ளை பெட்டியை வளையத்தில் வைத்துவிட்டு வியர்வையைத் துடைத்துக்கொண்டு, மகளைப்பார்த்தார்.

''எப்ப வாறானோ தெரியாது பிள்ளை. கலியாணமான பிறகு எங்களுக்கெல்லாம் உதவுவான் என்று எதிர்ப்பார்க்க முடியுமா ?''

பொன்னு இவற்றையெல்லாம் கேட்டபடி, தேநீரோடு வந்தாள்.

''அவன் ஏன் இனி எங்களுக்கு உழைச்சுத் தாறான் ? அவனுடைய மனுஷிக்குப் புறம்பாக இருக்கத்தான் விருப்பம் ? நீங்க இனிக் கனகசிங்களை மறியுங்கோ. அவன் படிச்சது காணும்..''

ராணி குறுக்கிட்டாள்.

''நாங்க படிக்கிறது எப்பவும் ஆச்சிக்கு கண்ணுக்கை குத்துது' என்றாள் ஆத்திரத்தோடு.

''ஏதோ படிச்சுக் கிழிக்கத்தானே போறியள்..''

''இருந்து பார், ஆச்சி''

''படிக்கத்தான் வேணும். நாங்க படிக்காததாலை தான் இப்படி இருக்கிறம்'' என்றார் வேலுப்பிள்ளை....

ஸ்திரிக்கை பெட்டிக்குள் தணல் வெடித்துச் சிதறியது

ராணி துணிகளை எடுத்து அடுக்கி வைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆச்சி தேத்தண்ணி ரெடியா ?" என்ற குரலோடு படலை பொத்தென்று விடும் சத்தம் கேட்டது. கனக சிங்கம் சைக்கிளை வேலியோடு சாத்திவிட்டு வேகமாக வந்தான்.

"துரை வாறூர்... வரேக்கையே அவருக்குத் தேத் தண்ணி ஆயத்தமாக இருக்க வேணும் ... இல்லாட்டில் கந்தோருக்குப் பிந்திப் போய் விடும்." பொன்னு கறு விக்கொண்டாள். வேலுப்பிள்ளை மகனை அழைத்தார்.

"தம்பி"

"என்ன ஐயா...?"

"இஞ்சை வா."

கனகசிங்கம் தந்தையின் முன்வந்து நின்றான்.

"கொஞ்சத்தைப் பெட்டி போட்டு வைக்கட்டாம் என்றாள் ராணி.

"ஐயையோ நான் கூட்டிடுவன் அக்கா" என்று மறுத்தான் கனகசிங்கம். "நான் வெளியிலை அவசரமாகப் போகவேணும் அக்கா நாளைக்குச் செய்யிறன்.."

வேலுப்பிள்ளைக்கு மகனைக் கண்டிக்கத் தெரியாது. "சரி போ" என்றார். கனகசிங்கத்தின் முகம் மலர்ந்தது.

"அக்கா தங்கச்சி எங்கே?"

"யார் கண்மணியா...?"

"இல்லை சுபத்திரா"

அறைக்குள் ஏதோ தைத்துக் கொண்டிருந்த சுபத் திரா, "என?" என்றாள்.

அக்காவின் கேள்விக்குப் பதில் கூறாது கனகசிங்கம் அறைக்குள் பாய்ந்தான்.

"சுபத்திராக்குஞ்சு"

வேலுப்பிள்ளை கேள்விக் குறியோடு ராணியைப் பார்த்தார்.

"என்ன இண்டைக்கு துரை உருக்கமாகக் கூப்பிட்டுக் கொண்டு போறூர்...?"

ராணி சிரித்தாள்.

"அவனுக்கு ஏதோ காசு தேவைப் படுகுது போல இருக்கு அதுதான் தங்கச்சியை வளைக்கப்போகிறுன்..."

அறைக்குள் அண்ணனும் தங்கையும் ஏதோ வாக்கு வாதப்பட்டனர்

"உண்மையா இல்லை, அண்ணை இவ்வளவு தான் என்னிட்டை இருக்கு"

"பொய் சொல்லாதையடி இப்ப ஏதோ என்ரை கூடாத காலம் கையிலை காசில்லை, உன்னிடம் இருக்குது உழைக்கேக்கை தராமலா விடப்போறன் ?"

"சத்தியமா இல்லை "

கனகசிங்கம் வெளியே வந்து தலைவாசல் திண்ணையில் அமர்ந்தான்.

"என்ன சகோதரங்கள், ஒரு சதத்திற்குக் கூடப் பிரயோசனமில்லை " என்றுர் கனகசிங்கம்.

"ஏன்ரா?"

"ஒரே ஒரு ரூபா தராத சகோதரங்கள் தானே .?,

"உனக்கேன் காசு, படத்திற்குப் போறியா?"

கனகசிங்கம் குதித்து எழுந்தான்.

"தாக்கா.. தா .. என்ரை அக்கா இருக்கணும், நான் இருக்கணும்"

"உண்மையா இப்ப காசில்லைப்பிள்ளை" என்றுர் வேலுப்பிள்ளை முன்னெச்சரிக்கையாக.

"பாவம் ஐயா கொடுத்து விடுங்க " என்றுள் ராணி இரங்கியபடி.

வேலுப்பிள்ளை சிரித்துவிட்டு ஒரு ஐம்பது சதத்தை எடுத்துக் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை முடிந்தபின் ஓய்வாக வாங்கிலொன்றில் அமர்ந்திருந்தார் வேலுப்பிள்ளை. பொன்னுவும் வெற்றிலையைக் குதப்பியபடி திண்ணையில் அமர்ந்திருந்தாள். ராணியும் தாய்க்கு அருகில் இருந்தாள்.

"உனக்கு எப்ப சோதனை பிள்ளை?" என்று பொன்னு மகளைக் கேட்டாள்.

"என்ன அதிசயம்...கோச்சி இன்றைக்குப் படிப்பைப் பற்றிக் கேட்கிறு?" என்றூர் வேலுப்பிள்ளை.

"சும்மா அவ வெளிப்படைக்குப் பேசினுலும் நாங்க படிக்கிறதைப் பற்றி ஆச்சிக்கு உள்ளுக்குச் சந்தோஷம் தான் ஐயா. இன்னும் ஆறு மாதம் இருக்கு ஆச்சி..."

'இஞ்ச பாருங்கோ ஆறு மாசத்திலை சோதனை முடிஞ்சதும் சின்னத்தம்பியிட்டை இவளைப் பிடிச்சுக் கொடுத்திட வேணும் ஊருக்கில்லை எல்லாம் கல்யாணமா நடக்குது என்ரை வீட்டை இரண்டு குமர் இருந்தும் ஒன்றும் நடக்க வில்லை." என்று கவலைப்பட்டாள் பொன்னு

ராணி கலகலவென நகைத்தாள். அந்தச் சிரிப்பொலி பொன்னு ஆச்சியைக் கோபப்பட வைத்தது.

"என்னடி சிரிப்பு ?"

"ஒன்றுமில்லை ஆச்சி, இப்ப சோதனை முடிந்ததும் நான் யூனிவசிற்றிக்குப் போகப் போறன். அங்கே மூன்று அல்லது நான்கு வருஷம் படித்துப் பட்டம் பெற்ற பின்பு தான் மற்றதெல்லாம்..."

"கேட்டீங்களா இவள் சொல்லுறதை...அண்ணர் துடியாய்த் துடிக்கிறூர், எப்பஇவளை மருமகளாகக் கொண்டு போறதென்று. . வேறு எத்தனையோ இடங்களிலை சின்னத் தம்பிக்குச் சம்பந்தம் பேசி வந்தும் இவளுக்காகத் தட்டிக் கழித்து விட்டார் . சின்னத்தம்பி என்ன லேசுப்பட்டவனு எழுபது வீட்டிற்குத் துணி அடிக்கிறுன்.."

வேலுப்பிள்ளை மனைவியைப் பார்த்தார். அவள் ஒரு தாய்க்குரிய ஏக்கத்தோடுதான் பேசினுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதோ பார் பொன்னு, படிப்பின் பெருமையை இன்றைக்கு உணர்ந்திருக்கிறன் விதானையார் தம்பிப் பிள்ளையை பார் நான் துணி எடுக்கப் போற வேளையெல்லாம் என்ன சொல்லுறார் ''ஏன் வேலுப்பிள்ளை பிள்ளையளையெல்லாம் படிபபிக்கிறாய் சும்மா மறிச்சுப் போட்டுத் தொழிலைக் கற்றுக் கொடுக்கிறது தானே படிச்சாப்போல ஏதோ கிடைக்கப் போகிறதே என்று சொல்லுறார். நம்மீது இரக்கப்பட்டா சொல்லுறார் என்று நினைக்கிறாய்? இல்லைப் பொன்னு எங்கை என்ரை பிள்ளையள் படிச்சு நல்லா வந்திட்டா, தங்களிலும் பார்க்க உயர்ந்திடும் என்று பயப்படுகிறார். என்னோடேயே எல்லாம் போகட்டும் என்ரை பிள்ளையள் வெள்ள நீருக்கை நின்று விறைக்க வேண்டாம். உச்சி வெயிலுக்கை நின்று காய வேண்டாம் ''

பொன்னு ஆச்சி கணவனையே பார்த்தாள் ராணிக்குத் தந்தையின் குணம் தெரியும் வெகு அமைதியானவர் உணர்ச்சி வசப்பட்டு பேசத் தொடங்கினால் கொட்டி விடுவார்.

''எனக்கு அப்ப பதினெட்டு வயசுதான் இருக்கும். அப்புவிற்கு உதவியாகத் தொழில் செய்தன் அப்பு உடையார் குடும்பத்தினருக்கு மட்டும் தான் துணி அடிப்பார் எனக்கு நல்ல நினைவு ஒரு நாள் அப்புவும் நானும் உடையாருக்குச் சலவை செய்த துணிகளைக் கொண்டு போனோம். எங்களைக் கண்டதும் உடையார் கொதித்தார்

''நேற்றுக் கோயிலடியிலை நான் வண்டில்லை வாறன் நீ தோள் சால்வையை எடுக்காது நிற்கிறாய் அவ்வளவுக்கு வந்திட்டுதா? ' ''கவனிக்கவில்லை ஐயா நீ [illegible] த்தை'' என்றார் அப்பு. ''கவனிக்கவில்லையோ, எல்லாம் திமிர் வண்ணாரப் பிள்ளையருக்கு இப்ப வந்திருக்கிற திமிர் இது'' என்றபடி, அப்புவை மார்பில் பிடித்து தள்ளிவிட்டார். அப்பு விழுந்து போனார் நான் பயத்தால் எதுவும் செய்யாது நின்றன் அடிமைச் சேவகம் செய்து இரத்தத்தோடு ஊறிவிட்ட தாழ்வை வெல்ல என்னால் முடியவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"படிக்காத நாய்களுக்கு என்ன தெரியும்" என்ருள் உடையார் மனேவி. அதற்குப் பிறகும் அப்பு, அவர்களுக்குக் கை கட்டிச் சேவகம் செய்தார். ஆனல் அந்த நிகழ்ச்சியை என்னல் மறக்கவே முடியவில்லை. மாற்றியமைக்கவும் முடியவில்லை அப்பு செய்ததை இப்ப நானும் செய்கிறன்.. "

ஐயாவிற்கு இவ்வளவு பேசத் தெரியுமா என்று வியப்படைந்தாள் ராணி. அதனுல் தான் எங்களையெல்லாம் படி படியென்று ஊக்கப்படுத்திஞரோ?

கண்மணி கண் கலங்கியபடி வந்தாள். ஒன்பது வயதுச் சிறுமி அவள். ஓடி விளையாடியதனுல் உடம்பும், உடையும் அழுக்குப் பட்டிருந்தன.

"என்ன கண்மணி?"

"ஒன்றுமில்லை அக்கா. நாங்க விளையாடிக் கொண்டிருந்தம். எங்களோடை முன் வீட்டு வாத்தியார் வீட்டிலை இருக்குமே ஒரு சின்ன பிள்ளை சுசி அதுவும் விளையாடிச்சுது...அப்ப அந்த வாத்தியார் வீட்டு மாமி வந்து சுசிக்கு அடிச்சுப்போட்டு "வண்ணாரப் பெட்டையளோடை உனக்கென்ன விளையாட்டு" என்று இழுத்துக்கொண்டு போருு..."

ராணிக்குத் திக்கென்றது: "ஆண்டவா ஏன் தான் இப்படிக் குழந்தைகளின் பிஞ்சு மனசில் நஞ்சை விதைக்கிருயோ" என்று கலங்கினுள்.

"அவள் சொன்னல், உனக்கென்ன, கண்மணி,"

"வண்ணாரப் பெட்டையளோடை விளையாடக் கூடாதா?"

கண்மணி கேட்ட கேள்வி, வேலுப்பிள்ளையை உருக்கி விட்டது. சிறிது சினமும் அடைந்தார். என்றுலும் அடக்கிக் கொண்டார்.

"பார்த்தியா பொன்னு" என்று மனேவிக்கு ஏதோ ஓர் உண்மையைச் சுட்டிக் காட்டினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ போய் முகத்தைக் கழுவு" என்று கண்மணியை அனுப்பிவிட்டு, ராணி வீட்டிற்குள் போனாள். ஏனோ ராணிக்கு அப்போது தனிமை தேவைப்பட்டது. பல சம்ப வங்கள் அவள் மனதில் எழுந்து தலைவிரித்தாடின. வகுப் பிலே ஒரு மனோன்மணி, இங்கு ஒரு வாத்தியார் மனைவி

"நாங்கள் அவ்வளவு கேவலமானவர்களா?" என்ற கேள்வி ராணியின் நெஞ்சைப் பிளந்தது.

அறைக்குள் நுழைந்தபோது, அங்கு மேசை முன் சுபத்திரா இருந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். தான் வரும் சத்தம் கேட்டு அவள் அவசரமாக எழுதி யதை மறைத்ததுபோல ராணிக்குப் பட்டது.

"என்ன சுபத்திரா, எழுதுகிறாய் ?"

"ஒன்றுமில்லையே"

சுபத்திராவின் கள்ளமில்லாத விழிகளில் எங்கிருந்து தான் இவ்வளவு கள்ளம் புகுந்தது? உடலிலும் ஏதோ மெல்லிய ஒரு நடுக்கம் இருப்பதேன்?

ராணி வேறெதுவும் பேசாது வெளியே வந்து விட் டாள். கல்லூரிப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்க முயற்சித்தாலும் அவளால் புலன்களை அடக்கிப் படிக்க முடியவில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. ஆருந் திருவிழா

வண்ணார்பண்ணை கிராமமுமல்லாத, நகரமுமல்லாத ஒரு பகுதி. பழமையைப் பேணுபவர்களும், புதுமையை நாடுபவர்களும் வாழ்ந்து வரும் அழகிய ஊர். பலசாதி மக்கள் வண்ணார்பண்ணையில் வாழ்ந்தனர். பழையதொரு மானிய முறைக் கிராமத்திற்கு இருக்க வேண்டிய தொழிற் பிரிவுகள், சாதிப் பிரிவுகள் அங்கு அமைந்திருந்தன. வண்ணார்பண்ணையின் மையப்பகுதியாகக் கலட்டி என்ற பகுதி விளங்கியது.

அது குடிசனம் செறிந்த பகுதி:

வேளாளர், வண்ணார், தட்டார், நளவர் எனும் நான்கு தொழிற் பிரிவினர் இங்கே வாழ்ந்து வந்தனர். வேளாளர் குடி ஆங்கில அரசாட்சி நிலவிய வேளையில் கல்வியில் சிறப்பினைப் பெற்றதால் பொருள் வளம் மிக்கவர்களாக விளங்கினர். உத்தியோகங்களும், வியாபாரங்களும் இவர்களுக்குச் சொந்தமாக இருந்தன. பணச்சிறப்பு இயல்பாகவே ஏனைய பிரிவினைத் தமக்குக் கீழ்ப்படிய வைத்து விட்டது.

இத்தகைய ஒரு சூழலில்தான் கலட்டியின் திலகமாக அம்மன் கோயில் கொண்டிருந்தாள் சிறியதொரு கோயில். ஆனால், மாரியம்மனின் மகிமை வண்ணார்பண்ணை முழுவதும் பரவியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி மாதத்தில் அம்மன் கோயில் திருவிழா ஆரம்பமாகிவிடும். பத்து நாட்கள் பகலும் இரவும் திருவிழாக்கள் கோலாகலமாக நடக்கும். மேளக் கச்சேரிகளும், சதிர்க் கச்சேரிகளும், கதாப் பிரசங்கங்களுமாகத் திருவிழா விடிய விடிய நடக்கும்.

ஒவ்வொரு நாள் திருவிழாவையும் கலட்டியின் ஒவ்வொரு பிரிவினர் செய்து வந்தார்கள். வேளாளருளக்குள்ளேயே சில பிரிவுகள் இருந்தன. குடக்கர் பகுதி, செம்பட்டடார் பகுதி, பொலிசார் பகுதி, ஓவிசியர் பகுதி எனச் சில பிரிவுகள். இவர்கள் ஒவ்வொரு திருவிழாவைப் போட்டியாகச் செய்தனர். அதுவட்டுமன்றி, தண்டிகைத் திருவிழா நளவர் என்ற குடிமக்கள் செய்யும் விழாவாகவும், குதிரை வாகனத் திருவிழா வண்ணார் என்ற குடிமக்கள் செய்யும் விழாவாகவும் இருந்தது.

அன்று ஆறும் திருவிழா, குதிரை வாகனத் திருவிழா வேலுப்பிள்ளை தான் அத் திருவிழாவினைத் தன் குடி மக்களுக்காகப் பொறுப்பேற்றுச் செய்வது வழக்கம். அவ்வாண்டு அவர் சாதியினருள் திருவிழாவிற்காகச் சேர்த்த ப்ணம் வழக்கத்திலும் அதிகமாக இருந்ததால் எவ்வாண்டும் இல்லாத அளவு பெரிதாக விழா இருந்தது

ஆறு சிகரங்கள் அமைத்து, குலை வாழைகளை ஏராளமாகக் கட்டி அலங்கரித்திருந்தன ! மாலைகளால் கோயில் உட்புறம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

திருவிழாவி ்கு மல்லாகத்தில் இருந்து பொன்னு ஆச்சியின் அண்ணர் குடும்பமும் வந்திருந்தது. சின்னத்தம்பியும் வந்திருந்தான்.

சின்னத்தம்பி வீட்டில் இருந்த வேளைகளில் ராணி அவன் முன் வராது ஒதுங்கியே இருந்து கொண்டாள்.

''அக்கா அத்தான், நல்லாக் கொழு கொழுவென்று இருக்கின்றார்'' என்றான் கனகசிங்கம் ராணியிடம்.

''சும்மா போடா. வேறு வேலையில்லை...'' என்று எரிந்து விழுந்தாள் ராணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் அக்கா ஒளிச்சு இருக்கிருய்?'' என்று கேலி செய்தாள் சுபத்திரா: ''பார் அக்கா அந்தக் கண்மணியை வெட்கமேயில்லாமல் அத்தானுடன் இருந்து சளசளவென்று கதைத்துக் கொண்டிருக்கிருள்.''

தலைவாசலில் இருந்து கொண்டு மாமா அவளை அடிக்கொருதரம் அழைத்தார். ராணியும் சிரமத்தோடு போய்த்தான் வந்தாள். அவ்வேளைகளில் தற்செயலாகச் சின்னத்தம்பியை அவள் பார்த்தாள்.

அவன் தலைகுனிந்தபடி இருந்தான். மச்சான் எப்போதுமே வெக்கறைதான். முன்பு கண்டதிலும் இப்போது அவன் வளர்ந்தும், பெருத்தும் இருந்தான் மெல்லிய கோடுகளாக அரும்பு மீசையும் வைத்திருந்தான்.

''எப்ப மச்சான், கலியாணத்தை வைச்சுக் கொள்ளலாம்'' என்று சிவக்கொழுந்து, வேலுப்பிள்ளையைக் கேட்டார்.

சின்னத்தம்பிக்கு அங்கு அமர்ந்திருப்பது சிரமமாக இருந்தது.

''நான் கோயில்வரை போயிட்டு வாறன் கண்மணி வாறியா..?'' என்று எழுந்தான் கண்மணியும் கூடவே புறப்பட்டாள்

''கண்மணி சட்டையை மாற்றிக் கொண்டு போ...' என்று குரல் கொடுத்தாள் ராணி.

அவர்கள் போன பிறகு சிவக்கொழுந்தும் வேலுப்பிள்ளையும் எவ்வளவோ பேசிக் கொண்டார்கள். வேலுப்பிள்ளை கூறிய காரணங்கள் மாமாவிற்கு ஏற்றதாகப் படவில்லை.

''என்ன படிப்பு மச்சான். எங்கட குடும்பத்திலை இல்லாத படிப்பு... சின்னத்தம்பிக்கு மனைவியாகக் கணக்கு ஏன் படிப்பான் படிச்சது போதும், நிற்பாட்டு இந்த ஆவணியில் நாள் வைப்பம் ''

வேலுப்பிள்ளை ஒத்துக் கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆம்பிளையள் எண்டாலும் பரவாயில்லை பொம்பிளையள் படிச்சு என்ன செய்யிறது?'' என்றாள் வேலுப்பிள்ளையின் மருமகள். இராசுவின் மனைவி.

எல்லாரும் கலியாணத்தை வற்புறுத்தியும் வேலுப்பிள்ளை ஒத்துக்கொள்ளவில்லை.

''என் பிள்ளையள் படிக்கத்தான் வேணும். நாங்க படியாது கெட்டது போதும். ''

சிவக்கொழுந்து சற்று கோபத்தோடு கேட்டார்:

''அப்ப இறுதியாக என்ன சொல்லிறாய் ?''

''படிப்பு முடிஞ்ச பிறகு கலியாணம் நிச்சயம்.''

''அதுவரை என் மகனைக் காத்திருக்கச் சொல்கிறாயா மச்சான்? அது நடவாது உன்ரை மோள் பெரியபடிப்புப் படித்த பிறகு பெரிய உத்தியோகம்தான் தேவை...என்ரை மகன் தோதுப்படாது...அப்ப நான் வேறிடத்திலை பார்க்கப் போறன்...''

''என்ன அண்ணை, ராணி சின்னத்தம்பிக் கென்றே வளர்பவள் '' என்று பொன்னு ஆச்சி குறுக்கிட்டாள்.

'நான் என்ன செய்கிறது, தங்கச்சி. உன்ரை புருஷன் எங்களை விடப் படிப்புத் தான் பெரிசு என்று நிற்கிறானே? ..

வேலுப்பிள்ளை ஏதோ கூற வாய் திறந்தார். அப்போது கனகசிங்கம் வேகமாக ஓடி வந்தான்.

''இராசு அண்ணைக்கு கோயிலிலை வைத்து அடிச்சுப் போட்டான்கள். விதானையாற்றைமோன் தங்கராசா அடிச்சுப் போட்டான்'' என்று கத்தினான்.

இதைக்கேட்டதும் அந்த வீடே ஒருகணம் குய்யோ என்று வீரிட்டது.

கோயில் இரண்டு பட்டு நின்றது. ஒருபுறம் விதானையாரும் அவர் பகுதியினரும்: மற்றையபுறம் வேலுப்பிள்ளையும் அவர் பகுதியினரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் பக்கத்தில் பழையவர்களும், புதியவர்களும் கொதித்தனர். வேலுப்பிள்ளையின் பக்கத்தில் புதியவர்கள் மட்டுமே கொதித்தனர். பழையவர்கள் அடங்கி நின்றனர்.

''வேலுப்பிள்ளை பார்த்தாயா உன்ரை மகனின் செய்கையை தலைப்பா கட்டிக்கொண்டு கோயிலுக்குள் தோறணம் கட்டுறான்... நாங்களெல்லாம் இருக்கிறம் என்று ஒரு மரியாதை இல்லாமல் ..''

''கட்டாடி உன்ரை மோன் என்றதுக்காக உதோட விடுகிறன் '' என்றான் தங்கராசா.

''என்றாலும் ஐயா உப்படிச் செய்யக்கூடாது .'' என்றார் சிவக்கொழுந்து. மருமகனுக்கு விழுந்த அடி அவருக்குப் பட்டதுபோல இருந்தது.

''அவனை வெட்டிப் போடாமல் உப்படி விட்டது பிழைதான் '' என்றார் விதானையார்.

அப்போது இராசு வீரிட்டான்.

''வெட்டிப்போட எங்களை கை புளியங்காய் ஆயாது ..''

''எங்களை இனி ஒருக்கால் தொட்டுப் பாருங்கோ பார்ப்பம்'' என்று கத்தினான் சின்னத்தம்பி.

வேலுப்பிள்ளை நிலைமையைப் புரிந்து கொண்டார். வாக்குவாதம் முற்றி இரண்டு பிரிவினரும் மோதிக் கொள்ளும் அளவிற்கு வருவதை உணர்ந்தார். ஒருபுறம் உயர் சாதி எனபோர் மறுபுறம் எளிய சாதி என்போர்: ஒரு புறம் பணம்: மறுபுறம் வறுமை: ஒருபுறம் கல்வி, மறுபுறம் அறியாமையா?

ஏன் இந்த நிலமை வந்தது?

''சும்மா இருங்கடா..'' என்று கத்தி தனது பக்க இளைஞர்களை அடக்கினார் வேலுப்பிள்ளை.

''சரி விதானையார் நடந்தது போகட்டும் .. சமாதானமாகப் போவோம்... திருவிழாவிற்கு சோடிக்கவிடுங்க...'' என்றார் வேலுப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் கேலியாகச் சிரித்தார்.

''இனி உங்களுக்கு ஒரு திருவிழாவோ ? அது சரி வராது ''

''இதுஎங்கடை கோயில் '' என்றான் தங்கராசா 'இனி மேல் திருவிழாவுமில்லை கோதாரியுமில்லை . கழட்டுங்கடா சிகரங்களை எல்லாம்''

வேலுப்பிள்ளையின் பக்கத்தில் மீண்டும் கொதிப்பு ஏற்பட்டது, வேலுப்பிள்ளை அதை அடக்கினார்.

''உது சரியில்லாத வேலை ஐயா '' என்றார் சிவக்கொழுந்து, விதானையாரை நோக்கியவாறு.

''உவர் ஆர் சரியும், சரியில்லாததும் சொல்வதற்கு ?' உங்களுக்கு இனித் திருவிழா இல்லை'' என்று விதானையார் தீர்க்கமாகக் கூறினார். கோயில் வீதியில் சனம் நிறைந்து விட்டது.

''வண்ணாரப்பிள்ளையளுக்கு வந்த கெவரைப் பார் ' என்றான் தங்கராசா. அவன் அவ்வாறு கூறி முடிந்ததும் தான் தாமதம், அவன்மீது வீரிட்டபடி புலியெனப் பாய்ந்தான் சின்னத்தம்பி. வேலுப்பிள்ளை அவனைக் கட்டிப் பிடிக்காது இருந்தால், கோயில் போர்களமாக மாறி இருக்கு.

விதானையார் நிலைமையைப் புரிந்து கொண்டார் தங்கராசா வெறிகொண்டு நின்றான்.

''இந்த வருஷம் மட்டும் செய்யுங்கோ இனி ஒருக்காலும் உங்களுக்குத் திருவிழா இல்லை'' என்றார் விதானையார்

''உதெல்லாம் இனிமேல் சரிவராது விதானையார்'' என்று புதியதொரு குரல் எழுந்தது. அது விதானையார் பகுதியிலிருந்துதான் வந்தது.

''ஆரம்பத்தில் இருந்து நானும் பார்க்கிறன், நீங்கள் பிழையையும் செய்து போட்டு நாட்டாண்மையும் வேறு காட்டிறியள்... கோயில் ஊர்ச்சொத்து...அதிலை திருவிழாச் செய்யிறதை மறிக்க நீங்க யார்?'' என்றபடி ஓர் இளைஞன் முன்வந்தான்,

அந்த இளைஞன்மேல் எல்லா விழிகளும் மொய்த்தன

''டேய்! மகாலிங்கம் '' என்று கத்தினான் தங்கராசா ,நீ அவ்வளவிற்கு வந்திட்டியா, எளிய பொறுக்கிகளுக்காக வாதாட வந்திட்டே...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாதாடினால் என்ன தங்கராசா? பிழையைப் பிழை என்று சொல்லத்தான் எனக்குத் தெரியும். உனக்குச் சரியான சாதித் தடிப்பு. மறைஞ்சு போகிற ஒள்றை நீ கட்டிக் காக்க விரும்புகிறாய் சாதியும் மண்ணாங்கட்டியும் மனிசத் தன்மை இல்லாத செயல்..'' என்றான் மகாலிங்கம்.

வேலுப்பிள்ளைக்கு தங்களுக்காக வாதாடும் அவனை நன்கு தெரியும். கடைக்கார கந்தையாவின் இளைய மகன் அவன் குணத்தையும் அவருக்குத் தெரியும். சின்னத்தம்பி மிகுந்த உயர்வோடு மகாலிங்கத்தைப் பார்த்தான்.

ஏதோ ஒரு வகை மாற்றம் நிகழப் போகிறது என்ற உணர்வு அவனுக்குத் தலை தூக்கியது.

தங்கராசா வெறியனானான் ஒருபுறம் கிடைத்த அவமானத்தின் தோல்வி. மகாலிங்கத்தின் வார்த்தைகளால் மேலும் சுய அறிவை இழக்க வைத்தது. தன்பலம்கொண்ட மட்டும் ஓங்கி மகாலிங்கத்தின் முகத்தில் குத்தினான்.

''பறையா...''

மகாலிங்கம் நிலைகுலைந்து வீழ்ந்தான். மூக்கு உடைந்து இரத்தம் ஒழுகியது. மகாலிங்கம் மெதுவாக எழுந்து நின்றான்.

தங்கராசாவின் வெறி அடங்கவில்லை. கோபத்தோடு மகாலிங்கத்தை நோக்கிச் சென்றான்.

எல்லாம் கணப்பொழுதில் நிகழ்ந்தன.

தங்கராசாவிற்குக் குறுக்கே ஒருவன் பாய்ந்து அவனை மார்பில் கைவைத்து ஓங்கிப் பின்னால் தள்ளி விட்டான். தங்கராசாவும், விதானையாரும் ஒருங்கே நிலத்தில் சாய்ந்தனர்.

''ஆராவது என்னுடைய தம்பியிலை தொட்டால் தொட்டவனின் குடலை எடுத்து மாலையாய்ப் போடுவன்'' என்றபடி வாமதேவன் பொங்கும் சினத்தோடு நின்றிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 இப்பிறவியில் நீயன்றி.........

மாலை என்றும் போலக் கவிந்தது. முற்றத்து வேப்பம் பூ வாசம் இன்னமும் முற்றாக நீங்கிவிடவில்லை. விளக்கின் முன்னால் படிக்க அமர்ந்த ராணியால் எதுவும் படிக்கவே முடியவில்லை. கண்கள் அச்செழுத்துகளில் அர்த்த மின்றிச் சென்றபோதிலும் அவள் மனம் கிரகிக்கும் நிலையில் இல்லை

மூன்று நாட்களுக்கு முன் அம்மன் கோயில் திருவிழாவில் நடந்து முடிந்துபோன சம்பவங்கள் தாம் ஓயாது மனவெளியில் எழுந்தன, தங்கள் பகுதியினருக்குள்ளேயே சண்டை வந்துவிட்டதால் ஒரு விதப்போலிச் சமாதானத்தோடு ஆறாந் திருவிழா முடிவுற்றது.

விதானையார் பகுதிக்கும் கந்தையர் பகுதிக்கும் ஏற்பட்ட பிணக்கு வேலுப்பிள்ளைப் பகுதியினருக்குச் சாதகமாக அமைந்தது உண்மைதான்.

ராணிக்கு ஏனோ தங்கள் அவ்விடத்துத் தோல்வியுற்றுவிட்டது போன்ற உணர்வே தலைதூக்கு நின்றது. சின்னத்தம்பி மச்சான் தங்கராசாவின் மீது போபத்தோடு பாய்ந்த போது ஐயா ஏன் தடுத்தார் என்று எண்ணினாள். அதே வேளை சின்னத்தம்பி மச்சானுக்கு ஏதாவது நிகழ்ந்துவிட்டால் என்று அப்பேதையுள்ளம் கலங்கவும் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாலிங்கம் ஏன் எங்களுக்காக குறுக்கிட்டான்? நமது நியாயமான சமூக நிலையை மற்றவர் பறிக்கின்ற உண்மையை உணர்ந்ததினாலா? எங்களுக்காக வாதாட அவர்களுக்கும் இடையில் ஒருவன் இருக்கின்றான்.

கனசிங்கம் கோயிலில் நடந்த அன்றைய நிகழ்ச்சியை வர்ணித்த விதம் ராணிக்கு நினைவு வந்தது.

''பார் அக்கா . சினிமாகூடத் தோத்துப் போகும் தங்கராசா முஷ்டியை மடக்கி மகாலிங்கத்தின் மூஞ்சியில் விட்டான் ஒரு குத்து பாத்துக் கொண்டிருந்த எனக்கே அடிவயிற்றைக் கலக்கியது... மகாலிங்கத்திற்கு இரத்தம் கொள கொள என்று கொட்டிச்சு .. திரும்பிப் பார்த்தால் தங்கராசாவும், விதானையாரும் அலமலக்காக விழுந்து கிடக்கினம் ஆரும் தம்பியிலை தொட்டால் குடலை எடுத்து மாலையாகப் போடுவன் என்று உறுமியபடி வாமதேவன் நின்றான். அதைக்கேட்டு தங்கராசா நடுங்கிப் போச்சு... மகாலிங்கத்துக்கு உடனே வேட்டியைக் கிழிச்சு இரத்தம் துடைச்சுவிட்டது நம்மடை அத்தான் தான் ''

முன்பின் பழக்கமில்லாத அந்த மகாலிங்கத்திற்காக ராணி இரக்கப்பட்டாள். மகாலிங்கத்தைச் சில பொழுது கண்டதாக ஒரு நினைவு. கல்லூரிக்குப் போகும் போது கந்தையரின் கடையில் கண்டிருக்கலாம். மனோன்மணியின் அண்ணன் தங்களுக்காக நியாயம் பேசுகிறான். ஆனால், மனோன்மணி.. ?

குப்பையில்தான் குண்டுமணி கிடக்கும் என்பது சரிதான்.

இரத்தம் கொளகொளவென்று கொட்டிச்சாமே?

''அந்தப் பொடியன் உண்மையில் நீதியானவன் தான் எனக்கு முன்னமே அவன்ரை குணத்தைத் தெரியும் என்னோடு கதைக்கும்போது கூட 'நீர்' என்றுதான் கதைப்பான் .. தங்கராசா அடிச்சும் எதிர்த்து அடிக்காது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்தபடி நிற்பதற்கு எவ்வளவு மனத்திடம் வேண்டும்'' என்று வேலுப்பிள்ளை மகாலிங்கத்தைப் புழுகித் தள்ளினார்

எல்லோரும் அப்படித்தான் கூறினார்கள்.

''பாதிக்கப்படாத அவருக்கு இருந்த ரோசம் பாதிக்கப்பட்ட எங்களுக்குக் கூடக் கிடையாது...'' என்று சின்னத்தம்பி மச்சானும் கூறினார். ராணியின் சிந்தனைகள் விரிந்தன. அவள் உள்ளத்தில் ஒரு நினைவு மலர்ந்தது.

மாகலிங்கத்திற்கு ஒரு தடவை நன்றி சொல்லத்தான் வேண்டும்.

அவள் தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

இரு நாட்களுக்கு முன்—

எல்லாரும் அடுக்களைக்குள் இருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள் அவள் தலைவாசல் திண்ணையில் அமர்ந்து படித்துக்கொண்டிருந்தாள்.

''ராணி...'' என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டு அவள் எழுந்து நின்றாள்.

சின்னத்தம்பி சற்று விலகி எங்கோ பார்த்தபடி, தலைவாசல் தூணைப் பற்றியபடி நின்றிருந்தான், அவளுக்கு ஏனோ மெதுவாக உடல் நடுங்கியது. அவளை அழைத்தது மச்சானா? அவள் மௌனமாக நின்றிருந்தாள்.

சின்னத்தம்பியும் வெகு நேரம் பேசாது நின்றிருந்தான். நீண்ட மௌனத்தின் பின் சின்னதம்பி அவளைப் பார்க்காமலே கேட்டான்.

''என்னை உனக்குப் பிடிக்கவில்லையா ...?''

அவள் இத்தகைய கேள்வியை ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. சின்னத்தம்பிக்குத்தான் அவளை திருமணம் செய்து கொடுப்பது என்றெல்லாம் வீட்டில் பேச்சுக்கள் அடிபட்ட போதுகூட, அவள் அதனைப்பற்றி அவ்வளவு அக்கறைப் பட்டது கிடையாது. அவளுக்குத் திருமணத்தைப் பற்றிய நினைவே எழுந்தது கிடையாது. அவள் சின்னத்தம்பியை மனத்திலிருத்தி நீண்டவேளை சிந்தித்துப் பார்த்தது கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் என்பது ஏதோ பெரியோர்கள் தாங்களாகப் பார்த்து நிர்ணயிக்கும் பந்தம் என்று அவள் நினைத்திருந்தாள்.

அவள் மனம் படிப்பு என்ற ஒன்றினல்தான் நிலைத்திருந்தது படிப்பு ஒன்றில்தான் உயர முடியும் என்று திடமாக நம்பினுள். அவளின் ஆசிரியை மிஸிஸ் துரையப்பா கூட இதைத்தான் பலதடவைகள் அவளுக்கு வற்புறுத்தியுள்ளார்.

"ராணி சமூக உயர்வு தாழ்வு கல்வியால்தான் இனிமேல் நிர்ணயிக்கப்படும்... தொழில்களால் அல்ல. வெள்ளாளர்கள் படித்துவிட்டு மீன்பிடி இலாகாவில் சேர்ந்து ரோலேஸ்களில் சென்று மீன் பிடிக்கவில்லையா?"

அவளுக்கு முதலில் தேவை கல்வி. அதை ஓரளவு கரைகண்ட பிறகு அவள் பெற்ருேர் கூறுகிற எவரையும் மணம் முடிக்கத் தயார்.

இக்சுட்டான ஒரு கேள்வியைச் சின்னத்தம்பி அவளிடம் கேட்டபோது அவள் பதில் கூற முடியாது திகைத்துப்போய் நின்ருள்.

சின்னத்தம்பி மச்சான் மிகவும் நல்லவன். குழந்தை மனம் கொண்டவன். ஒருவருக்கும் தீங்கு செய்ய நினையாதவன். அவன் மனதில் இப்படியொரு கேள்வி ஏன் உருவாகியது?

சின்னத்தம்பியே தொடர்ந்து பேசினுன்:

"எனக்கு அழகாகப் பேசத்தெரியாது .. நீ என்னை விரும்புகிருயோ இல்லையோ எனக்குத் தெரியாது ஆனல் ஒன்று மட்டும் உண்மை நான் உன்னை விரும்புகிறன்"

இதனைக் கூறிவிட்டுச் சின்னத்தம்பி வெகுநேரம் தலைகுனிந்து நின்றிருந்தமை அவளுக்கு நினைவு வந்தது.

அந்த ஒரு கணம் ராணி அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஏதாவது கூறித்தான் ஆகவேண்டும்

"எனக்குத் தொடர்ந்து படிக்க வேணும் போலிருக்கிறது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவையும் அவள் எப்படிப் பேசிமுடித்தாள் என்பதை இப்போது நினைக்க அதிசயமாக இருக்கிறது. அவளுடைய அந்தப் பதில் சின்னத்தம்பியின் கேள்விக்குரிய பதிலாக இருந்ததா?

''நான் உன்னை விரும்புகிறன்'' என்று அவன் கூறிய போது ஒருவகை இனிய மலர்ச்சி அவள் உள்ளத்தில் தோன்றியது போன்றதொரு பிரமை ஏற்படத்தான் செய்தது.

''படிப்பின் பெருமையை நான் உணர்கிறன்... காலங் கடந்த உணர்வுதான்...'' என்று கூறிவிட்டு மெதுவாகத் திரும்பி அவளைப் பார்த்தபடி அவன் பேசினன்: ''நீ படிக்கப் படிக்க என்னை விட்டுத் தூர விலகிப் போவது போன்ற உணர்வு எனக்கு ஏற்படுகுது. இது தாழ்வு மனப்பான்மையால் ஏற்பட்ட உணர்வாக இருக்கலாம்.''

அவள் பேசாது தலை குனிந்து நின்முள்.

''இண்டைக்கு நான் வீட்டுக்குப் போகிறேன் இப் பிறவியில் எனக்கு உன்னைவிட வேறொருத்தி மனைவியாக அமையமாட்டாள் என்றுதான் நினைக்கிறன்...''

மச்சாளு இவ்வளவு அழகாகப் பேசினன்? இவ்வளவு அர்த்தத்தோடு பேசினன்?

அவன் போய்விட்டான்.

அவன் ஏதோ பொய உண்மைகளையெல்லாம் தன் தலையில் கொட்டிவிட்டுப் போய்விட்டதுபோல அவள் உணர்ந்தாள்.

அவளால் படிக்கவே முடியவில்லை. மெதுவாக எழுந்து அறைக்குள் போனுள்.

சுபத்திராவோடு ஏதாவது கதைத்தாலே நன்றுக இருக்கும் போலிருந்தது.

சுபத்திரா ஏதோ பலமாக யோசித்தபடி பாயில் படுத்திருந்தாள். சுபத்திராவின் போக்கில் என்றுமில்லாத திடீர் மாற்றம் ஏற்பட்டதை ராணி கவனித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாள். எப்போதுமே கலகலப்பாக எல்லாருடனும் பேசியும், சண்டை பிடித்தும் திரியும் சுபத்திரா எப்படி இவ்வாறு மாறினாள்?

கனகசிங்கம் வலியச் சென்று அவளைச் சண்டைக்கு இழுத்தாலும் முன்போலச் சுபத்திரா வாக்குவாதப் படுவது கிடையாது.

"சுபத்திரா இப்ப நல்ல குஞ்சு" என்று கனகசிங்கமே அபிப்பிராயம் தெரிவித்தான்

ஆனால், ராணிக்கு அவள் மாற்றத்திற்குரிய காரணம் பிடிபடவேயில்லை வயது ஏற ஏற இயல்பாகவே பெண்களுக்கு அடக்கம் வந்து விடுமா?

பல வேளைகளில் எதையோ பறிகொடுத்தது போலச் சுபத்திரா சிந்தித்தபடி அமர்ந்திருப்பதை ராணி அவதானித்திருக்கிறாள். அவள் சிலநாட்களாகத் தங்களோடு சேராது தனித்துப் போய் எதையாவது செய்துகொண்டிருப்பதையும் அவள் கண்டிருக்கிறாள்.

"ஏன் இந்த மாற்றம்?"

ராணி தனக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்ததைக்கூட சுபத்திரா உணரவில்லை. சிறிது நேரத்தின் பின்பே ராணியை அவள் கண்டாள்.

"அக்கா " என்ற சுபத்திராவின் அழைப்பில் ஏதோ ஒன்று குறைவது போன்றிருந்தது. தங்கையை ஏற இறங்கப் பார்த்தாள் ராணி தங்கையின் முகத்தில் ஏதோ ஒரு வகை ஏக்கம் படர்ந்திருந்தது

"சுபத்திரா இது என்ன...?"

"என்னக்கா...?"

"நீ கொஞ்ச நாளா ஏதோ ஒரு மாதிரி இருக்கிறியே...?"

"இல்லையே எப்போதும் போலத்தான் இருக்கிறேன்

"பொய் சொல்கிறாய், சுபத்திரா? உனக்கு என்ன பிடித்தது? சொல்லேன் "

சுபத்திரா தமக்கையை நோக்கிவிட்டு, கலகலவெனச் சிரித்தாள். அச்சிரிப்புக் கூட வேண்டுமென்று சிந்தியது போல ராணிக்குப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானேன் உனக்குப் பொய் சொல்கிறன்... அக்கா நீ தான் சில நாட்களாக ஒரு மாதிரியா இருக்கிறுய்."

ராணி திடுக்கிட்டாள். வருத்தம் விசாரிக்க வந்தவளே வருத்தக்காரஞக்குகின்ற நிலைமை.

ராணியின் விழிகள் அறையின் மூலையில் எதையோ அதிசயத்தைக் கண்டன போல நிலைத்து நின்றன. சுபத்திராவும் அதைக் கண்டுவிட்டாள்.

''கரப்பான் பூச்சியள் உள்ளை நுழைந்து உடுப்பை அரிக்குது... அதுதான் றங்குக்கு ஆமப்பூட்டு போட்டுப் பூட்டியிருக்கிறன்''

"பூட்டுப் போட்டுப் பூட்டிஞல் பூச்சி போகாதா ஏன் சுபத்திரா எதையாவது இரகசியத்தை வைத்துப் பூட்டி யிருக்கியறி?''

அவள் சாதாரணமாகத் தான் கேட்டாள். ஆஞல் அவ்விஞவால் சுபத்திரா சற்றுத் திகைத்தவள் போலக் காணப்பட்டாள். அவள் முகத்தில் கணப்பொழுது தோன்றி மறைந்த மாற்றத்தை ராணி கவனித்தாள்.

"அக்கா சாப்பிட வரட்டாம்...'' என்று வெளியில் நின்றபடி கண்மணி குரல் கொடுத்தாள்.

''வா, சுபத்திரா சாப்பிடப் போவம் ''

''எனக்குப் பசிக்கவில்லை, அக்கா நீ போய்ச் சாப்பிடு .'

''உன்ரை நடப்பொன்றும் எனக்குப் புரியவில்லை. எழும்பி வாடி '' என்று ராணி கூறிய போது அவளது சொற்களில் தெறித்த கோபத்தைச் சுபத்திரா உணர்ந்து கொண்டாள்.

மெதுவாக எழுந்து தமக்கையைப் பின் தொடர்ந்தாள்

இரவு மணி பத்து இருக்கும். ராணி மேசை முன் அமர்ந்து அடுத்த நாள் கல்லூரி வேலையைச் செய்து கொண்டிருந்தாள். சுபத்திரா படுத்திருந்தபடி ஏதோ வாசித்துக் கொண்டிருந்தாள், வேலுப்பிள்ளை தலைவாசல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கில் படுத்திருந்தபடி, அடிக்கொருதரம் ராணியைக் கேட்டார்.

''பிள்ளை, தம்பி வந்திட்டானே ?'

''இல்லை, ஐயா ''

கனகசிங்கம் இன்னும் வீட்டுக்கு வரவில்லை. அவனுக்கு இப்போது ஊர் சுற்றுசல் கூடிவிட்டது, என்றாலும், ஒரு நாளும் இவ்வளவு நேரம் அவன் வெளியே தங்கியதில்லை படத்திற்குப் போயிருந்தால் கூறிவிட்டுச் சென்றிருப்பான்

படலை திறந்துவிடும் சத்தம் கேட்டது. ராணி எழுந்து முற்றத்துக்கு வந்தாள்.

''அக்கா உனக்கு ஒரு புதினம் தெரியுமோ?'' என்றபடி கனகசிங்கம் வேகமாக ஓடிவந்தான்

''புதினம் இருக்கட்டும்... இவ்வளவு நேரமும் எங்கை போயிருந்தாய் ?'' என்று கோபத்தோடு கேட்டாள் ராணி

கனகசிங்கம் தமக்கையின் கேள்வியைக் கவனிக்காதவன் போலப் பேசினான்.

''நரியன் குண்டடி எல்லாம் அல்லோல கல்லோலப்படுகுது... கடைக்காரக் கந்தையரைப் பொலிசு பிடிச்சுக் கொண்டு போகுது .. கந்தையருக்கு நல்ல அடியாம்...'

வேலுப்பிள்ளை வாங்கை விட்டு எழும்பி உட்கார்ந்தார்

''ஏன் ?''

''சாராயம் வித்ததுக்குத்தான்... கடைக்குள்ளை ஆறு போத்தல் இருந்துதாம் வீட்டிலை புகையிலைப் பாடத்துக்கு கீழை ஒரு பெட்டி இருந்துதாம் கையும் மெய்யுமாகப் பிடிச்சிட்டான்கள் விதானையாற்றை தங்கராசா தான் சொல்லிக்கொடுத்தது என்று கதைக்கிறான்கள்... கந்தையரோடை வாமதேவனையும் பொலிஸ் ஸ்ரேசனுக்குக் கொண்டு போறான்கள் ''

இவற்றைக் கேட்ட சுபத்திரா, ' ஐயோ'' என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. நதியும் ஏரியும்

கல்லூரி விடுவதற்கு இன்னும் இரு பாட நேரங்கள் இருந்தன. மிஸிஸ் துரையப்பா கடந்த ஒரு வாரமாகக் கல்லூரிக்கு வராததால் பாட நேரங்கள் பல வீணே கழிந்தன மிஸிஸ் துரையப்பா வராது இருப்பதால் பொதுவாக வகுப்பில் கலகலப்பு இல்லாததுபோல ராணிக்கும் பட்டது. துரையப்பா ரீச்சர் மிகவும் நல்லவர். சிரிப்புக் கதையுமாகத்தான் பாடத்தை நடாத்துவார். பல்கலை கழகப் புகுமுகப் பரீட்சைக்குச் சில மாதங்களே இருந்த தால் ஆசிரியையின் வரவின்மை வகுப்பில் இனந்தெரியாத ஒருவித பயத்தை ஏற்படுத்தியிருந்தது.

வயதுவந்த பெண்கள், கல்வியின் தன்மையை நன்குணர்ந்த வகுப்பு. பல்கலைக்கழகத்தினுள் எவ்வாறுயினும் நுழைந்து பட்டம் பெற்றுவிட வேண்டுமென்ற துடிப்பு எல்லோரிடமும் இருந்தது.

பல்கலைக்கழகத்தை ஒரு சொர்க்க பூமியாக எல்லோரும் கற்பனை செய்திருந்தார்கள். ஒரு வகையில் அத்தகைய ஒரு கனவைத் தூண்டி, படிப்பின் ஆர்வத்தை ஏற்படுத்தி விட்டதில் ஆசிரியைக்கும் பங்குண்டு.

ஆசிரியை வராதமையினால் மாணவிகள் யாவரும் நூல் நிலையத்துக்குச் சென்றுவிட்டார்கள். ராணியும், கோகிலாவும் மட்டும் செல்லவில்லை. ராணிக்கு வகுப்பிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாந்தமாகப் படிப்பதில் ஆசையிருந்தது மேலும் அன்று மனோன்மணி நூல் நிலையத்தில் ஏற்படுத்திவிட்ட வேதனை வடு இன்னமும் முற்றாக மாறவில்லை.

கோகிலாவுடன் மட்டுமே ராணி மனந்திறந்து பேசுவாள் கோகிலாவுக்கும் ராணி மீது மிகுந்த நட்பிருந்தது.

ராணி எதையோ ஆழமாகப் படித்துக்கொண்டிருந்தாள். கோகிலா எதையோ வேகமாக எழுதிக்கொண்டிருந்தாள். தோழி எழுதுவது நிச்சயமாக வகுப்பு வேலையல்ல என்பதில் ராணிக்குச் சந்தேகமேயில்லை

கோகிலா இப்போது முன்னைப்போலில்லை. மிகுந்த கவனத்தோடு அவள் அலங்காரம் செய்துகொள்வது போலப் பட்டது. முகத்திலும், பேச்சிலும், செயலிலும் ஒருவகை வேகமும், மலர்ச்சியும் காணப்பட்டன.

பழைய கோகிலாவா இவள்?

எழுதி முடித்துவிட்டுக் கோகிலா ராணியின் அருகில் வந்து அமர்ந்தாள் ராணி படித்துக்கொண்டிருந்த நூலை மூடி வைத்துவிட்டு தோழியைப பார்த்தாள்.

"ஏன் தான் இந்த ரீச்சர் வராது நிற்கிறாரோ? சோதனை நெருங்கி வருகிறது ?" என்றாள் ராணி.

"அவ இனிக் குறைஞ்சது இரு மாதத்திற்கு வர மாட்டா இது தான் அவவுக்குப்பெறு மாதம். உமக்குத் தெரியாதேபி?" என்று கேட்டுவிட்டு சிரித்தாள் கோகிலா

'எங்கடை ரீச்சர்மாருக்கு இது பெரிய கரைச்சல் தான் படிப்பிக்க வருகிறவை கலியாணமாகாதவர்களாக இருக்க வேணும் போன முறை சுப்பிரமணிய ரீச்சர் வராது நின்று இப்ப துரையப்பா ரீச்சரோடு, சண்முகம் ரீச்சரும் லீவாம் "

கோகிலாவின் பேச்சைக் கேட்டு ராணிக்கும் சிரிப்பு மலர்ந்தது.

"உமக்கு இந்த விடுப்புகள்தான் தெரியும் "

'தெரியத்தானே வேணும் .."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அது சரி, கோகிலா, நீர் என்ன மிகவும் கவனமாக எழுதிக்கொண்டிருந்தீர் ?''

ராணியின் இக்கேள்வியைக் கேட்டதும் கோகிலாவின் முகம் வெட்கத்தால் சிவந்தது அவள் விழிகளில் ஒரு வகைப் பெருமிதம் கலந்த ஏக்கம் மேவி நின்றது.

''ஒன்றுமில்லையே ?'' என்று சிரிக்க முயன்ருள் கோகிலா.

''பொய் நீரப்பா இப்ப ஒன்றுமே சொல்லிறதில்லை எல்லாத்தையும் மறைக்கிறீர் .'' என்று தூண்டினுள் ராணி

கோகிலா எங்கோ வெறித்து நோக்கி விட்டு தோழியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

'எனக்குப் படிக்கவே விருப்பமில்லை ராணி.''

''ஏன்...ஏனப்பா ?''

''என்னல் இனிப் படிக்க முடியாதப்பா மனம் படிப்பிலே போக மறுக்குது ''

''நீர் மகேஸ்வரி போலக் கலியாணஞ் செய்துகொண்டு வீட்டிலே இருக்கப் போறீராக்கும். இஞ்சை பாரும் கோகிலா. கல்லூரி வாழ்க்கை தான் எங்களுக்குச் சுதந்திர வாழ்வாக இருக்கும் கலியாணம் செய்திட்டால் இப்படி ஒரு வாழ்க்கை கிடையாது போய்விடும்...அதுக்காகக் கலியாணம் கூடாது என்று கூறவில்லை; பெண் தன்னை ஒருவரிடம் ஒப்படைக்காமல் தனியே வாழ முடியாது கூடாது...''

ராணி கூறுவதைக் கோகிலா கண் இமைக்காது கேட்டாள். ராணியின் இதயத்திலும் மெல்லிய ஒரு சலனம் தோன்றத்தான் செய்தது எங்கோ தனக்காக ஒருவன் தன்னை நம்பிக் காத்திருக்கிருன் என்ற உணர்வு

கோகிலா பேசாது இருந்தாள். ராணி தொடர்ந்தாள்.

''கோகிலா, உமக்குக் கலியாணம் பேசுகினமா?''

''இல்லை ''

''அப்ப ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்று சொல்வேன், எவருக்கும் கூறமாட்டீரே?"

"இல்லை... ஏன் என்மேல் நம்பிக்கை இல்லையா?"

கோகிலா மீண்டும் மௌனமாகி விட்டாள் கனவுகள் விழிப்பு நிலையிலும் எழுமா? ராணிக்குக் கோகிலாவின் நிலைக்குரிய காரணம் புரியுமாப் போலவும், புரியாதது போலவும் இருந்தது.

கோகிலா ஒரு புத்தகத்தை விரித்து, அதனுள் இருந்த ஒரு கவரை எடுத்துப் பிரித்தாள்.

அது ஒரு புகைப்படம்!

அப்புகைப்படத்தைக் கையில் வாங்கிப் பார்க்க வேண்டிய அவசியம் ராணிக்கு ஏற்படவில்லை கோகிலா படத்தை எடுத்தபோதே அப் படத்திற்குரியவனை அவள் கண்டு கொண்டாள்.

"வாமதேவன் மனோன்மணியின் அண்ணன்" கோகிலா தனது மனதைத் திறந்து கக்கிவிட்டாள்:

"அவரை என்னால் மறக்கவே முடியவில்லை நான் பள்ளிக்கு வரும் போதும் போகும் போதும் அவரை சந்தித்திருக்கிறன் நரியன் குண்டடியில் நின்று சிரிப்பார் ராணி, அவரையே நான் கலியாணம் செய்து கொண்டு நின்று விடலாம் போல இருக்குது..."

ராணி கோகிலாவை இரக்கத்தோடு பார்த்தாள். வாமதேவன் மீது ராணிக்கு நல்ல அபிப்பிராயமே கிடையாது. அவன் என்று சுபத்திராவுக்குக் கடிதம் கொடுக்க முயன்றானோ அன்றிலிருந்து அவனை அவள் வெறுத்தாள்.

கோகிலா ஏமாந்து போனாளா...?

"கன காலமாகத் தொடர்பா கோகிலா?" என்று ராணி மெதுவாகக் கேட்டாள்,

"ஓம் ஆறேழு மாதமாகக் கடிதம் எழுதுவார் எப்படி எல்லாம் எழுதுவார் தெரியுமா, ராணி? என்னைத் தவிர வேறு எவரையும் தனக்குப் பிடிக்கவில்லையாம்..."

கோகிலா கூறிக்கொண்டே இருந்தாள். ராணியின் உள்ளம் தோழிக்காகக் கண்ணீர் விட்டுக் கொண்டே இருந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆண்கள் தாம் எப்படிப்பட்ட வெறியர்களாக இருக்கின்றார்கள்? ஒரு பெண் கிடையாது போனால், பிறிதொரு பெண்ணிடம் ஈடுபாடு கொள்ள மனம் இடம் தருகின்றதே. 'ஆண்' ஆறு போன்றவன். பெண் ஏரி போன்றவள், என்று யாரோ எப்போதோ எழுதியதைத தான் படித்தது ராணிக்கு நினைவு வந்தது. உண்மைதான் ஒருவனோடு தன்னைச் சேர்த்துத் தேங்கி நிலைத்து அமைதி கண்டு விடுகின்றாள் பெண். ஆண், ஆறுபோலப் பெண்களிடையே விரைந்து கொண்டே இருக்கின்றான். முடிவு அழிவு தான் நிச்சயமாக வாமதேவன் ஏரியாக இருக்க முடியாது என்பதில் அவளுக்கு எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

ஏரி நீரைக்கூடச் சில வேளைகளில் சில ஆறுகள் கவர்ந்து சென்றுவிடுகின்றன

''என்ன ராணி கடுமையாக யோசிக்கிறீர் '' என்று வினவினாள் கோகிலா.

கல்லூரி விடுவதற்கு அறிகுறியாக மணி அடித்தது

அரசடி வீதியினின்று திரும்பி பிறவுன் ரோட்டில் வந்து கொண்டிருந்தபோது ராணி கோகிலவிடம் கேட்டாள்:

''நீர் முந்தி எவ்வளவு நல்ல பிள்ளையாக இருந்தீர்? '

ராணியின் கேள்வியால் கோகிலா சற்றுத் திடுக்கிட்டவள் போலானாள்.

'ஒருவரை விரும்புவதால் நான் நல்ல பிள்ளையில்லையா ராணி ?''

''அப்படியல்ல கோகிலா' வெகு அமைதியாக இருந்தனீர். எப்படி இதற்குள் சிக்கினீரோ? நமது சமூகத்தில் காதலுக்கு வரவேற்பேயில்லை. மேலும் நமது வாழ்வில் இதனால் வீண் அவப் பெயர்தான் மிஞ்சும் ஆண்கள் இதனால் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை எல்லாக் கெட்ட பெயரும் பெண்களாகிய எமது தலை மீதுதான் விடியும்...'

கோகிலா மெதுவாகச் சிரித்தாள்.

''உமக்கு ஒன்றுமே தெரியாது ராணி அவர் என்னைத் தான் கலியாணம் செய்வார்... எனக்கு அது நல்லாத் தெரியும் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு நம்பிக்கை? பெண்களை ஏமாற்றுவது வெகு சுலபம். கோகிலாவின் நம்பிக்கை வெற்றிபெற வேண்டுமென ராணி மனதாரப் பிரார்த்தித்தாள்.

அவர்கள் நரியன் குண்டை நெருங்கியபோது வாமதேவன், கடை வாசலில் நின்றிருந்தான்.

ராணி சற்றுத் தூரத்தில் வரும்போதே இதை அவதானித்து விட்டாள் கோகிலாவின் நடையில் ஒருவகைத் துள்ளல்.

"அவர் நிற்கிறார்" என்றாள் கோகிலா.

ராணி தலையைக் குனிந்து கொண்டு விரைந்தாள்.

நரியன் குண்டில் மழை வெள்ளம் நிறைந்து நின்றது. பலர் துணிகளைச் சலவை செய்து கொண்டு நின்றிருந்தார்கள். சிலர் தோய்த்த துணிகளை வீதியோரமாகக் கொடி கட்டிக் காயவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

நரியன் குண்டில் கரையில் நின்றிருந்த சிறுவர்கள் நீர் மட்டத்தில் தலையை உயர்த்திய தவளைகளைக் கல்லால் அடித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் கரையில் வளர்ந்திருந்த புளியமரத்திற்குக் கல்லால் வீசி புளியங் காய்களை வீழ்த்திக்கொண்டிருந்தார்கள்.

ராணிக்குத் தெரியத்தக்கதாக இப் பகுதியில் முன்பு பற்றைகள் நிறைந்து கிடந்தது. மாலை வேளைகளில் தனியே வர எல்லாருக்கும் தயக்கமே. இன்று வீதிகள் நரியன் குண்டின் இரு கரைகளையும் தொட்டுச் செல்கின்றன. வீணே கிடந்த பனை வளவுகள் எல்லாம் கல் வீடுகளால் நிறைந்து காட்சி தருகின்றன.

அம்மன்கோவிலை ராணி நெருங்கி விட்டாள். கோயிலைப் பார்க்குப்போது கடந்த திங்களன்று நிகழ்ந்து முடிந்த நிகழ்ச்சிகள் மனதில் எழுந்தன.

"எவ்வளவு ஆவைத்தோடு தங்கராசா எனது அண்ணனை அடித்திருக்க வேண்டும்? பாவம் மகாலிங்கம்.. எங்களுக்காக அவர் அடிபட்டாரே?" ராணியின் உள்ளம் நெகிழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் கோவில் கலவரத்தின் எதிரொலியாகக் கந்தையரும், வாமதேவனும் அனுமதியின்றிச் சாராயம் விற்றதாகப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சம்பவமும் ராணிக்கு நினைவு வந்தது தங்கராசாவே பொலிசுக்குக் காட்டிக்கொடுத்தாக ஊரெங்கும் பேசிக்கொண்டார்கள் "தங்கராசா இதைச் செய்யக் கூடியவன் தான்."

வேலுப்பிள்ளையோடு விதானையார் பின்பு சமாதானமாகிவிட்டார். விதானையாருக்கு இப்போது கோபம் கந்தையா மீதுதான் வேலுப்பிள்ளை வழக்கம் போல விதானையார் குடும்பத்தினரின் அழுக்குத் துணிகளை எடுத்து வந்தார்.

தந்தை அதன் பிறகும் அவர்களுக்குத் துணி வெளுப்பதில் ராணிக்குச் சம்மதயில்லை.

"இதோ பார்பிள்ளை, நாம் எங்கடை தொழிலைச் செய்யத்தான் வேணும்.. செய்யாமல் எப்படிப் பிழைக்கிறது" என்றார் வேலுப்பிள்ளை.

"லோன்றி வையுங்கள்" என்றான் கனகசிங்கம். கனசிங்கத்திற்கு லோன்றி ஒன்று தொடங்கும் ஆசை இருக்கின்றது என்பதனை ராணி அறிவாள்.

"உவையின்ரை வீடுகளுக்குப் போய்த் துணி எடுக்கிறதை இனி விட்டிடவேணும்.. சலவை செய்ய விரும்பினால் கொண்டு வந்து தரவேணும்" என்று அம்மன் கோயில் கலவரத்திற்குப் பிறகு அடிக்கடி கூறிவந்தான்.

வேலுப்பிள்ளைக்கு கனகசிங்கனின் பேச்சு ஒத்துக்கொள்ளவில்லை.

"ஊருக்கை லோன்றி வைக்கக் கூடாது பிழைக்கேலாது.. நமது பரம்பரையில் இல்லாத வழக்கம்." என்பார் வேலுப்பிள்ளை.

ராணிக்குத் தம்பியின் பேச்சில் விருப்பம் இருந்தது. ஆனல் அவனது படிப்பினை எண்ணிப் பேசாது இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாள். வண்ணார்பண்ணையில் இதுவரை யாரும்லோண்றி தாடங்கவில்லை லோண்றி தொடங்குகின்ற துணிச்ச எவருக்குமே வரவில்லை ''யார் அழுக்குத் துணிகளைக் கடையில் கொண்டு வந்து தரப்போகின்ருர்கள்'' என்ற பயம் இருந்தது.

காலம் காலமாக வீடுகளுக்குச் சென்று துணிகளை எடுத்துச் சலவை செய்துவந்த ஒரு வழக்கத்தை மாற்று கின்ற புரட்சி வண்ணார் பண்ணையில் நிகழக் கூடியதுதாே?

ராணியின் கால்கள் நடைபோட, மனமும் எதை எதையோ அசைபோட்டது. அம்மன் கோயிலின் தெற்கு வீதியில் விதானையாரின் வீடு இருகின்றது. சீனியர் ஒழுங் கையும், வீதியும் இணைகின்ற சந்தியில் அவரின் வீடு இருந்தது

கோயிலைக் கடந்து வரும்போது விதானையார் வீட்டு வாசலில் இருவர் நிற்பதை ராணி கண்டாள். அதில் ஒருவன் தங்கராசா; மற்றவன் முன்பின் அறிமுகமில்லாத ஒருவன்.

ராணியின் இதயம் ஏதோ காரணமின்றித் திடுக்கிட் டது. அவள் சென்று வருகின்ற வழக்கமான பாதைதான் விதானையார் வீட்டைக் கடந்துதான் அவள் போய் வந் திருக்கிருள்.

இன்று அவளது உள்ளத்தில் இனங்காணுத பயம் குடி கொண்டது போலிருந்தது

நடையை வேகமாக்கி விதானையார் வீட்டைக் கடந் தாள்.

அவளது உள்ளம் பயந்தது சரியாகவே போய்விட்டது, ''உதார் ?'' தங்கராசாவுடன் நின்றவன் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உதோ உது வண்ணாரப் பெட்டை உவயளை இப்ப கையிலை பிடிக்கேலாது படிப்பும் எடுப்பும்... கொடி கட்டிப் பறக்கினம் ''

வேண்டுமென்றே தங்கராசா உரக்கக் கூறியதாக ராணிக்குப் பட்டது. அவளது உள்ளம் துவண்டது விழிகள் நீரைச் சொரிந்து விடுவன போலத் துடித்தன.

''நாம் அவ்வளவு கேவலமானவர்களா ?''

ராணி தலையைக் குனிந்துகொண்டு வேகமாக நடந்தாள். அவள் இதயத்தில் ஏதோஒன்று வலிமை பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. மாறும் குலத்தொழில்

வேலுப்பிள்ளையை அதிகாலை வேளையில் யாரோ கூப்பிட்டார்கள். சற்று முன்தான் பாயைச் சுருட்டி வாங்கியில் வைத்துவிட்டு தலைவாசல் திண்ணையில் குந்தினார். ராணி முற்றத்தைப் பெருக்கிக் கொண்டு நின்றாள் வாடைக்காற்று பெயர்ந்து விட்டதால் வேப்பஞ்சருகுகள் முற்றமெல்லாம் நிறைந்து கிடந்தன.

''வீட்டுக்காரர் வீட்டுக்காரர்...''

அவள் வீட்டு வாசலில் நின்று இதுவரை இப்படி எவரும் அழைத்ததாக அவளுக்கு நினைவில்லை.

''வேலுப்பிள்ளை'' என்று அதிகாரத்தோடு அழைக்கும் குரலையும், ''கட்டாடி'' என்று குலத்தொழில் சுட்டி விளிக்கும் குரலையும்தான் அவள் கேட்டிருக்கின்றாள்

''வீட்டுக்காரர்...'' என்று வெகு மரியாதையோடு அழைக்கும் குரல் அவளுக்குத் திருப்தியையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது.

மனிதனை மதிக்கும் குரலது.

வேலுப்பிள்ளை எழுந்து கதவைத் திறந்தார்.

அவள் முற்றம் பெருக்குவதை விட்டு விட்டு கதவைப் பார்த்தாள். வெளியில் நின்று அழைத்தவனை நன்கு காண முடியவில்லை. தந்தையின் பின்பக்கம்தான் தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த முறை நல்லாப் பிந்திப் போச்சுது... இண்டைக்குக் கொண்டு வாறியளா"

ராணி உண்மையில் திகைத்துப் போய் நின்றாள். "என்ன கட்டாடி, பிந்திப் போச்சுது இண்டைக்குக் கொண்டு வா" என்ற சொற்களுக்குப் பதிலாக எவ்வளவு அடக்கமும் மரியாதையுமான குரல்.

'நீர் போம் தம்பி, எல்லாம் முடிஞ்சு இரண்டு சேட்டு மட்டுந்தான் மடிக்க வேணும் பத்து மணி போல கொண்டு வாறன்"

"அப்ப நான் வாறன்"

வேலுப்பிள்ளை கதவை மூடி விட்டுத் திரும்பி வந்து பழையபடி குந்தில் அமர்ந்து கொண்டார்.

"பிள்ளை, இஞ்சை ஒருக்கா வா.. அந்தப் பெட்டிக்குகை கொஞ்சம் கரியைப் போட்டு மூடிவிடு கந்தையருடைய மகன் வந்திட்டுப் போகு..."

வந்தவன் யாரென்பதை ராணி புரிந்து கொண்டாள் மகாலிங்கம் வந்துவிட்டுப் போகின்றான்

அவனால்தான் அப்படிப் பேச முடியும்

"நல்ல பிள்ளை... அடக்க ஒடுக்கமானவன்.. சும்மா சொல்லக்கூடாது.. அந்தக் குடும்பத்திலை தங்கக் கம்பி வெத்திலைக் காம்பைக் கடிக்கத் தெரியாதவன்" என்று வேலுப்பிள்ளை மகாலிங்கத்தைப் புளுகித் தள்ளுகிறார்.

அம்மன் கோவில் கலவரத்தில் தங்களுக்காக வாதடி, அடிபட்ட நாளிலிருந்து மகாலிங்கத்தின் மீது இனந் தெரியாத ஒரு மரியாதை ராணிக்கு ஏற்பட்டிருந்தது. அவன் வயதில் இளைஞனாக இருக்கலாம் ஆனால், அவளைப் பொறுத்த மட்டில் அவன் விதானையாரைவிட உயர்ந்தவன்

ஏதோ புகை படிந்த ஓர் ஓவியம்போல மகாலிங்கத்தின் உருவம் அவளுக்கு நினைவில் இருந்தது. என்றோ எப்போதோ சந்தித்த நினைவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்திரிகைப் பெட்டிக்குக் கரி போட்டு மூட்டிவிட்டுத் திரும்பும் போது தந்தை கூறினர்:

''பிள்ளை, தங்கச்சி முத்தத்தைக் கூட்டட்டும் நீ ஒருக்கா சந்தையர் வீட்டு உடுப்புகளைத் தெரிஞ்சு வைச் சிட்டுப் போ ''

ராணி கைகளை கழுவிவிட்டு வந்தாள். வரும் போது சுபத்திராவையும், கண்மணியையும் தட்டி எழுப்பி விட்டு வந்தாள்.

சலவை செய்து மடித்த துணிகள் மேசைமீது நிறைய அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவளுக்குத் தெரியும் ''ட'' என்று அடையாளமிட்ட துணிகள் சந்தையர் வீட்டிற்குச் சொந்தமானவையென்று, அவற்றை ஒவ்வொன்ருக அடுக்கி வைக்கும் வேலையில் ஈடுபட்டாள்.

சேட்டுகளை எடுத்து வைக்கும் போது இது மகாலிங்கத் துடையது என்ற எண்ணம் தலைதூக்கத் தொடங்கியது அவளுக்குச் சிரிப்பாக வந்தது

மனம்தான் எவ்வளவு எண்ணங்களைக் கொண்டிருக் கின்றது

ஒரு சேட்டை எடுத்த அவள் அதனை உரிய இடத்தில் வைக்காது தயங்கி நின்ருள் அவள் விழிகள் நிலைகுத்தி நின்றன.

''என்ன பிள்ளை, கிழிஞ்சு போச்சுதே ?'' என்று கேட் டார் வேலுப்பிள்ளை.

''இல்லை ஐயா . அந்தக் கறை இன்னமும் போக வில்லை ''

''உது போறது கஸ்டம் பிள்ளை ''

அது மகாலிங்கத்தின் சேட்டுத்தான். இந்த சேட்டை அவளுக்கு நல்ல நினைவிருக்கின்றது, இரண்டு மாதங் களுக்கு முன் வக்குக்குள் அழுக்குத் துணிகளை ஊறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடும் போது அவளது தந்தை இந்தச் சேட்டைத்தூக்கிக் காட்டினார்.

''இதுதான் பிள்ளை எங்களுக்காகக் கந்தையநந்நை மோன் பேசியதற்கு அவனுக்குக் கிடைத்த பரிசு ''

சேட்டின் முன்பக்கம் முழுவதும் இரத்தக் கறை உறைந்து கிடந்தது. அவள் அதனைப் பார்த்தபோது உள்ளம் நெகிழ்ந்து போனாள். அம்மன் கோவில் சம்பவமும் கூடவே எழுந்து மறைந்தது.

அந்த கறை அழிந்து போவதாக இல்லை

தியாகத்தின் தழும்புகள் மறையாதனவோ?

கறை படிந்த அந்தச் சேட்டைப் பார்க்கும் போது மகாலிங்கம் அவளுக்காகவே அடிபட்டது போன்ற ஓர் உணர்வு தலை தூக்கியது. சற்று நேரம் தன் கைகளில் ஆதரவோடு அச்சேட்டை வைத்திருந்தாள்

அவளுக்கே வெட்கமாக இருந்தது. ஓர் ஆடவனின் சேட்டைக் கைகளில் வைத்து வேடிக்கை பார்ப்பதா? நினைக்க வெட்கமாக இருந்தது

அவளின் மனம் எதையெதையெல்லாம் எண்ணி விட்டது. எண்ணங்கள் சுதந்திரமானவைதாம்.

சிவக்கொழுந்து மல்லாகத்தில் இருந்து வந்திருந்தார். சனிக்கிழமை ஆதலால் எல்லாரும் வீட்டில் இருந்தார்கள் சிவக்கொழுந்து மாமாவைக் கண்டதும் ராணிக்கு சின்னத் தம்பியின் நினைவு ஒரு கணம் எழுந்து மறைந்தது.

''வாங்க மாமா...'' என்று வரவேற்றாள்.

மாமாவிற்கு அவள் மீது சிறிது மனக்கசப்புதான்? படிப்பைச் சாட்டாக வைத்துக் கலியாணத்தை தள்ளி வைத்ததில் அவருக்கு கவலையும், சிறிதளவு கோபமும் இருந்தது.

''நீதான் பிள்ளை, எல்லாத்தையும் தள்ளி விட்டிட்டியே?...'' என்றார் மாமா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் பதில் பேசாது நின்றுள்.

கந்தையர் வீட்டிற்குச் சலவைத் துணிகளைக் கொடுத்து விட்டு வேலுப்பிள்ளை திரும்பி வந்தார்.

"வந்து கன நேரமோ மச்சான்...?"

"சீ இப்பத்தான் வந்தனுன் "

பெரியவர்கள் பேசத் தொடங்கினர்கள். சிறியவர்கள் திக்குக் கொன்ருக நின்றிருந்தார்கள். இராசுவும் வீட்டில் இருந்தான்.

"உன் மூத்த மகனின்ரை சங்கதியைக் கேள்விப்பட்டியோ மச்சான் சீதனக் காணியை விக்கப்போருராம் ' என்ருர் சிவக்கொழுந்து.

வேலுப்பிள்ளை முகத்தில் வியப்பு ஏற்பட்டது சிவக்கொழுந்தை ஏறிட்டுப் பார்த்து விட்டு வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த இராசுவைப் பார்த்தார். அவன் தலை குனிந்தபடி அமர்ந்திருந்தான்.

"ஏனும் ?" வேலுப்பிள்ளையின் குரலில் என்றும் இல்லாத கவலை தொனித்தது.

'கார் வாங்கப் போருராம் இனிமேல் வெளுக்கிற தொழிலை செய்யமாட்டாராம் வாடகைக்கு கார் ஓட்டப் பேருராம்...நேற்று மல்லாகத்திற்கு வந்திருந்து இதைத் தான் செய்யப்போறதாகக் கூறிவிட்டு வந்தார் உன் மருமோனும் ஓம் என்று புரிசன் பக்கம் தலையாட்டி விட்டாள் சின்னத்தம்பியும் மச்சான் பக்கந் தான் "

வேலுப்பிள்ளை வெகுநேரம் மௌனமாக இ.ந்தார். இளம் சந்ததியின் மாற்றங்களை அவரால் அவதானிக்க முடிந்தது. தனது வீட்டிற்கூட இராசுவின் வாதத்திற்கு ஆதரவு உண்டென்பது அவருக்குத் தெரியும். பரம்பரை பரம்பரையாக ஒரு தொழிலைச் செய்துதான் பிழைக்க வேண்டும் என்று என்ன நியதியா?

"நானும் எதிர்பார்த்தன்... அவன் கார் ஓடப் பழகுகிறுன் எனறு கேள்வி பட்டபோதே நான் இப்படி வரும் என்று எதிர்பார்த்தன் என் பிள்ளைகள் என் தொழிலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் செய்ய வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை ஆகு தெரிஞ்ச தொழிலைச் செய்யாது தெரியாத அலுவலில் தலையிட்டு அவதிப்படுவது கூடாது நான் புத்தி சொல்லிக் கேட்கிற வயதில்லை அவனுக்குச் சரியென்று பட்டதைச் செய்யட்டும் மச்சான் '' என்ருர் வேலுப்பிள்ளை.

''நீயும் அப்ப ஒத்துக் கொண்டு விட்டாய் போலிருக்குது '' என்ருர் சிவக்கொழுந்து: ''சீதனக் காணியை, அந்த ஒரு துண்டுக் காணியை வித்துப்போட்டு இருக்க இடமில்லாமல் ரோட்டில நிக்க நேரிடும் என்றுதான் கவலைப்படுறன் அவையவைக்குக் கொடுத்ததைத் தடுக்க நான் வரவில்லை எனக்கு ஏதோ இதெல்லாம் சரியாப்படவில்லை மச்சான் ''

இராசு எழுந்து வந்தான்,

''ஏதோ மாமா என்னுல இனிமேல் உவங்கட அழுக்குத் துணிகளைத் தோய்க்க முடியாது. எவ்வளவு சேவலமாக நினைச்சிட்டான்கள் நான் வேறு தொழில் செய்து தான் பிழைக்கப் போறன்''

இராசுவின் குரலில் தொனித்த திடத்தை எல்லாரும் நன்கு தெரிந்து கொண்டனர். பொன்னு ஆச்சிதான் கோதித்துத் தள்ளினுள்.

''பெரிய தம்பிரானே, இது என்ன கேட்டுக்கோ?

வேலுப்பிள்ளை எதுவும் பேசாது இருந்தார் இராசுவின் தொழில் மாற்றம் அவருக்குப் புதுமையாகப் படவில்லை அவருடைய பகுதியில் எவ்வளவோ பேர் தொழில் மாற்றித்தான் விட்டார்கள். கணபதியின் மகன் ஒருவன் இன்று ரெயில்வேயில் உத்தியோகம் பார்க்கிருன், வல்லிபுரத்தின் மகன் பார்பண்ணை நடத்துகிருன், சோமரின் இளைய மகன் சைக்கிள் கடை ஒன்று தொடங்கி விட்டான் இப்படி இன்னும் யார் யாரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசுவும் அவர்களில் ஒருவனாகப் போகிறான் நினைத்துப் பார்க்கும் போது இந்தப் பரம்பரையில் மாற்றங்கள் நிகழத்தான் போகின்றன என்பது புலனாகின்றது. அவர் வீட்டில் இருப்பன போன்ற பிரச்சினைகள் எல்லார் வீடுகளிலும் இருக்கத்தான் செய்கின்றனவோ?

தனி மனித மாற்றம் ஒரு குடும்ப மாற்றமாகிச் சமூக மாற்றமாவது உண்மைதான்.

குலத் தொழிலை விட்டு வேறு புதிய தொழிலைச் செய்வது என்பது மனதிற்கு கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருக்கின்றது. ஆனால் பழகிப் போனால் சரியாகிவிடும்.

உண்மை தான். வல்லிபுரத்தின் தமையன் ஒருவர் இன்று தச்சு வேலை செய்து வருகின்றார். முப்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்துபோன சம்பவம் அது. வல்லிபுரத்தின் தமையன் மரவேலை செய்கின்ற குடும்பத்து பெண்ணொருத்தியை விரும்பி மணந்து கொண்டார். அதன் பின் தன் தொழிலையே மறந்து விட்டார்.

மாற்றங்கள் ஒவ்வொரு பரம்பரையிலும் இருக்கத்தான் செய்தன. ஆனால் புதிய பரம்பரையில் அவை நன்கு காலூன்றி விட்டன. நாளை..?

வேலுப்பிள்ளை மகனை நிமிர்ந்து பார்த்தார்.

"எங்காவது கார் பார்த்து வைத்திருக்கிறாயா ?"

"ஓம் ஐயா கந்தர் மடத்தில ஒரு கார் சோமசெற் இருக்குது "

"எவ்வளவாம்? "

"பன்னிரண்டாயிரமாம் "

எல்லாரும் விலையைக் கேட்டதும் திகைத்து விட்டனர் அவ்வளவு தொகைப் பணம்! அக்குடும்பத்தைப் பொறுத்த மட்டில் மிக அதிகமே. இராசு என்ன நினைவோடு இருக்கிறானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுப்பிள்ளைக்கு மட்டுமல்ல, ராணிக்கும் இப்போது ஒரு நிலை புரிந்தது. வேறு தொழிலைச் செய்வதென்பது பணத்தைப் பொறுத்த விஷயமாகவும் உள்ளது.

''இவ்வளவு காசுக்கு என்ன செய்யப் போகிறாய்? '' என்று கேட்டார் வேலுப்பிள்ளை.

''சீதனக் காணியை விற்கப் போறன் மிச்சத்திற்கு சிவக்கொழுந்து குறுக்கிட்டார்.

''அந்தக் காணியை அவ்வளவு தொகைக்கு விற்க முடியாது கூடிக் குறைஞ்சால் ஒரு ஆறாயிரம் தேறிச்சில்லை ''

''மணியின் நகைகளையும் விற்கப் போறன் '' என்றான் இராசு.

மகளின் நகைகளை விற்பதாகக் கூறியபோது சிவக்கொழுந்து மிக்க ஆத்திரமடைந்தார்.

''உதெல்லாம் சரியில்லாத வேலை தம்பி...''

''வேறை வழியில்லை மாமா '' என்றான் இராசு.

வேலுப்பிள்ளை சொன்னார்:

''இதோ பார் ராசு, பன்னிரண்டாயிரம் தேடுவதென்பது இலேசல்ல அதனால் ?''

''ஏன் முடியாதென்கிறீர்கள் எனது சீதனக் காணியை விற்றால் ஒரு ஆறாயிரம மணியின் நகைகளை விற்றால் இரண்டு தேறும் மிகுதியை நீங்கள்தாருங்களேன் வல்லிபுர மாமயவின் காணிக்குக் கொடுத்து வைத்திருக்கிறியளே ஆறாயிரம்... அதில் வாங்கித் தாருங்களன் ''

இராசு இவ்வளவு பேச எங்கு கற்றான்?

''இராசு '' என்று அதட்டினார் வேலுப்பிள்ளை

''அந்தக் காசை எடுத்துத் தருவன் என்று நினையாதை அது எதுக்கு என்று உனக்குத் தெரியும் உனக்குத் தெரியும் ...உனக்குப் பின்னாலை இருக்கிற குமருகளின்ர காசு... அதுகளுக்காகச் சேர்த்தது ''

''அந்தக் காசை எடுக்க ஒருக்காலும் நான் விடமாட்டன் '' என்று பொன்னு ஆச்சி கத்தினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய எவரும் எதுவும் பேசவில்லை. ராணிக்குத் திக் கென்றது. அவளுடைய மேற்படிப்பு தொடர்ந்து நிகழ இந்தப் பணம் உதவும் என அவள் நம்பியிருந்தாள். வேலுப்பிள்ளையும் அவ்வாறே கூறியிருந்தது. நினைவுக்கு வந்தது.

"நீ பாஸ் பண்ணு பிள்ளை அந்தக் காசைச் செல விட்டு உன்னை யூனிவேசிற்றியில, படிப்பிப்பன். பிறகு நீ வந்து உன் தங்கச்சியளுக்கு உழைச்சுக் கொடு.."

அந்தப் பணத்திற்கு அண்ணன் வழிகோலி விட்டான். இதன் முடிவு ?

"அது என்னத்திற்காக சேர்க்கப்பட்ட காசு என்று எனக்குத் தெரியும் ஐயா... அவ்வளவு காசையும் நான் உழைச்சுக் கொடுப்பன் "

—இராசு வென்று விட்டான்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 வைகாசிப் பொங்கல்

திருவிழாவில் பறைமேளம் கொட்டுவது, வண்ணார் பண்ணையிலேயே பெரிய தம்பிரான் ஒருவருக்குத்தான். அதுவும் பெரிய தம்பிரானின் வைகாசிப் பொங்கல் வந்து விட்டால் போதும். வண்ணார்பண்ணை எங்கிலும் பறை மேளத்தின் பல்வகைத் தாள ஒலி ஓயாது எழுந்து கொண்டே இருக்கும்.

பெரிய தம்பிரான், வேலுப்பிள்ளைக் குடும்பத்தினரின் குலதெய்வம், வைகாசிப் பொங்கலை வேலுப்பிள்ளையின் தலைமையில் அச்சமூகமே நின்று கொண்டாடும். பெரிய தம்பிரானுக்குச் சொந்தமான காணி ஒன்று கலட்டியில் இருக்கின்றது. வேலுப்பிள்ளையின் பாட்டன், கோயிலுக்கு எழுதி வைத்த சொத்து அது. அக்காணியில் பொங்கல் அன்று மடை வைத்து, பெரிய தம்பிரான் கோயிலுக்கு ஊர்வலமாகக் கொண்டு வருவார்கள்.

ஒரு சமூகத்தின் சிறப்பான விழா அது.

பொங்கல் அன்று இரவு நாட்டியம், மேளக் கச்சேரி, கதாப் பிரசங்கம் என்பன விடிய விடிய நடைபெறும். நரியன்குண்டு முழுவதும் விழாக் காண வந்தவர்கள் குழுமி இருப்பார்கள். கந்தையருடைய கடையில் மட்டும் அன்றிரவு முந்நூறு ரூபாய்களுக்குக் குறையாத வியாபாரம் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம்போல அன்று வைகாசிப் பொங்கல்.

ராணி கல்லூரிக்குச் செல்லவில்லை. பொங்கலுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யவே நேரம் சரியாக இருந்தது. வேலுப்பிள்ளை மூன்று நாட்களாகக் கோயில் வேலையில் மூழ்கியிருந்தார். சோடனைகள், நிகழ்ச்சி ஒழுங்குகள் என்பனவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

எந்த ஆண்டிலும் இல்லாத அளவு இத்தடவை பொங்கல் விழா பெரிதாக மாறிவிட்டது. நரியன்குண்டு மின்சார சோடனைகளால் பகலாகக் காட்சி தந்தது. எங்கும் ஒரே கலகலப்பு.

இவ்வாண்டு கந்தையரின் கடைக்குப் போட்டியாகப் பல சிறிய கடைகள் தோன்றி இருந்தன.

சின்னத்தம்பியும் விழாவிற்கு வந்திருந்தான். அவனைக் காணும்போதெல்லாம் ராணி அவனுக்காகக் கவலைப்பட்டாள். ராணியின் உள்மனதில் ஏதோ ஒன்று இருந்தது கொண்டு, ''சின்னத்தம்பி பாவம்'' என்று ஓயாது கூறிக் கொண்டே இருந்தது. தான் தொடர்ந்து படிப்பதால் எத்தனையோ மாற்றங்கள் நிகழும். சின்னத்தம்பி தனக்குக் கிடைக்காது போகலாம் என்பது அவளுக்குத் தெரியும். அதற்காக அவள் கவலைப்படவில்லை.

உண்மையில் சின்னத்தம்பியைப் பற்றித் தொடர்ந்து ஓரிரண்டு நிமிடங்கள் அவள் நினைத்தவள் அல்லள். அவளுக்குத் தன் படிப்புத்தான் முக்கியம். தன் குடும்பத்தின் உயர்ச்சியே முக்கியம்.

கோயிலுக்குப் புறப்பட்டபோது, தனக்கு உடம்பு சரியில்லை என்று கூறிச் சுபத்திராவோடு போக மறுத்து விட்டாள்.

''எல்லாரும் கோயிலுக்குப் போறம்... நீ மட்டும் இங்கே தனியா இருக்கப் போறியே? '' என்று ஆச்சி கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தனியே இருக்க என்ன பயமெண்ணே?..." என்றாள் சுபத்திரா.

"ஏன் சுபத்திரா, திருவிழா நல்லா இருக்கும் வாவன்..." என்று ராணி எவ்வளவோ வற்புறுத்திப் பார்த்தாள்

"எனக்கு அந்தச் சனக் கூட்டத்துக்குள் போக விருப்பமில்லை நீ போட்டு வா அக்கா" என்று ஒரேடியாக மறுத்து விட்டாள் சுபத்திரா.

சுபத்திராவின் போக்கு ராணிக்குப் புரியவில்லை. அவள் பெரிதும் மாறி விட்டாள் முன்போல அவள் கலகலப்பாக இல்லை மிகுந்த அடக்கமும், அமைதியும் அவளிடம் குடி கொண்டு விட்டன அவளது அழகிற்கு அணி செய்வன போல அவை இருந்தாலும், எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவகை ஏக்கம் நிரந்தரமாக அவளின் முகத்தில் பிரதிபலிப்பதை ராணி அடிக்கடி அவதானித்து வந்திருக்கின்றாள்

காரணம் தான் புரியவில்லை.

"சுபத்திரா, படலையை நாங்கள் வெளியில் பூட்டிக் கொண்டு போறம் நீ அறைக்குள் போய்ப் படு தலைவாசல் லாம்பு எரியட்டும் சாப்பிட்டிட்டுப் படு" என்று ஆச்சி கோயிலுக்குப் புறப்படும்போது கூறினாள்.

வழக்கத்திலேயே சுபத்திரா வெளியில் செல்வதற்கு முன் நிற்பவளல்லள். சினிமா பார்க்கச் சில வேளைகளில் ராணி விரும்பி அழைத்துச் சென்றிருக்கிறாள்.

கோயிலுக்கு வேலுப்பிள்ளை குடும்பத்தினர் வந்தபோது மேளக்கச்சேரி நடந்து கொண்டிருந்தது. ராணி வழியில் தங்கராசாவையும் வாமதேவனையும் கண்டாள் தங்கராசு கனகுவோடு நரியன்குண்டு விளாத்தி மரத்தின் கீழ் நின்றிருந்தான். இவர்களைக் கண்டதும் அவன் ஒருவிதமாக முறைத்ததை அவள் அவதானித்துக் கொண்டாள்,

வாமதேவன் தகப்பனின் கடையில் நின்றிருந்தான். அவனும் இவர்கள் கோயிலுக்குப் போவதைக் கண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசு அண்ணாவின் கார் இந்தத் தடவை பெரியதம்பிரான் திருவிழாவிற்காக நன்கு ஓடியிருந்தது. உடையார் வீட்டு மதிற்சுவர் ஓரமாக அது நிற்பாட்டி வைக்கப்பட்டிருந்து.

அவர்கள் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பகுதியில் போய் அமர்ந்து கொண்டார்கள். கண்மணிக்குக் கொஞ்ச நேரத்திற்குள்ளேயே தூக்கம் விழிகளில் நிறைந்தது. தூங்கி வழிந்தாள்.

''அக்கா நித்திரை...வருகுது...''

''இதுதான் உன்னைக் கூட்டிக்கொண்டு வாறதில்லை'' என்றாள் ராணி.

மேளக்காரருக்குச் சின்னத்தம்பி சோடா கொண்டு வந்து கொடுத்தான். வைககும்போது அவனது விழிகள் ராணியிருந்த பக்கம் சாய்வது அவளுக்குத் தெரிந்தது அவள் வேறெங்கோ பார்வையைச் செலுத்தி விட்டாள்.

இப்படி ஒரு திருவிழாவில்தானே விதானையாருக்கும் தங்களுக்கும் கலவரம் மூண்டது. அதில்தானே மகாலிங்கம் தங்களுக்காக மண்டை உடைபட்டுக் கொண்டார்.

இது என்ன நினைவு? இப்போது ஏன் எழ வேண்டும்?

ராணி கோயிலுக்கு வந்திருப்பவர்களை நோட்டம் விட்டாள். அவளுடைய சொந்தக்காரர் பலரும் வந்திருந்தனர். அயலவர்கள் சிலரும் இருந்தனர். தூரத்தில் சின்னத்தம்பி யதருடனே சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டு நின்றான். இருவரும் மிக அந்நியோன்யமாகப் பேசிக் கொண்டு நின்றிருந்தார்கள்,

ஒரு கணம் அந்த இடத்தைவிட்டு அவளால் கண்களைப் பெயர்க்க முடியவில்லை சின்னத்தம்பி மச்சானோடு பேசிக் கொண்டு நிற்பவனை எங்கே அவள் பார்த்திருப்பதுபோல ஓர் உணர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே? எங்கே?

அந்த முகம் அவளுக்கு நன்கு பரிச்சயமானதல்லவா?

அவளுக்கு நினைவு வந்து விட்டது

அவன்தான் அவர்களுக்காக அடி வாங்கியவன்.

அவன்தான் அவர்களையும் தங்களில் ஒருவராக மதித்து அழைப்பவன்.

—மகாலிங்கம் கலகலவென்று சிரித்தான். சின்னத் தம்பியும் சிரித்தான். இருவரும் அந்த இடத்தை விட்டு எங்கோ போனார்கள்.

கோயில் முழுவதும் வெறிச்சோடி விட்டது போன்ற உணர்வு ராணிக்கு ஏற்பட்டது.

கண்மணி தூங்கி விழுந்தாள். ராணி மெதுவாக அவளின் தலையைத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள். மேளக்கச்சேரி முடிந்து வாய்ப்பாட்டு இசைக் கச்சேரி ஆரம்பமாகி விட்டது.

சினிமாப் பாடல்களைப் பக்கவாத்தியங்களுடன் முழங்கித் தள்ளினார்கள். ஆலய முன்றலில் பாடக்கூடாத பாடல்கள். யார் அதைக் கவனிக்கிறார்கள்? கடவுளை வணங்க வைப்பதற்குக்கூட எதையாவது காட்டித்தானே மக்களை அழைக்க வேண்டியிருக்கின்றது

இருந்தாற்போல இராசு அண்ணனின் காரைப் பலர் சூழ்ந்து கொள்வதை அவள் கண்டாள். கோயிலுக்குள் ஏதோ அலுவலாக நின்றிருந்த வேலுப்பிள்ளை கார் நின்ற இடத்திற்கு விரைந்தார்.

என்ன நடந்தது? ஏதாவது சண்டை சச்சரவோ?

ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்வதை ராணி கண்டாள். பெண்கள் பகுதியிலும் சலசலப்பு எழுந்தது.

"அக்கா அண்ணன்ரை கார் டயரை வில்லுக்கத்தியால ஆரோ குத்திக் கிழித்துப் போட்டான்கள் என்றபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகசிங்கம் வந்தான்.

ராணிக்குத் திக்கென்றது.

ஆச்சி "ஐயோ" என்று கத்தி விட்டாள்,

ஏன் இந்தக் கொடுமை? சும்மா நின்ற கார் யாரை என்ன கேட்டது? வண்ணான் கார் ஓடுவதா என்ற பொறுமையா?

இராசு கொதித்துக் குமுறிக் கொண்டிருந்தான்.

"எந்த எளியவன் செய்த வேலை முதுகெலும்பில்லாதவன்கள் கோபமிருந்தால் நேருக்குநேர் வருகிறது தானே?"

"இதை இப்படியே விடக்கூடாது பொலிசைக் கூப்பிடுவம் " என்றான் மகாலிங்கம்.

"செய்தது யார் என்று தெரியாமல் பொலிசைக் கூப்பிட்டு என்ன செய்யிறது, தம்பி ?" என்றார் வேலுப்பிள்ளை

"ஆர் செய்யிறது உவங்கள்தான் " என்றான் சின்னத்தம்பி குமுறலோடு,

"நடந்தது நடந்து போச்சுது ..பொலிசைக் கூப்பிட்டுத் திருவிழாவைக் குழப்பக் கூடாது" என்றார் வேலுப்பிள்ளை.

ஒருவிதமாகக் கோயிலில் மீண்டும் அமைதி குடிகொண்டது. அதற்கு மேல் ராணியால் திருவிழாவை ரசிக்க முடியவில்லை. உடல் அசதி வேறு உள்ள அசதியேபடு சேர்ந்து கொண்டது. வீட்டிற்குப் போய் படுக்கையில் விழுந்தால் நல்லது போலப்பட்டது. கண்மணி வேறு தூங்கி வழிந்தாள்.

"ஆச்சி நான் வீட்டிற்குப் போகப் போறன் கண்மணியும் நித்திரை "

ஆச்சி அவளைப் பார்த்தாள்.

"இருந்து பிரசங்கத்தையும் கேட்டிட்டுப் போவன் ".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லையண்ணை எனக்குப் போகவேணும் போல இருக்குது அங்கை சுபத்திராவும் தனிய நீ படலைத் திறப்பைத் தா. நான் தம்பியைத் துணைக்குக் கூட்டிக் கொண்டு போறன்"

வீட்டிற்குப் போகும்போது கனகசிங்கம் கூறினன்;

"உது தங்கராசுவோடு நின்ற கனகுவின் வேலைதான் அக்கா. நான் இரண்டு மூன்று முறை கவனிச்சனன். கனகுதான் அண்ணன்ரை கார்ப்பக்கம் மசந்தி மசந்தி நின்றவன் தங்கராசு சொல்லித்தான் அவன் இதைச் செய்திருக்க வேணும்"

ராணி மௌனமாக நடந்தாள். மெல்லிய நிலவொளி கண்மணி தூக்கக் கலக்கத்தோடு கூடவே வந்தாள்.

ராணியின் இதயத்தில் இனந்தெரியாத ஒரு கலக்கம் அவளை அறியாமலேயே பிறந்தது; ஏதோ கொடியதொரு நிகழ்ச்சி தனது குடும்பததில் நிகழப்போவது போன்ற உணர்வின் தலை தூக்கலால் அவளின் உள்ளம் கனத்தது. இவையெல்லாம் எதக்கு முன்னறிவிப்போ ?

பெரிய தம்பிரான் கோவிலில் இசைக்கச்சேரி இன்னமும் முடியவில்லை.

மெல்லிய சோககீதம் ஒன்று இசையாக எழுந்து கொண்டிருந்தது.

"அக்கா உன்னை வீட்டுப் படலையடியில் விட்டிட்டு நான் கோயிலுக்குப் போறன்..." என்றான் கனகசிங்கம்.

"ஓம்..." என்று சம்மதித்தாள் ராணி.

வீடு நெருங்கி விட்டது.

"தலைவாசலில் லாம்பைக் காணேமே? நூத்து விட்டு சுபத்திரா படுத்திட்டாளோ? நீ போ... நான் உள்ளே போறன்..." என்றாள் ராணி.

கனகசிங்கம் போய்விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மணியை ஒரு கையில் பிடித்தபடி படலையைத் திறந்து கொண்டு உள்ளே சென்ருள் ராணி.

நிலவொளி முற்றத்தில் தெள்ளெனப் படர்ந்திருந்தது

விருந்தையில் இருந்த வாங்கில் கண்மணியை படுக்க வைத்து விட்டு,

''சுபத்திரா ?'' என்று அழைத்தாள்.

பதில் இல்லை சுபத்திரா நல்ல உறக்கம் போலும்.

சிமைக் கிணுவைக்குப் பக்கத்தில் ஐயா வாளி நிறையத் தண்ணீர் அள்ளி வைத்திருந்தார். வீட்டிற்குள் போவதற்கு முன் கைகால் அலம்பி விட்டே செல்லல் வேண்டும் என்பது அவரது சட்டம்.

கால்களைக் கழுவிக் கொண்டாள் ராணி.

வீட்டுக்கதவைத் தட்டிச் சுபத்திராவை எழுப்ப வேண்டும்.

ஆனல் வீட்டுக் கதவு திறந்து கிடக்கிறதே !

ஏதோ ஒன்று மெல்லிய இருளாக அவள் இதயத்தில் குவிந்தது.

''என்ன பெண் இவள் கதவைப் பூட்ட மறந்து ?

ராணி உள்ளே போய் விளக்கை ஏற்றினுள்.

''சுபத்திரா சுபத்திரா ''

சுபத்திராவைப் படுக்கையில் காணவில்லை.

''சுபத்திரா சுபத்திரா...''

இனம் தெரியாத பயம் ராணியைப் பற்றிக் கொண்டது.

''சுபத்திரா '' என்று பெருங்குரலில் அழைத்தாள்

முற்றத்திற்கு ராணி விரைந்து வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன அக்கா ? என்றபடி கிணற்றடிப் பக்கம் இருந்து ஓடி வந்தாள் சுபத்திரா.

''இவ்வளவு நேரமும் எங்கே போனனீ ?''

சுபத்திராவால் உடனே எதுவும் பேச முடியவில்லை

இரவின் நிசப்தத்தில் யாரோ வேலியால் ஏறிக் குதித்து ஓடுவது போன்ற ஓர் சத்தம்.

சுபத்திராவை ஏறிட்டுப் பார்த்தாள் ராணி.

சுபத்திராவின் தோற்றம் வழக்கத்திற்கு மாறாகவே தெரிந்தது.

இவள் பழைய சுபத்திராவல்லள்.

காற்றின் சுழிப்பால் வீட்டிற்குள் ராணி கொளுத்தி வைத்திருந்த விளக்கு, ஒரு கணம் சுடர்விட்டுப் பின் அணைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. நிலைபெயராக் கால்கள்

திருவிழா முடிந்து ஒரு திங்களும் கழிந்து விட்டது ஆனால் அத்திருவிழா இரவு ஏற்படுத்திய சில சம்பவங்களை ராணியால் மறக்க முடியவில்லை. அன்றிரவு சுபத்திரா இருந்த நிலைமை அவளுக்கு இன்றும் புதிராகவே இருந்தது

'இப்பதான் அக்கா கிணற்றடிக்குப் போட்டுவாறன் … …'' என்று சுபத்திரா அன்று கூறியபோது, அவளால் எதுவுமே மேற்கொண்டு கேட்கமுடியவில்லை அடுத்தடுத்த நாட்களிலும் சுபத்திராவிடம் இது குறித்து எதுவுமே கேட்கவில்லை. சுபத்திரா ஏதோ மாபெரும் ரகசியம் ஒன்றைத் தங்களுக்கு தெரியாமல் மறைக்கிறாள் என்ற உணர்வு மட்டும் ராணிக்கு இருந்தது.

சுபத்திரா அடிக்கடி ஏக்கத்தோடு உட்கார்ந்திருப்பதும் ஏதோ மறைத்து மறைத்து எழுதுவதும் ஏன்?

முற்றத்தைப் பெருக்கும் போது இந்த நினைவுகளே ராணிக்கு ஓயாது எழுந்து கொண்டிருந்தன. அவளுடைய பரீட்சைக்கு இன்னமும் பதினைந்து நாட்களே இருந்தன அவளுக்கு பரீட்சையைப் பற்றி எதுவிதமான பயமுமில்லை தெளிவாக அவள் படித்து முடித்திருந்தாள்.

''கட்டாடி…''

வாசலில் யாரோ கூப்பிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உதார் ?" என்று ராணி கேட்டாள்.

படலையைத் திறந்து கொண்டு ஒரு சிறுவன் உள்ளே வந்தான். பக்கத்து வீட்டுப் பையன். பொன் வேலை செய்யும் சுப்பிரமணியத்தின் மகன்

"என்ன தம்பி...?"

"நேற்றைக்குத் தபால்காரன் உங்களுக்கு வந்த இந்தக் கடிதத்தை எங்கடை வீட்டிலே மாறித் தந்திட்டுப் போட்டான்... இந்தாரும் ."

சிறுவன் நீட்டிய கடிதத்தை அவள் நன்றியுடன் வாங்கிக் கொண்டாள்.

அது ஒரு அரசாங்கக் கடிதம். கனகசிங்கத்திற்கு வந்திருந்தது.

இக்கடிதத்தை எதிர்பார்த்தே நேற்று முழுவதும் கனகசிங்கம் அலைந்தான். பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகியிருந்தன. அதனை அறிய ஆவல்

கடிதத்தைக் கண்டதும் ராணிக்குப் புரிந்து விட்டது.

"தம்பி தம்பி " என்று கூப்பிட்டாள்.

அவள் கரம் கடிதத்தை ஆவலோடு பிரித்தது. கனகசிங்கம் ஓடி வந்தான். ராணியின் கண்கள் பரீட்சை முடிவுகளை ஆர்வத்தோடு நோக்கின. மகிழ்ச்சியால் அவள் முகம் மலர்ந்தது

"நீ பாசடா நான்கு 'சி' யும் எடுத்திருக்கிறாய் "

"மெய்யாகவா அக்கா.." என்றவன் "ஆச்சி ஆச்சி" என்று கத்தினான் மகிழ்ச்சியில்,

அடுக்களைக்குள் ஏதோ வேலையாக இருந்த பொன்னு என்னமோ ஏதோ என்று பயந்து போய் ஓடி வந்தாள் கனகசிங்கம் ஓடிப்போய் ஆச்சியின் கைகளைப் பற்றி முற்றத்தில் ஒரு சுற்றுச் சுற்றினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''விடடா .. விடடா . தடியா...'' என்று கத்தினள் ஆச்சி.

கனகசிங்கத்திற்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை

''பார்த்தியாடி சுபத்திரா ..''

''அண்ணை நீ கெட்டிக்காரன் தான் .'' என்று சிரித்தாள் சுபத்திரா.

''கெட்டிக்காரன் என்றல் போதுமா ? உழைக்கிறியே ஒரு பத்து ரூபா காசைக் கொண்டு வந்து தாவன் சந்தோஷம் கொண்டாட...''

சுபத்திரா அறைக்குள் போனள் திரும்பி வரும்போது அவள் கையில் கனகசிங்கம் கேட்ட பணம் இருந்தது.

''இந்தா அண்ணை''

கனகசிங்கம் ஆச்சரியப்படுபவனைப் போலக் கண்களைக் கசக்கினன்.

''ஆகா நான் காண்பது உண்மைதான ..?''

''நீ நாடக வசனம் பேசியது போதும் அவள் தருவதை வாங்கடா...கொண்டு போய் விடுவாள்...'' என்று எச்சரித்தாள் ராணி.

''என் சுபத்திராக் குஞ்சு இருக்க வேணும் . நான் இருக்கவேணும் ..''

அப்போதுதான் வெளியில் இருந்து வேலுப்பிள்ளை வந்தார். விஷயத்தை அறிந்ததும் மகிழ்ந்து போனர்.

''ஆச்சி, நீ என்ன தரப்போகிருய் ?'' என்று கேட்டான் கனகசிங்கம்

ராணி குறுக்கிட்டாள்.

''ஆச்சிக்கு நீ பாஸ்பண்ணியது பிடிக்காதடா ..''

''உவளுக்குக் கனக்கத் தெரியும்... ஆம்பிளைப்பிள்ளையள் நல்லாப் படித்தால் நல்லது தானே! உனக்கு நான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னத்தையடா தர '' என்றபடி சேலைத் தலைப்பில் இருந்த முடிச்சை ஆச்சி பிரித்தாள். அதற்குள் ஐம்பது சதக் குத்திகள் இரண்டு இருந்தன. அவற்றை எடுத்து கனகசிங்கத்திடம் கொடுத்தாள்.

''அண்ணை '' என்று கூப்பிட்டாள் கண்மணி ''வடி வாப் பாரண்ணை பாவேலெண்டு...''

கனகசிங்கம் கோபத்தோடு அவளைத் துரத்தினன். அவள் ஓடிவிட்டாள்.

ராணி குளித்துக் கொண்டிருந்தாள். சுபத்திராவுக்கு இன்று நெசவு வேலையில்லை அவள் பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்தாள்.

''அக்கா நானும் குளிக்க வரட்டுமா ?'' என்றபடி வந்தாள் கண்மணி

''நேற்றெல்லே குளித்தாய் நாளைக்கு '' என்றுகூறி தங்கையை விரட்டிவிட்டாள் ராணி

பாத்திரமொன்று சணீரென நிலத்தில் விழுந்த ஓசை கேட்டது. ராணி திடுக்கிட்டுப் போனவளாகப் பார்த்தாள் சுபத்திரா வேலியை ஒரு கையாலும், தலையை ஒரு கையாலும் பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள்.

''என்ன சுபத்திரா என்ன...?'' ராணி தங்கையை நோக்கி ஓடிச்சென்ருள்.

''தலையைச் சுத்துது. அக்கா சத்தி வருமாப்போலவும் இருக்குது வயிற்றைப் புரட்டுது '' என்று சுபத்திரா வேதனையுடன் கூறினள்

ஓங்காலித்துச் சத்தியெடுத்தாள் அவள். கண்களால் கண்ணீர் ஓடியது.

''ஏதாவது தின்ருயா சுபத்திரா?''

''இல்லையே அக்கா ''

சத்தம் கேட்டு ஆச்சி ஓடி வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உது சரியான பித்தம் குளிப்பு, முழுக்கு, சாப்பாட்டிலை கவனம் இருந்தால்தானே! என்னடி பிள்ளை செய்யுது ?"

சிறிது நேரத்தில் சுபத்திராவுக்குச் சரியாகிவிட்டது. களைத்துப்போய் அவள் வாங்கில் படுத்து விட்டாள்

"கனகசபைப் பரியாரியிட்டை காட்டுவமே...?' என்று வேலுப்பிள்ளை கேட்டார்.

காலை வெயில் ஏறிக்கொண்டிருந்தது. சென்ற இரவு சற்றுக கடுமையாகக் காற்று வீசியதால் வேப்பங்கொப் பொன்று முறிந்து தொங்கிக்கொண்டிருந்தது. அதனை வெட்டி வீழ்த்திக்கொண்டு இரு கூலியாட்கள் நின்றிருந் தார்கள்.

',வேண்டாம் நான் ஒரு குடிநீர் போட்டுக்கொடுக் கிறன் எல்லாம் சரியாகப் போய்விடும் ." என்ருள் ஆச்சி.

பரீட்சை முடிவு வெளியான மகிழ்ச்சியில் எங்கோ போய்விட்டுக் கனகசிங்கம் அப்போதுதான் திரும்பி வந் தான்.

"அக்கா சாப்பாட்டைப் போடு .."

சாப்பாடு பரிமாறிய போது ராணி கேட்டாள்:

"எங்கை உலாத்தி விட்டு வாருய் ?"

'மகாலிங்க மாஸ்டரைக் கண்டுவிட்டு வாறன் அக்கா அவர் மிகவும் மகிழ்ச்சி தெரிவித்தார். தொடர்ந்து படிக் கும்படி கூறிஞர். என்ன உதவியும் தான் செய்வதாகக் கூறிஞர். நல்ல மனிஷன் எல்லாரும் ஒரேமாதிரி நல்லா வாழவேணும் என்று விரும்புகிறவர்."

ராணி மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

"அக்கா, நான் உன்னிடம் வெகு நாளாக ஒன்றைச் சொல்ல வேண்டும் என்றிருக்கிறன்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணியின் மனம் படபடவென அடித்துக்கொண்டது.

என்ன கூறப்போகிருன்?

''என்னடா ?'' என்று கேட்டாள்.

கனகசிங்கம் தலையைக் குனிந்துகொண்டு சாப்பாட்டுக் கோப்பையைப் பார்த்தபடி சிறிது நேரம் இருந்தான்.

''அக்கா, சுபத்திராவை நெசவுக்கு அனுப்பாமல் மறித்து விடுவோமா ..?''

ராணியும் இதைப்பற்றிச் சில நாட்களாகச் சிந்தித்தே வந்திருக்கிருள். வயது வந்த பெண் பிள்ளைகள் ஏதாவது வேலை செய்துகொண்டே இருக்க வேண்டும் சும்மா வீட்டில் குந்தியிருந்தால் உள்ளம் கெட்டுவிடும் என்று அவள் கருதிஞல், கனகசிங்கம் அதே கேள்வியை எழுப்பியுள்ளான்

''ஏன் ? ஏன் அவளை நிறுத்த வேண்டும்...?''

''எனக்கு அவள் நெசவுக்குப் போறது விருப்பமில்லை அக்கா, அவளைப் பற்றிச் சில கதைகள் கேள்விப்படுறன்... பலரும் பலமாதிரிக் கூறுகினம் ..''

ராணிக்கு வயிற்றிலே ஏதோ பற்றியெரிந்தது கனக சிங்கம் தொடர்ந்தான்.

''உண்மை, பொய் எனக்குத் தெரியாது ஆனல் சுபத்திராவின் போக்கு நல்லதாக எனக்குத் தெரியவில்லை .. நெசவாலை அவளை நிற்பாட்டுவதோடு அவன் தயங்கினேன்.

''என்ன தம்பி ?''

''ஐயாவிடம் சொல்லி அவளுக்குக் கெதியில் ஒரு கல்யாணத்தைச் செய்துவை அக்கா.''

அவன் தமக்கையைப் பரிதாபமாகப் பார்த்தான் ஏதோ பேசக்கூடாதவற்றைப் பேசிவிட்டவன் போல அவன் பார்வை இருந்தது.. மன்னிப்புக் கேட்பது போலத் தமைக் கையைப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணை... உன்னை ஆரோ தேடுகினம்..'' என்று கூறியபடி ஓடி வந்தாள் சண்மணி.

கனசிங்கம் சென்றதன் பின் அவனால் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் தலைதூக்கி நின்றன. கனகசிங்கம் தான் நினைப்பது போல உலகம் தெரியாதவனல்லன். சுபத்திராவை நன்கு கவனித்தே வந்திருக்கிறான் அவனது பேச்சிலிருந்து அது நன்கு தெரிகிறதென்பதை ராணி உணர்ந்து கொண்டாள் இரு பெரும் பொறுப்புக்களை அவன் தன் மீது சுமத்திவிட்டுப் போனதை அவள் உணர்ந்தாள்.

சுபத்திராவை வேலையால் நிற்பாட்டுவது ஒன்று. மற்றது அவளுக்குத் திருமணம் செய்து வைப்பது. கனகசிங்கம் நன்கு யோசித்துத்தான் இந்த முடிவைத் தெரிவித்திருக்கிறான் போலிருக்கிறது.

ஐயாவிடம் நான் சொல்வதா? ஒரு பெண் ஆரம்பிக்கக்கூடிய பேச்சா இது ? அதுவும் தமைக்கை இருக்க தங்கைக்குக் கல்யாணமா?

சுபத்திராவிற்குக் கல்யாணம் செய்து வைக்கத் தான் முயன்றால் நிச்சயம் தன் படிப்புச் சரியென்பதை அவள் அறிவாள். ஐயா நிச்சயமாக முதலில் அவளைக் கலியாணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துவார். மேலும் சுபத்திரா சிறிய பெண், அவளுக்கு இன்னமும் வயதுண்டு.

கொஞ்ச நாட்களுக்கு இதைப்பற்றி எதுவும் பேசாது இருப்பதுதான் நல்லதென்று ராணி முடிவு செய்தாள்.

வீட்டில் பெண்களைத் தவிர எவருமில்லை வேலுப்பிள்ளை சலவைத் துணிகளைக்கொண்டு எங்கோ சென்றுவிட்டார். கனகசிங்கமும் வீட்டிலில்லை. ஆச்சி அப்போது தான் சாப்பிட்டுவிட்டு, குட்டித் தூக்கமொன்று போட்டுக் கொண்டிருந்தாள்.

சுபத்திரா வாங்கில் படுத்திருந்தாள். அவளுக்கு அருகில் ராணி அமர்ந்து பேசிக்கொண்டிருந்தாள்.

'சுபத்திரா ;நீ ஏன் இப்ப ஒரு மாதிரி...?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எது மாதிரி அக்கா..?' சுபத்திரா சிரிக்க முயன்ருள்.

''நீ ஏனே முன் போல இல்லை. என்ன கவலை உனக்கு சுபத்திரா?''

''அப்படி எதுவும் இல்லையே அக்கா அப்படி ஏதாவது இருந்தால் உனக்குக் கூறமாட்டனு?''
ராணி சிறிது நேரம் எதுவும் பேசவில்லை

''இப்ப வாமதேவன் உன்னை வழியில் காண்பதில்லையா? முந்தியைப் போல கடிதம் தர ''

சுபத்திரா குறுக்கிட்டாள்

''அவர் முந்திப் போல இல்லை... நான் வழியிலை காணுகிறனன் தன்பாட்டில் போய்விடுவார்.''

சுபத்திரா 'அவர்' என்று வாமதேவனைக் குறிப்பிடுகிருள். தனக்கு ஒரு தரம் கடிதம்தர முயன்றதை அவள் மறந்துவிட்டாள் போலிருக்கிறது. வாமதேவனும் மாறியிருக்கலாம். கோகிலாவின் தொடர்பு அவனுக்கு ஏற்பட்டதன்பின் நல்லவனுக மாறியிருக்கலாம் என ராணி எண்ணினுள்.

''உனக்குக் கோகிலாவைத் தெரியுமா, சுபத்திரா?''

''யார் ? ஓ. கலட்டியிலிருந்து வருமே உன்னேடு அந்தப் பிள்ளையா?''

''ஓம் அந்தப் பிள்ளையைத்தான் இப்ப வாமதேவன் பிடித்திருக்கிருன். பாவம் அந்தப் பிள்ளை.''

''அக்கா '' என்ருள் சுபத்திரா. அவளின் குரலில் அலறல் இழையோடியது.

''என்ன சுபத்திரா என்ன..?'' என்று கேட்டாள் ராணி.

''ஒன்றுமில்லை அக்கா... அது பொய்க் கதையாக இருக்கும்'' என்று சுபத்திரா தன்னைச் சமாளித்துக் கொண்டது போல ராணிக்குப் பட்டது. அது பொயக் கதையாக அல்லது மெய்க்கதையாக இருந்தால் இவளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென்ன? வாய்வரைக்கும் வந்த கேள்வியை ராணி அப்போது சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள்.

வாசலில் யாரோ கனகசிங்கத்தைக் கூப்பிட்டார்கள்

"கனகசிங்கம் வீட்டிலில்லை" என்றபடி ராணி எழுந்து வாசலை நோக்கிப் போனாள். ஓர் ஆடவன் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்

ராணி திகைத்துப் போனாள். அவன் வருவானென்று அவள் எதிர்பார்க்கவில்லை. தன்னைத்தானே ஒருகணம் பார்த்துக் கொண்டாள். தூய்மையான பாவாடை சட்டை தான் அவள் அணிந்திருந்தாள் எனினும் அவன் முன் அந்த உடையோடு நிற்க நேர்ந்தமைக்காக நாணினாள். ஏன் இந்தத் தடுமாற்றம்? அவளையே அவளுக்குப் புரியவில்லை.

அவனும் சற்றுத் திகைத்தது போலவே பட்டது.

"கனகசிங்கம் இல்லையா?" என்று மகாலிங்கம் மெதுவாகக் கேட்டான். முகமெல்லாம் முத்துக்களாக வியர்வை அரும்பியிருந்தது.

ராணியால் உடன் பதில் கூறிவிட முடியவில்லை.

"இல்லை தம்பி வெளியில் எங்கோ போய் விட்டார்" என்றாள் தட்டுத்தடுமாறி.

"இந்தப் போமை அவரிடம் கொடுங்கள். நான் தருவதாகச் சொன்னனான் ."

அவன் நீட்டிய பத்திரங்களை அவள் வாங்கிக் கொண்டாள். வாங்கும் போது கை மெதுவாக நடுங்கியது.

"இது என்ன போம்?" ராணி நாணத்துடன் கேட்டாள்,

"ஒரு ஸ்கொலசிப்பிற்குப் போடச் சொன்னனான்... எஞ்ஜினியரிங்கோஸ்.. ருஷியாவில் படிக்கலாம். கட்டாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகசிங்கத்திற்குக் கிடைக்கும். கனகசிங்கம்தான் இதற்குத் தகுதி நான் வாறன். மறக்காமல் கொடுங்கோ '

அவன் விடைபெற்ருன்.

'தாங்ஸ்' என்ருள் ராணி.

அவன் போகும்போது மெதுவாக அவளைத் திரும்பிப் பார்த்தான்.

அவள் அந்த இடத்திலேயே சிலையென நின்றிருப்பது தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. நீண்ட இரவு

கல்லூரி இடைநேர ஓய்வுக்கான மணி ஒலித்தது.

ஒருவாரத்துள் பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்து போயின. இராசு அண்ணன் கார் வாங்கத் தந்தையிடம் வாங்கிய பணத்தில் இரண்டாயிரம் ரூபாவைத் திருப்பிக்கொடுத்து விட்டான்.

''தங்கச்சிமாரின் கல்யாணத்துக்காக நீங்க சேகரித்து வைத்திருந்த பணத்தை நான் பாழாக்கமாட்டன் ஐயா மிகுதியையும் கெதியாகத் தருவன்' என்று உறுதி கூறினன்

மல்லாகம் சிவக்கொழுந்து மாமாவும் இருந்தாற் போல மயங்கி விழுந்தவர், இரு நாட்களுள் உயிர் நீத்து விட்டார், வேலுப்பிள்ளையின் குடும்பம் சாவீட்டிற்குப் போய்வந்தது. ஆச்சி ஓயாமல் தமையனை எண்ணிப் புலம்பினள். இடையிடையே ராணியையும் திட்டினள்.

'உன்னைத் தன்னுடைய மருமோளாகக் கொள்ள இருந்தார்ரே... நீ கெடுத்திட்டியே' என்று ஒப்பாரி வைத்தாள்.

சுபத்திராவுக்கு உடல்நலம் நன்ருகவில்லை மீண்டும் இருதடவைகள் சத்தியெடுத்தாள் எந்த வைத்தியரிடமும் சென்று மருந்து வாங்க மறுத்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கென்ன... ஒன்றுமில்லையே! இதுக்கேன் மருந்து? என்று பிடிவாதம் பிடித்தாள்.

சுபத்திரா ஒரு பிடிவாதக்காரி.

நேசவுக்கு ஒவ்வொரு நாளும் தவறுது போய் வந்தாள் கனகசிங்கம் ஒரு நேர்முகப் பரீட்சைக்காகக் கொழும்புக்குப் போய் வந்தான்.

'எனக்கு ஸ்கொலசிப் நிச்சயமாகக் கிடைக்கும் .... அக்கா, நான் வெளிநாட்டுக்குப் போய் என்ஜினியராகத் தான் வருவன்' என்று சபதம் கூறினான்.

கல்லூரியிலும் பரீட்சை நெருங்க நெருங்க மாணவிகள் சுறுசுறுப்பாகப் படித்தார்கள்.

'என்ன ராணி யோசனை ?' என்று அழைத்தபடி கோகிலா வந்தாள்.

ராணிக்கு அருகில் அமர்ந்து கொண்டாள். கோகிலா படிப்பில் முன்போல அக்கறையாக இல்லை.

அவளுடைய உலகம் தனியானது ஏகாந்தமானது.

'ஒன்றுமில்லை, நீர் நல்லாப் படிக்கிறீர் போலிருக்குது ' என்றாள் ராணி.

'பகிடி பண்ணுறீர், என்ன? ஆர் படிக்கிறது... இன்னமும் கூடினால் பதினைந்து நாளைக்குத்தான் பள்ளிக் கூடத்திற்கு வருவன் '

ராணி அவளை வியப்போடு பார்த்தாள்.

'ஏனப்பா?'

கோகிலாவை வெட்கம் சூழ்ந்து கொண்டது

'ஒன்றுமில்லையப்பா... எனக்கு கல்யாணம் நிச்சயமாகி விட்டது. நேற்றுத்தான் முற்றுகி நாள் வைத்தார்கள்.

'அப்படியா? சந்தோஷம் கோகிலா ஆர் மாப்பிள்ளை ...?'

'அவர்தான் .'

'வாமதேவனா?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா நாணத்தோடு தலையை ஆட்டினாள். கலியாண நினைவு பெண்களை எவ்வளவு தூரம் பூரிக்க வைக்கின்றது. என்றுமே காணாத மலர்ச்சியும், பூரிப்பும் ஒருங்கே கூடியதால் புது மலராகக் கோகிலா காட்சியளித்தாள் கண்களில் இன்ப நினைவுகளின் கருங்கோடுகள் படர கன்னங்கள் பூரித்திருக்க அவள் தலையை ஆட்டினாள்.

'எல்லாம் முற்றாகிவிட்டதா?''

''ஓம்..''

''அம்மா மறிச்சவதான், ஆறுப் பள்ளிக்கு வராவிடில் அவரைப் பார்க்க முடியாதே!''

''நீர் சரியான ஆளப்பா'' என்று ராணி தன் தோழியின் சாமர்த்தியத்தை மெச்சிக்கொண்டாள்.

கல்லூரி மணி அடித்தது. வாமதேவனைப் பற்றி அவள் எண்ணியது தவறாகத்தான் போய் விட்டது. அவன் கோகிலாவை ஏமாற்றிவிடுவான் என்றே ராணி எண்ணியிருந்தாள். அவள் ஏன் அப்படி எண்ணினாள் என்பது அவளுக்கே புரியவில்லை

சுபத்திராவுக்கு அவன் கடிதம் கொடுக்க முயன்றான் என்பதைக்கொண்டுதான் அவள் வாமதேவனை வெறுத்தாள். ஒருவகையில் பார்த்தால் வாமதேவன், சுபத்திராவை உண்மையில் விரும்பியிருக்கலாம்; ஆனால் அது நிகழக்கூடியதுதானா? சண்டைக்காரக் கந்தையர் ஒரு கட்டாடியின் மகளைப் பெண்கொள்வாரா?

தனக்குள் இரத்தத்தோடு ஊறியுள்ள தாழ்வு மனப்பான்மையை ராணி பல தடவைகள் உணர்ந்திருக்கின்றாள்; அந்த மனப்பான்மையை அவளால் போக்க முடியவில்லை. அம்மனப்பான்மை நீங்க வேண்டுமானால் அவளது சமூகம் பல வழிகளிலும் உயரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை வீட்டில் ஒரு பூகம்பம் நிகழ்ந்தது. கல்லூரியிலிருந்து ராணி அப்போதுதான் வீட்டிற்கு வந்திருந்தாள். அவள் வந்த சிறிது நேரத்தின் பின் சுபத்திராவும் சோர்ந்து போய் வீட்டிற்கு வந்தாள். வந்தவள் தலையிடிப்பதாகக் கூறிவிட்டு, படுத்துவிட்டாள்.

அந்த நேரம்தான் கனகசிங்கம் சைக்கிளில் வந்து இறங்கி, ''எங்கே சுபத்திரா?'' என்று அதட்டியபடி உள்ளே வந்தான்.

கனகசிங்கத்தின் கேள்வி என்றுமில்லாதவிதத்தில் ஆத்திரத்தோடு ஒலித்தது. அவனது முகத்தோற்றமும் மாறியிருந்தது. வேகமாக வந்தவன், 'ஏ சுபத்திரா.'' என்று குரலிட்டு அழைத்தான்.

''என்னடா?'' என்றபடி ராணி வந்தாள்.

கனகசிங்கத்தின் முகத்தில் கோபக் குறிகள் தெரிந்தன. வெறி பிடித்தவன் போல அவன் நின்றிருந்தான்.

''எங்கை அக்கா, அந்த மூதேசி நாய் ?

சுபத்திரா வெளியே வந்தாள்.

''ஏய் உனக்குத்தான் சொல்லுறன். நீ இனி நெசவுக்குப் போறதை விட்டிடு. உன்ர ஆட்டம் ஒன்றும் ஒருவருக்கும் தெரியாதென்று நினைச்சியாடி... எளிய நாய் .. எங்கட பெயரைக் கெடுக்க வந்திட்டியே?''

சுபத்திரா ஒருகணம் விக்கித்துப் போய் நின்றாள். ராணியாலும் உடன் எதுவும் பேசமுடியவில்லை. சுபத்திராவின் விழிகள் சிவந்தன.

''நான் போவன்'' என்றாள்.

கனகசிங்கம் எப்படி அவள் மீது பாய்ந்தான், பளார் பளாரென்று அறைந்தான் என்பதை ராணியால் அனுமானிக்க முதலே அவ்வளவும் நிகழ்ந்துவிட்டன.

மண் தரையில் விழுந்து கிடந்தாள் சுபத்திரா.

''டேய்... டேய்...'' என்று அவனைப் பிடித்தாள் ராணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயோ அவள் தலையிடி என்று கிடந்த நேரம் பார்த்து ஏன் அடிக்கிறாய்'' என்று ஆச்சி ஓடிவந்தாள்.

நிலத்தில் கிடந்த சுபத்திரா விருட்டென எழுந்து நின்றாள். அவளைப் பார்க்கவே பயமாக இருந்தது.

''நான் போவன்... நான் போவன்... என்னைக் கொன்றாலும் நான் போவன் நீ ஆர் அதைக் கேட்க ?'' சுபத்திராவின் குரலில் வஞ்சினம் கொப்பளித்தது

கனகசிங்கம் மீண்டும் அவளை அடிக்கப்பாய்ந்தான்

''டேய் தம்பி...'' என்று ராணி அதட்டினாள்; ''இதெல்லாம் என்ன''

''என்னவா அக்கா... தெரியாமல்தான் கேட்கிறியா? கலட்டி முழுவதும் இவளைப் பற்றித்தானே கதைக்குது .. இந்த ஆட்டக்காரியின்ர கதையாத்தானே இருக்குது... வாமதேவனுக்கும் இவளுக்கும்...''

''பொய்'' என்று வீரிட்டாள் சுபத்திரா.

''எதடி பொய்? இன்று அந்த ஒழுங்கை முகட்டில் நீயும், வாமதேவனும் கதைச்சுக் கொண்டு நின்றது பொய்யா? என்ரை கண்ணாலை கண்ட நான்.''

கனகசிங்கம் திண்ணையில் பொத்தென அமர்ந்து கொண்டான். சிவந்த அவன் கண்கள் கலங்கித் தவித்தன.

''இவள் இப்படியெல்லாம் நடப்பாளென்று நான் நினைக்கவில்லை அக்கா.'' கனகசிங்கம் விம்மி விம்மி அழுதான்.

ஆச்சி ஒரு புறத்தில் தலையில் கைவைத்து ஒப்பாரி வைத்தாள்.

★

பொல்லாத இரவு. ராணியால் தூங்கவே முடியவில்லை. கனகசிங்கம் சொன்னவையெல்லாம் உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானு? உண்மையென்றால் இதன் பின்னால் நிகழப்போகும் அனர்த்தங்களைத் தடுத்து நிறுத்த யாரால் முடியும்?

வாமதேவன் கடிதம் கொடுக்க முயன்றான் என்ற காரணத்துக்காகக் கல்லூரிற்குப் போக மறுத்த சுபத்திராவா இப்படி நடந்துகொள்வாள்? வாமதேவனின் குணங்களை நன்கு தெரிந்துகொண்ட சுபத்திரா அப்படி ஒருக்காலும் நடக்கமாட்டாளே?

இதில் ஏதோ தவறிருக்க வேண்டும்.

''அப்படியில்லை, இதெல்லாம் பச்சைப் பொய்...'' என்று சுபத்திரா வீரிட்டாளே?

சிலவேளை உண்மையாக இருந்துவிட்டால் . ஐயோ கடவுளே!

நினைக்கவே ராணிக்கு உடம்பு நடுங்கியது.

சுபத்திராவின் வாழ்வு. என்னவாகும்? சுபத்திராவை ஏற்றுக்கொள்ள வாமதேவன் முன்வருவானு? கந்தையர் சம்மதிப்பாரா? ஒரு கட்டாடியின் மகளை வாமதேவன் மணமுடிப்பானு?

சமூகக் கட்டுப்பாடுகள் உணர்வுகளைக் கூடவா கட்டுப்படுத்துகின்றன?

உண்மையாக இருந்தால் சுபத்திராவை வாமதேவன் ஏற்கத்தானே வேண்டும். அது செயலாகக் கூடியது தானு?

அன்று கல்லூரியில் கோகிலா கூறிய செய்திகள் நினைவில் எழுந்தன. கோகிலாவிற்கும், வாமதேவனுக்கும் கலியாணம் நிச்சயமாகிவிட்டது. ஒருவேளை இக்கலியாணமே சுபத்திரா, வாமதேவன் தொடர்பின் எதிரொலிதானே?

வெளியே இருள் கவிந்து கிடந்தது. சிறிய யன்னலின் ஊடாகத் தாரகைகள் கண் சிமிட்டின. ராணி ஒரு கணம் கண் இமைக்காது அவற்றைப் பார்த்தாள்.

இருண்டவானைக் கிறியபடி ஒரு நட்சத்திரத்தின்வால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகணம் நீண்டு ஒடுங்கியது. தூரத்தில் கலவாய்க் குருவி ஒன்று ஓலமிட்டு ஓய்ந்தது.

ராணி சுபத்திராவின் படுக்கையைப் பார்த்தாள். அவளுடல் குலுங்குவது தெரிந்தது. சுபத்திரா அழுகின்றாளா? அந்தப் பேதைப் பெண் அழுவதைக்காண ராணியால் பொறுக்க முடியவில்லை. மெதுவாக எழுந்துபோய் தங்கையின் அருகில் அமர்ந்தாள்.

''சுபத்திரா... தங்கச்சி...''

தமக்கையின் அழைப்பு சுபந்திராவுக்குக் கேட்டது. அவள் தலையைத் திருப்பி ஒரு விநாடி ராணியைப் பார்த்தாள்.

''அக்கா'' என்று அழைத்தபடி ராணியின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

சகோதர உறவின் பாசமும் தாய்மையின் அன்பும் நிறையத் தங்கையின் முதுகை வருடிவிட்டாள் ராணி. அவள் விழிகளும் கலங்கின.

''சுபத்திரா .. சுபத்திரா... ''

சுபத்திரா ஓயாது அழுதாள். ராணி அவளைத் தேற்ற இயலாது சிலையென இருந்தாள். அழுது ஓய்வது மனதிற்கு நிம்மதியைக் கொடுக்குமென ராணி நினைத்தாள்...

நீண்ட பொழுது கழிந்தது.

சுபத்திரா மெதுவாக முகத்தைத் திருப்பி தமக்கையைப் பார்த்தாள். வீங்கிச் சிவந்த அவளின் விழிகள் ராணியிடம் எதையோ யாசித்தன. அவள் உதடுகள் நிலை கொள்ளாது தவித்தன.

''அக்கா, அக்கா'' எனவிழித்தாள்; ''அதையெல்லாம் நீ நம்புகிறாயா அக்கா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எதைச் சுபத்திரா?''

''அண்ணன் கூறிய கதையை!''

தன்னிடமிருந்து சுபத்திரா எத்தகைய பதிலை எதிர் பார்க்கிறாள் என்பது ராணிக்குத் தெரியவில்லை.

''நான் நம்பவில்லை. சுபத்திரா... உன்னை எனக்குத் தெரியாதா?''

சுபத்திரா விக்கித்துப் போனவள் போல ராணியை பார்த்தாள், சிறிது நேரம் முகட்டைப் பார்த்தபடி இருந்தாள். மீண்டும் விழிக் குளங்கள் உடைப்பெடுத்தன.

''அவை உண்மைதான் அக்கா...'' என்றாள் சுபத்திரா.

சுடு நெருப்பை மிதித்தவள் போல ராணி ஒருகணம் நிலைகுலைந்து போனாள். என்ன நடந்தது? எதுவும் உடன் புலனாகவில்லை. பொய்யாக இருக்கலாமென்ற நம்பிக்கையின் பிடிப்பும் அறுந்துபோய்விட்டது.

''சுபத்திரா'' என்று அவளால் அழைக்க முடிந்ததே தவிர வேறொன்றும் பேசமுடியவில்லை.

மடைதிறந்த வெள்ளமாக சுபத்திரா ஏதோவெல்லாம் கூறினாள். வாமதேவனைத் தான் முதலில் வெறுத்த கதையைச் சொன்னாள். பின் அவன்மீது அன்பு பிறந்த கதையைச் சொன்னாள்.

''நாங்கள் கடிதங்கள் பரிமாறிக்கொண்டோம். சந்தித்துக்கொண்டோம். என்னைத் தவிர வேறொருத்தியை அவர் கலியாணம் செய்யமாட்டார்.... அக்கா எனக்குச் சத்தியம் செய்து தந்துள்ளார்.''

ராணியின் உதடுகளிடையே வேதனையின் கோடுகள் விரிந்தன. பேதைப் பெண்ணே ஏமாந்து போனாயே! உன்னைப் போல எத்தனை பேருக்கு அவன் அதே சத்தியத்தை கொடுத்தானோ? அவளது இதயம் குமுறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அக்கா, என்று உலுக்கினுள் சுபத்திரா.''

ராணி கண்ணீர்விட்டாள்.

''கொஞ்சமாவது சிந்தித்தியா சுபத்திரா? நடக்கக் கூடியதா இது? வாமதேவன் எங்கே? நாமெங்கே? உனக்கு கணவனுக வரக்கூடிய தகுதி வாமதேவனுக் உண்டா? அல்லது சுந்தையரின் குடும்பத்தில் நீ போவது நடக்கக் கூடியதுதானு?'' பொலபொலவெனப் கண்ணீர் வடியக் கேட்டாள் ராணி,

''தூய்மையான காதலுக்கு சாதி குறுக்கிடாது சுபத் திரா நீ மட்டும் ஆசைப்பட்டு என்ன பயன்?'

''அவரும் என்னை விரும்புகிருர் அக்கா.''
ராணி வேதனையோடு சிரித்தாள்.

''சுபத்திரா நீ ஏமாந்து போனுயடி. வாமதேவனுக் கும், கோகிலாவுக்கும் கலியாணம் நடக்கப் போகுது... உனக்குத் தெரியாதா?''

சுபத்திரா ராணியைத் திகைப்போடு பார்த்தாள். ஓராயிரம் பேய்கள் அவள் முகத்தில் அறைந்தனவோ?

''அக்கா...'' சுபத்திராவின் ஓலம் நெஞ்சைப் பிழிந் தது.

''உண்மையை மறைக்க முடியுமா சுபத்திரா? அவன் வேறெருத்தியைக் கலியாணம் செய்துகொள்ளப் போ ருன். உனக்குச் சொல்லுறன் நடந்தவற்றை மறந்து விடு. வாமதேவனை மறந்துவிடு.''

''நடந்தவற்றை மறந்துவிடலாம் அக்கா. ஆனுல்... ஆனுல்...

''என்ன சுபத்திரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னை நான் எப்படியக்கா மறைத்துக்கொள்வது இந்த மாதம் நான் முழுகவில்லையே, அக்கா."

ராணியின் இதயம் பிளந்தது. அவளது மண்டைக்குள் எண்ணற்ற எரிமலைகள் வெடித்துச் சிதறின.

"அடி பாவிப் பெண்ணே?" என்று ஓலமிட்டாள் ராணி.

அன்று இரவு அந்த வீட்டில் இரு இளம் பெண்கள் நித்திரையின்றி அழுது கொண்டிருந்தார்கள்.

இரவு நீண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. உண்மையின் குரல்

**மா**ரி மழை பொழியத் தொடங்கிவிட்டது. சற்றுப் பலமான காற்றின் சுழற்சியும் இடையிடையே நிகழ்ந்தது. மூன்று நாட்களாக இடைவிடாத மழை நில மகளைத் தழுவ விரைந்தது.

வேலுப்பிள்ளை வீட்டுக் கிணறு அரைவாசிக்கு மேல் நிறைந்துவிட்டது. வண்ணார்பண்ணையில் கலட்டியிலே கிணறுகள் மிக ஆழமானவை. ஒரு வாளி தண்ணீரை அள்ளி உடம்பில் ஊற்றிவிட்டு மறு வாளியை அள்ளு முன் உடல் காய்ந்துவிடும்.

மூன்று நாட்களாக அந்த வீட்டில் இரு பெண்களும் பேயறைந்தது போல் இருந்தார்கள். சுபத்திரா படுக்கையிலே கிடந்தாள். ராணி மனதுக்குள் குமைந்தாள்.
கனகசிங்கம் அதன் பின் எதுவுமே பேசவில்லை.

மழை ஓயாது பெய்துகொண்டிருந்தது.

கரி கொண்டுவரும் சின்னச்சியின் பள்ளக் காணி வெள்ளத்துள் மூழ்கிவிட்டது. அவளது வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகள் யாவும் வெள்ளத்துள் அமிழ்ந்து போயின. கள்ளிறக்கும் தொழிலாளர் வாழ்கின்ற பகுதி அது. வெள்ளத்தில் அவர்களது மண் குடிசைகள் யாவும் கழுவுண்டு போயின;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கலட்டிப் பள்ளிக்கூடத்திற்கு அகதிகளாகக் குடி பெயர்ந்தனர். அப்பரிதாபத்திற்குரிய மக்களின் நலன் தேடும் நல்லவர்களின் முதல்வனாக மகாலிங்கம் முன்னின்று உழைத்தான். கனகசிங்கமும் தனது பொழுதில் பெரும் பகுதியை மகாலிங்கத்துடன் கழித்தான்.

ஒவ்வொரு வீடு வீடாகவும், கடை கடையாகவும் சென்று மகாலிங்கமும் நண்பர்களும் நன்கொடை வசூலித்தார்கள். இரவு பகல் தூக்கமின்றி வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களின் நலனுக்காக மகாலிங்கம் உழைத்தான். பேய் மழை காரணமாகக் கல்லூரிகளில் விடுமுறை விட்டிருந்தார்கள்.

மகாலிங்கமும் நண்பர்களும் ராணியின் வீட்டிற்கும் வந்திருந்தார்கள். அப்போது வேலுப்பிள்ளை வீட்டில் இருந்தார். மகாலிங்கம் மனமுருகப் பேசினான்.

''வெள்ளத்தால் மக்கள் பலர் இருக்க இடமின்றி உண்ண உணவின்றித் தத்தளிக்கிறார்கள்.. அவர்களுக்கு உங்களாலான உதவிசெய்யவேண்டும் அது உங்கள் கடமை'' என்றான்.

வேலுப்பிள்ளை மௌனமாகச் சில்லறைகளைப் பொறுக்கி எடுத்துக் கொடுத்தார்.

கனகசிங்கமும் ஒரு மூன்றும் மனிதனாக அவர்களுடன் வந்திருந்தான். அவனுடைய தோளில் ஒரு சாக்கு மூடை இருந்தது. இன்னும் ஒரு சிலரும் சாக்குமூடை வைத்திருந்தார்கள். அவற்றுள் அரிசி, தேங்காய் காய் கறி என்பன இருந்தன.

ராணி அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தாள். பிறருக்காகத் தங்களது நேரத்தையும், உழைப்பையும் செலவிடும் அவர்கள், அவளுக்கு மிக உயர்ந்தவர்களாகத் தெரிந்தனர்.

மகாலிங்கம் தலைவனாக நின்றிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை செய்த உதவி போதாதென அவளுக்குப் பட்டது.

அவர்கள் போகத் திரும்பினர்.

''தம்பி... நில் '' என்று ராணி அழைத்தாள். கனகசிங்கத்திற்கு விடுக்கப்பட்ட அந்த அழைப்பைக். கேட்டு எல்லோருமே. நின்றனர். மகாலிங்கம் திரும்பி அவளைப் பார்த்தான்.

அவள் அறைக்குள் போனாள். அவள் திரும்பி வரும் போது அவளது கரத்தில் பெரியதொரு சல்லி முட்டி இருந்தது. என்ன நிகழப் போகிறதென்பதை வேலுப் பிள்ளை உணர்ந்துகொண்டார்.

''தங்கச்சி .. அது திருவிழாவிற்காகச் சேர்க்கும் காசு ''

ராணி தகப்பனை நோக்கிப் புன்னகைத்தாள்.

''அதிலென்ன ஐயா, இதற்கில்லாதது திருவிழா விற்கு ஏன்? அம்மாள் மன்னிப்பாள் ..''

வேலுப்பிள்ளை பின் எதுவுமே பேசவில்லை. ராணி எதையும் உணர்ந்தே செய்வாள் என்பது அவருக்குத் தெரியும்.

சல்லி முட்டியைக் கனகசிங்கத்திடம் கொடுத்தாள் ராணி.

''அதில் ஐம்பது ... அறுபது ருபாவரை இருக்கும்'' என்றார் வேலுப்பிள்ளை.

''அது பெரிதில்லை...உங்கள் மனந்தான் பெரிசு...''என்றான் மகாலிங்கம்.

அவருக்குத்தான் மகாலிங்கம் கூறினனா? அல்லது ராணிக்குத்ததான் கூறினனா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★

மழை ஓய்ந்து வானம் வெளுத்தது.

ராணியின் மனதில் அமைதியில்லை சுபத்திராவை எண்ணுந்தோறும் பயங்கரமான காட்சிகள் மனதில் விரிந்தன சுபத்திராவின் எதிர்காலம்?

முள் வந்து வாழையிலையைக் கிழித்தால் என்ன, வாழையிலைபோய் முள்ளில் கிழிந்தால் என்ன? நஷ்டம் வாழையிலைக்குத்தானே!

நான்கு நாள் யோசனையின் பின் ராணி ஒரு முடிவிற்கு வந்தாள். தந்தையிடம் நடந்தவற்றைக் கூறி, நல்ல முடிவொன்றை எடுக்க வேண்டும். கந்தையர் மறுத்தாலும் மகாலிங்கம் இந்தக் கொடுமையைப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டான் என்று அவளின் அந்தராத்மா கூறியது

காலம் கடந்துவிடவில்லை .. !

வெளியே போன வேலுப்பிள்ளை திரும்பி வந்தார்

''தங்கச்சி உனக்கொரு புதினம் தெரியுமோ? ..' என்று ராணியைக் கேட்டார்.

அவள் தந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

''இன்றிரவு கந்தையர் வீட்டில் கலியாணம் ஒன்று இருக்குதாம்... மூத்த மகனுக்குத்தானாம். சும்மா சோறு கொடுத்துவிடப் போகினமாம் .. குடும்பக் கட்டாடிக்குக் கூடச் சொல்லி அனுப்பவில்லை. விதானையார்தான் கோயிலடியில ஒரு மாதிரிக் கேட்டார் .. மாற்றங்கள் எங்கள் பக்கம் இருந்து மட்டும் கிளம்பவில்லை பிள்ளை, அவங்களும் வழக்கங்களைப் படிப்படியாகக் கைவிட்டு வாருங்கள்.. ...''

''விதானையார் என்ன சொன்னவர், ஐயா ?''

''என்ன வேலுப்பிள்ளை, கந்தையர் வீட்டில் கலியாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாம் . உனக்குச் சொல்லவில்லையே? உனக்கேன் சொல்லப் போகினம்? '' ஏன் கந்தையர் ஒருவருக்கும் தெரியாமல் ரகசியமாகச் செய்றாரோ தெரியவில்லை . என்றார்...''

ராணி திகைத்துப்போய் நின்றாள். வயிற்றில் அனல் வீசி எரிவதுபோல் இருந்தது. மண்டை பிளந்துவிடும் போல நரம்புகள் விம்மின. சுபத்திராவின் கதி இனி என்ன? விதானையார் ஒரு மாதிரி ஏன் கேட்க மாட்டார்? கந்தையா இரகசியமாகக் கலியாணத்தை முடித்துவிடக் காரணம்?... சுபத்திரா தான்.

ராணிக்குத் தலை சுற்றியது. மயக்கம் வந்து விழுந்து விடுவாள் போலிருந்தது. தலைவாசல் தூணை இறுக்கமாகப் பற்றிக்கொண்டாள்.

மகளின் தடுமாற்றத்தை வேலுப்பிள்ளையும் கண்டார். ''பிள்ளை .. பிள்ளை .. என்ன?'' என்று பதறியபடி மகளை அணைத்துக்கொண்டார்.

கணப் பொழுதில் ராணி தன்னை சுதாகரித்துக் கொண்டாள் இனி மறைப்பதில் பிரயோசனமில்லை. சொல்லியே தீரவேண்டியதுதான். அதனால் ஏற்படும் பிரதிபலன்களை அனுபவித்து தீரவேண்டியதுதான்!

உண்மையை அவர் அறியும்போது என்ன நிகழுமோ? சுபத்திராவின் வாழ்வு ?

''ஐயா ஐயா '' என்று ராணி விம்மி விம்மி அழுதாள். வேலுப்பிள்ளைக்கு ஒன்றுமே புரியவில்லை ஆச்சி பதறிக் கொண்டு ஓடிவந்தாள். கண்மணி ''அக்கா'' என்று அவளைக் கட்டிக்கொண்டாள்.

''என்ன பிள்ளை என்ன?...'' வேலுப்பிள்ளை பதறினார் ராணி கூறினாள்; யாவற்றையும் கூறினாள். வாமதேவனுக்கும், சுபத்திராவுக்கும் இடையிலிருந்த உறவுகளையும் கூறினாள். சுபத்திரா தாயாகப் போகும் செய்தியையும் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுப்பிள்ளை ஏன் கல்லாகச் சமைந்துவிட்டார்?

''ஐயா... ஐயா ?''

பயந்துபோய்த் தகப்பனை உலுக்கினாள் ராணி.

நீண்டதொரு துயரக் கனவினைக் கண்டவர் போல அவர் விழித்துப் பார்த்தார். திடீரென அவரின் உடல் நடுங்கியது. வாய் குளறியது விழிகள் கண்ணீரை அருவியாகக் கொட்டின.

''நான் இனி என்ன செய்யப்போறன்...?'' — கரங்களால் தன் முகத்தில் அவர் அறைந்துகொண்டார்.

தந்தை அழுததை எவருமே இதுவரை கண்டதில்லை அன்றுதான் கண்டார்கள்.

ராணி பாய்ந்து சென்று தகப்பனின் கரங்களை ஆதரவோடு பற்றினாள்.

''என்னை விடு, பிள்ளை...'' என்று வேலுப்பிள்ளை அலறினார்; ''என் குடும்பமே பாழாகிவிட்டது.. எடியேசுபத்திரா, நீ என்ன வேலையடி செய்து விட்டாய்...?''

அறையினுள்ளிருந்து சுபத்திராவின் விசும்பல் கேட்டது. அது ஓலமாக மாறியது.

''என்னைக் கொன்றுவிடு, ஆச்சி..'' என்று அவள் கத்துவது கேட்டது. ஆச்சியின் கரத்திற்கு அவ்வளவு வலிமையா? ஆச்சியின் அடிகளைத் தாங்க முடியாமல் சுபத்திரா துடித்தாள்.

என்றுமில்லாத புதினமாக வேலுப்பிள்ளையின் வீட்டில் எழுந்த கூக்குரலால் அயலவர்கள் கூடிவிட்டார்கள். வேலுப்பிள்ளை விறுக்கென எழுந்தார்.

''அவள் மட்டுமேன் சாகவேணும்... அவனும் தான் சாகவேணும்...!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயா...ஐயா...'' என்று மறித்தாள் ராணி.

''என்னை விடு பிள்ளை .. வண்ணாத்தியைக் கெடுத்து விட்டு அவனுக்கு வேறொரு கலியாணமா...? அதையும் பார்த்து விடுவம் ,,

படலையைத் திறந்துகொண்டு வேலுப்பிள்ளை வெளியே பாய்ந்தார்.

★

நரியன் குண்டு வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது: காலம் காலமாகக் குண்டின் கரையில் தவம் இயற்றும் அரச மரம் மெல்லிய காற்றினால் சர சரவென்று ஒலி எழுப்பியது.

கந்தையர் வீட்டு வாசலில் குலை வாழைகள் இரண்டு கட்டப்பட்டிருந்தன. நன்கு கனிந்த குலைகள். சிறு அலங்காரமும் செய்யப்பட்டிருந்தது. வாசலில் ஓரிருவர் நின்றிருந்தனர்.

ஏதோ அலுவலாக வாசலுக்கு வந்த வாமதேவன், தூரத்தில் வேலுப்பிள்ளை வீடு நோக்கி வருவதைக் கண்டு திரும்பவும் உள்ளே போய்விட்டான்.

வேலுப்பிள்ளையின் கால்கள் விரைந்து நடந்தன. நரியன்குண்டை அவர் வெறித்துப் பார்த்தார். பேறு மாதக் கர்ப்பிணி போல அது நிரம்பி வழிந்தது

சலசலக்கும் அரசமரம் அவரது துயரைக் கொழுந்து விட வைத்தது. பெரிய தம்பிரான் கோயில் அவரது கண்களில் பட்டது. கந்தையர் வீட்டில் நுழைய முயன்ற கால்கள் கோயிலை நோக்கித் திரும்பின .

கோயிலின் வெளி விறாந்தையில் கட்டாக்காலி மாடுகள் இரண்டு படுத்துக் கிடந்து அசை போட்டுக்கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுப்பிள்ளை கோயிலின் தூணோடு சாய்ந்து அமர்ந்து கொண்டார்.

''கடவுளே, நான் என்ன செய்வேன் ?''

உதடுகள் மீண்டும் துடித்தன. விழிகள் கண்ணீரைச் சொரிந்தன. நீண்ட நேரம் அவ்வாறே அமர்ந்திருந்தார்.

இருள் மெதுவாகக் கவியத் தொடங்கியது.

வீதியில் கார் ஒன்று விரைந்து திரும்பியது. அது எழுப்பிய சத்தத்தால் அவர் சுய நினைவுக்கு வந்தார்

''நான் வந்த காரியயம் என்ன...?''

''இங்கே ஏன் தாமதிக்கிறன்...?''

வேலுப்பிள்ளையின் கண்கள் கந்தையரின் வீட்டை நோக்கின. விரைவாக எழுந்து நடந்தார்.

வீட்டிற்குள் நுழையும்போது வாசலில் யாரோ அவரை அழைத்ததுபோல இருந்தது. அதையும் கவனி யாது உள்ளே போனார்.

''வா வா... வேலுப்பிள்ளை .. நீயும் கேள்விப்பட்டு வந்திட்டாய்...'' என்று கந்தையர் வரவேற்றார். வேலுப் பிள்ளையின் விழிகள் கந்தையரின் முகத்தை நோக்கின பார்வையின் வெறியைத் தாங்கமுடியாது கந்தையர் முகத் தைத் திருப்பிக்கொண்டார்.

''கேள்விப்பட்டுத்தான். வந்திருக்கிறன் . இது உங்க ளுக்கே நல்லா இருக்கா...?'' வேலுப்பிள்ளை குமுறினார்.

''எதைச் சொல்கிறாய் .?''

வேலுப்பிள்ளையின் திடீர் வரவின் அர்த்தத்தைப் பலர் புரிந்துகொண்டார்கள் போலும். கந்தையரைப் பலர் சூழ்ந்துகொண்டனர். வேலுப்பிள்ளை ஒரு கணம் சுற்று முற்றும் பார்த்தார்.

அங்கு நீதி தெரிந்த அவன் இல்லை.

மகாலிங்கம் அங்கு இல்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எதையா...? உங்களுக்குத் தெரியாமலேயா கேக்கிறியள்...?'' — வேலுப்பிள்ளையின் விழிகள் கலங்கின; ''உங்களைக் கும்பிட்டுக் கேக்கிறேன் ஐயா, என் மகளின் வாழ்வை பாழாக்கி விடாதீர்கள். அவளைக் கெடுத்து விட்டு வேருெருத்தியைக் கட்டி வைப்பது நீதியில்லை ஐயா...''

கந்தையரின் முகத்தில் மாறுதல்கள் தோன்றின அவர் ஏதோ சொல்ல முயலுமுன் அவரின் மனைவி குறுக்கிட்டுக் கத்தினுள்.

''கட்டாடி, உன்ர மோள்தான் என்ர பிள்ளையைப் பழுதாக்கிப் போட்டாள் போகேக்கையும் வரேக்கையும் பல்லைக் காட்டிக் குலுக்கித் தளுக்கி அவனை மயக்கிப் பழுதாக்கிப் போட்டாள். என்ர பிள்ளை வெத்திலைக் காம்பைக் கூடக் கடிக்காது நல்ல குமரியளைப் பெத்து வைச்சிருக்கிருய்...? நல்ல வெள்ளால மாப்பிள்ளையளைப் பிடிக்கச் சொல்லி வளர்த்திருக்கிறியே...?''

வேலுப்பிள்ளை விக்கித்துப்போய் நின்ருர். என்ன அபாண்டம்.

''எனக்குத் தெரியும். அம்மா. உவளவை இப்படித்தான்...'' என்ருள் கந்தையரின் மகள் மனோன்மணி;

''உனக்கு இப்ப என்ன வேண்டும்கட்டாடி...?'' என்று கேட்டபடி வாமதேவன் வந்தான்.

வேலுப்பிள்ளை அவனை வெறித்துப் பார்த்தார்

''நீ போடா, உள்ளே...'' என்று வாமதேவனை உள்ளே தள்ளிவிட்டார் கந்தையர்

வேலுப்பிள்ளையருக்கு ஆவேசம் தலைதூக்கியது:

''உவயளுக்கு வந்த கெறுக்கு.. வெள்ளால வீட்டில மாப்பிள்ளை வேண்டுமாம்...''—யாரோ கூறினர்

''போ வேலுப்பிள்ளை...'' என்ருர் கந்தையர் ''ஏதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தது நடந்து போச்சுது இனி நடக்க வேண்டியதைப் பார்...சட்டுப் புட்டென்று ஆருக்காவது கட்டிக்கொடு .. நானும் ஏதாவது ஐஞ்சு பத்தைத் தாறன் ..''

''வழி சொல்கிறீரா நீர் ?'' வேலுப்பிள்ளையின் குரல் வன்மையாக ஒலித்தது. ''என்ர மகளைப் பழுதாக்கிப் போட்டு உம்முடைய மகன் வாழலாம் என்று எண்ணு கையும் ..,,

''என்னடா செய்து போடுவாய் ..?'' என்று கத்தினான் கந்தையாவின் மனைவிவேறு தூசணைகளாலும் ஏசினாள்.

வேலுப்பிள்ளை தன்னையே மறந்தார். இடுப்பில் சுற்றிக் கட்டியிருந்த சால்வையை உதறித் தோளில் போட்டார்

''டேய் கந்தையா...''

மாற்றம் நிகழ்ந்தேவிட்டது. மனமறிய குடிமகன் ஒருவன் சம மனிதனாக நின்று கத்தினான்:

''நீ நல்லா இருப்பியா? பெரியதம்பிரான் கேக்கத் தான் போருர்... உன்ர மகன் வாழுறதை நானும் பார்த்துவிடுகிறன் ...''

உண்மை ஒலிக்கும்போது யாவரும் சிலையென நின்றனர்.

வேலுப்பிள்ளை திரும்பி நடந்தார்.

அவரை மறிப்பார் எவருமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. துயர் கவிந்த இரவு

இரவு மிகப் பயங்கரமாக நீண்டது. இருள் கவிந்த வானில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நட்சத்திர மலர்கள் வாடிக்கொண்டிருந்தன. முற்றத்து வேப்பரக் காற்றில் சலசலத்த ஓசையோடு, தூரத்தே வெள்ளத்துத் தவளைகளின் இடைவிடாத ஓலமும் தாள லயத்தோடு எழுந்து கொண்டிருந்தது.

ஜன்னலினூடாக வானில் சிதறிக் கிடந்த தாரகை ஒன்றில் கண் பதித்தபடி துவண்டு கிடந்தாள் ராணி. அவளது உள்ளத்தில் பல்வேறு எண்ணங்கள் இடையறாது எழுந்து குழப்பத்தை விளைவித்தன.

சுபத்திராவை எண்ணும்போதெல்லாம் ராணியின் இதயத்தில் ஆயிரம் மாரித் தவளைகள் ஒன்றுசேர்ந்து ஓலமிடுவது போன்ற பிரமை எழுந்தது.

சற்று முன்புதான் குனிந்த தலையோடு வேலுப்பிள்ளை வந்து தலைவாசலில் அமர்ந்தார். நீண்ட நேரம் அவ்வாறே அமர்ந்திருந்தவர் துண்டை விரித்துத் தலைவாசல் திண்ணையில் சாய்ந்து கொண்டார். இன்னமும் எழுந்துகொள்ளவில்லை.

கந்தையர் வீட்டில் என்ன நடந்ததோ? நீதி கேட்கச் சென்ற தந்தையை அக்கயவர்கள் என்ன கூறி ஏசினார்களோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையைக் குனிந்துகொண்டு தந்தை வரும்போது ராணி அவரைப் பார்த்தாள். என்ன நடக்குமென அவள் எதிர்பார்த்தாளோ அதுதான் நிகழ்ந்திருக்கிறது. அவரிடம் ஓடிச் சென்று என்ன நடந்ததென்பதை அறிய அவள் உள்ளம் துடித்த போதிலும், ஏதோவொன்று அவளைத் தடுத்தது.

கேட்பதற்கு என்ன இருக்கின்றது?

தகப்பனின் தலை குனிந்த வருகை நிகழ்ந்துவிட்ட செயல்களுக்கு விடையாக அமையும்போது, கேட்பதற்கு எதுவுமில்லை.

நீண்ட நேரம் சிலைபோல அமர்ந்திருந்து இருள் கவிந்த வானத்தை அவர் அண்ணார்ந்து பார்த்த காட்சி அவள் மனதில் மீண்டும் எழுந்து, சுபத்திரா மீது தீராத ஆத்திரத்தை ஏற்படுத்தியது. மானத்தோடு வாழ்ந்த அவரின் வாழ்விற்கு இச் சிறு பெண் மாசு கற்பித்துவிட்டாளே!

காதல் என்பது மெல்லிய உணர்வென்றும், ஒத்த உள்ளங்களிடையே பிறக்கின்ற இனிய உணர்வென்றும் அவள் படித்தும், பலர் சொல்லியும் அறிந்திருக்கிருள். அவள்கூட இப்படிப்பட்ட ஒரு உணர்வைத் தெய்வீகமானதென நம்பியும் இருக்கிருள்.

ஆனல், நடந்துவிட்டதென்ன ... ?

அவள் எண்ணியதெல்லாம், திடமாக நம்பியதெல்லாம் பொய்தானு? ஏமாற்றம்தான் இவற்றின் பலனு?

இவை யாவும் அந்தத் தெய்வீகமான உணர்வின் பெயரால் நிகழ்ந்த தவறுகள்தாம். சுபத்திரா வாமதேவனை நம்பி ஏமாந்துபோனுள். அவளது ஏமாற்றம் என்றுமே அழியாத வடுவை ஏற்படுத்திவிட்டது. இதனுல் ஒரு குடும்பத்தின் மானமே மெல்லிய இழையொன்றில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜன்னலினூடாக வீசியகுளிர்ந்த காற்று ராணியின் உடலைத் தழுவிய போதிலும் அவளின் உள்ளத்தின் படபடப்பு ஓயவில்லை. திரும்பி அறையின் மூலையைப் பார்த்தாள்.

கிழிந்த ஒரு பாயில் அலங்கோலமாக முடங்கிக் கிடந்தாள் சுபத்திரா. அவள் உள்ளத்தில் பிரளயம்தான் நிகழ்கின்றதோ? நேற்றுவரை உலகத்தின் இன்பமெல்லாம் தன்னுடையது என்ற எண்ணத்தில் பசுமையோடு வாழ்ந்திருந்தவள், இன்று உலகத்தின் துன்பமெல்லாம் தன் தலைமீது வீழ்ந்ததுபோல வாடித் துவண்டு கிடந்தாள்.

கொழு கொம்பென நம்பித் தழுவி இணைந்திருந்த கொடியைச் சிதைத்துவிட்டுக் கொழுகொம்பைப் பிரிந்துச் சென்ற கொடுமை யாருடையது?

கோகிலாவின் வீட்டில் இப்போது ஓமம் வளர்க்கப் படும். ஒரு பெண்ணின் வாழ்விற்கு மகிழ்ச்சியையும் மலர்ச்சியையும் கொடுக்க வளர்க்கப்படும் அக்கினி, இன்னொரு பெண்ணின் ஆசாபாசங்களைச் சுட்டுச் சாம்பலாககுகின்றது.

மாப்பிள்ளைக் கோலத்தில் அவன் அமர்ந்திருப்பான் தான் செய்துவிட்டதவறுகள் அவன் மனதில் இந்நேரம் நிழலாடுமா? தான் வந்த பாதையில் குறுக்கிட்ட ஒரு மலர் இரக்கமின்றிக் கசக்கி எறியப்பட்ட கொடுமையான நிகழ்ச்சி அவன்மனதில் நிச்சயமாக நிழலாடாது. புதியதொரு வாழ்வின் கதவுகளைத் திறக்கத் துடிக்கும் அவனது எண்ணங்களின் முன் சுபத்திராவின் வாழ்வுக் கதவுகள் அறைந்து சாத்தப்பட்டதை அவன் எண்ணவா போகின்றான்?

துரோகி ! ஒரு பெண்ணின் வாழ்வைப் பாழாக்கிவிட்டானே?

சிவக்கொழுந்து மாமா அடிக்கடி கூறும் வாக்கியம் ராணியின் நினைவில் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெண் வாழையிலை போன்றவள். முள்வந்து வாழையிலையில் குத்தினாலும், வாழையிலைபோய் முள்ளில் குத்தினாலும் நஷ்டம் முள்ளிற்கல்ல.'' இதன் அர்த்தம் அவளுக்கு அன்று சரிவரப் புரியவில்லை. இப்போது தெளிவாகப் புரிகின்றது.

புதுப் புடைவை சரசரக்க மணவறையை நோக்கிக் கோகிலா நடந்து வருவாள். அவள் எண்ணம் நிறைவேறியதால் அவளுக்கு இந்த உலகையே வென்ற உணர்விருக்கும்.

சுபத்திரா நடக்கவேண்டிய இடம் அது.

"ஐயோ சுபத்திரா ... நீ ஏமாந்து போனியே .. !''

ராணியின் விழிகளில் இருந்து கண்ணீர் அருவியெனக் கொட்டியது. அவள் தலையணையில் முகத்தைப் புதைத்துக் குமுறிக் குமுறி அழுதாள். தங்கை செய்துவிட்ட ஒரு குற்றத்திற்காக அவள் கொட்டுகிறது கண்ணீர் கழுவாயாகுமா?

"அக்கா...'' — சுபத்திரா அவள் அருகில் அமர்ந்து அவள் தோள்களை இரு கரங்களாலும் பற்றித் திருப்பினாள்

"அக்கா, எனக்காக, நீ அழுகிறாயா...?''

ராணியால் எதையுமே பேச முடியவில்லை. தங்கையை அணைத்துக்கொண்டு அழுதாள்.

இருவரும் வெகு நேரம் அழுதுகொண்டிருந்தனர்.

"சுபத்திரா, நீ என்னடி செய்யப்போகிறாய்...?''

★

சுபத்திராவின் கைகளில் ஒரு குழந்தை. எல்லாரும் அவளை ஏளனத்துடன் பார்த்து ஏசுகிறார்கள். வாடி வதங்கிப்போன செடியாகிச் சுபத்திரா காய்ந்துபோய் கிடக்கிறாள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைச் சமுத்தில் பிடித்து வீதியில் தள்ளிவிடுகிறார் வேலுப்பிள்ளை. அவள் கண்ணீருடன் தந்தையின் கால்களைக் கட்டிக்கொண்டு மன்னிக்கும்படி கதறுகிறாள்.

கதறுதல் பயனற்றதாகிறது.

தூரத்தே கடல் அலைகள் ஆர்ப்பரித்துக் குமுறி அழைக்கின்றன. குழந்தையைக் கையில் ஏந்தியபடி சுபத்திரா ஆயிரம் கரங்களை நீட்டி அழைக்கின்ற கடல் அன்னையை நாடி ஓடுகிறாள்

"ஐயோ சுபத்திரா..." வீரிட்டுக் கத்தியபடி ராணி விழித்துக்கொண்டாள்.

கறுத்திருந்த வானம் மழையாக நிலத்தைக் குளிர்வித்துக்கொண்டிருந்தது.

படுக்கையில் எழுந்து அமர்ந்து தன் முழங்கால்களிடையே தலையைப் பதித்துக்கொண்டாள் ராணி.

தலை விண் விண்ணெனத் தெறித்தது.

வெளியே போக வேண்டும் போன்ற ஒரு உணர்வு

மெதுவாக எழுந்து விளக்கைக் கொளுத்தினாள். மூலையில் முடங்கிக் கிடந்தாள் சுபத்திரா.

ராணி கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள்.

வேலுப்பிள்ளை திண்ணையில் படுத்துக் கிடந்தார். உடலில் எவ்வித அசைவுமில்லை.

வெளியே தூறிக்கொண்டிருந்த மழையின் குளிர் கூட அவர் உடலில் சலனத்தை ஏற்படுத்தவில்லை.

உள்ளம் குமுறும்போது உடலில் வருத்தம் தெரியாதோ?

"பிள்ளை, எங்கே போறாய்...?" — கேட்டது ஆச்சி.

ராணி திரும்பிப் பார்த்தாள். திண்ணையின் மூலையில் ஆச்சி குந்தியிருந்து சுருட்டுப் புகைப்பது நிழலாகத் தெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. ஆச்சியின் உறக்கத்தைக் கூட இன்று சுபத்திரா வின் இழிநிலை குலைத்துவிட்டது.

அமைதியாக ஓடிக்கொண்டிருந்த ஒரு இனிய குடும் பத்தின் அமைதியைச் சீரழிக்க சுபத்திராவின் வடிவில் புயல் எழுந்ததோ?

வெளியே மழை பலமாக பெய்தது.

"கிணற்றடிக்குப் போறன்..." என்று ராணி பதில் அளித்தாள்.

"கவனம் பிள்ளை... தண்ணி அள்ளுறது.. மாரிக் கிணறு .."

வேப்பமரம் மழை நீரில் குளித்துக்கொண்டிருந்தது. கிழக்கு வானில் மின்னல் கிளை பரப்பி கணப் பொழுதில் அழிந்தது. அவள் திரும்பி வரும்போது, "பிள்ளை" என்று தந்தை அழைத்தார்.

அறைக்குள் நுழைய முயன்ற அவள் கால்கள் தயங் கித் தரித்தன. கதவின் நிலையைப் பற்றியபடி அவள் நின் றாள்.

"என்ன ஐயா...?"

மங்கிய விளக்கொளியில் தகப்பனின் விழிகளிலிருந்து கொட்டிய நீரை அவளால் காண முடிந்தது. அவளும் விம்மி விம்மி அழுதாள்.

"எல்லாம் போச்சுது பிள்ளை..."

"ஐயா..." அவருக்கு ஆறுதல் கூற அவள் விழைந் தாள். ஆனால் வார்த்தைகள் உருப்பெற மறுத்தன. பாரிய மரத்தின் ஆணி வேரே தகர்ந்த போது புயலில் ஆடும் சிறு கொடியா அதனைத் தாங்க முடியும்?

"எப்படிப் பிள்ளை வெளியில் தலை காட்டப்போறன்... வேலுப்பிள்ளை மானத்துக்குப் பயந்தவன். மற்றவர் முன் தலைகுனிந்து நிக்கமாட்டான்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை அழுவதை அவள் இவ்வளவு காலமும் கண்டதில்லை.

வெளிப் படலையைத் திறந்துகொண்டு கனகசிங்கம் வந்தான். தலையிலிருந்து ஒழுகிய நீரைக் கரத்தால் வழித்து விட்டபடி திண்ணையில் வந்தமர்ந்தான்.

அன்று பின்னேரம் வெளியே சென்றவன் இப்போது தான் திரும்பி வந்திருக்கிறான். அவனது இதயத்தில் எத்தனை குமுறல்களோ?

வழக்கமாகச் சற்று நேரம் சென்று வந்தால் எத்தனை கேள்விகள் கேட்கும் தந்தையின் மௌனம் இன்று அவனுக்கு விசித்திரமாக படவில்லை.

தாயை நிமிர்ந்து பார்த்துவிட்டு அவன் மௌனமாகத் தலையைக் குனிந்துகொண்டான்.

''இனி என்னால் இங்கை இருக்க முடியாது .. அவள் இருக்கிறதிலும் சாகிறது மேல்... '' என்றான் கனகசிங்கம்:

''வாமதேவன் உசிரோடை இருக்கிறதையும் பார்த்திடுறன்...''

மழையின் சோவென்ற இரைச்சலிடையே கனகசிங்கத்தின் குரல் வைராக்கியமாக ஒலித்தது.

ராணி கட்டிலில் வந்து விழுந்தாள்.

☆

துயர் நிறைந்த நீளிரவு மெதுவாகக் கலைந்தது; ராணி படுக்கையில் கிடந்தாள்.

விடியாமலே இருந்திருக்கலாம், என அவள் எண்ணமிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு முழுவதும் கொட்டிய மழை ஓய்ந்து வானம் வெளிறிப் போய்க் கிடந்தது.

அவள் கட்டிலில் சோர்ந்து போய்க் கிடந்தாள். இரவு நிகழ்ந்து போன சம்பவங்கள் கனவாக நினைவில் எழுந்தன.

''சுபத்திரா .. சுபத்திரா ..'' அவள் இதய ஓலம் அவளுக்கே கேட்டது.

',ஐயோ பிள்ளை ஐயோ...',

இருந்தாற்போல ஆச்சியின் அலறல் எழுந்தது.

''ஐயா... என்ர ஐயா''

ராணி திடுக்கிட்டு வெளியே ஓடிவந்தாள்.

கிணற்றடியில் வேலுப்பிள்ளை விழுந்து கிடந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. மாரி மழை

ஓய்ந்திருந்த வானம் மீண்டும் மெதுவாகக் குமுறத் தொடங்கிற்று. மின்னற் கிளைகள் பரவ வானம் பொழிந்தது.

தலைவாசல் வாங்கில் வேலுப்பிள்ளையை வளர்த்தியிருந்தார்கள். சோர்ந்து துவண்டு கிடந்தார் அவர் நிமிர்ந்து திடமாக நடந்த ஒரு மனிதரை ஒரு சம்பவம் எவ்வளவு தூரம் நிலைகுலைய வைத்து விட்டது.

நடக்கக்கூடாததெல்லாம் நடந்து விட்டது.

வேலுப்பிள்ளையின் விழிகளில் இருந்து மடை திறந்த வெள்ளம்போல கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

''ஐயா... ஐயா... என்னை மன்னியுங்கோ...'' என்று அவரின் துவண்ட கால்களைக் கட்டிக் கொண்டு சுபத்திரா அழுதாள்.

அவர் எதுவுமே பேசவில்லை.

எல்லாரும் அவரைச் சூழ்ந்து நின்றனர்.

ராணி தந்தையின் அருகில் அமர்ந்து அவர் நெஞ்சைத் தடவிக் கொடுத்தாள்.

வைத்தியர் சுப்பிரமணியம் அவரைப் பார்த்து மருந்து கொடுத்துவிட்டுப் போய் விட்டார்.

''ஒன்டுக்கும் கவலைப்பட வேண்டாம் ஐயா...'' என்று ஆறுதல் கூறினாள் ராணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது உதடுகள் கவலையோடு பிரிந்தன.

''தம்பி...'' என்று அழைத்தார்.

கனகசிங்கம் அவர் அருகில் வந்து அமர்ந்தான்.

''என்ன ஐயா?...''

வேலுப்பிள்ளை அவனை அன்போடு பார்த்தார். அவன் கரத்தை வலிமையோடு பற்றிக் கொண்டார்.

அவன் கண்கள் கலங்கின. ''நான் இருக்கிறன் ..' என்றான் அவன்.

மல்லாகத்திற்குப் போய் ராசுவையும், சின்னத்தம்பி யையும் கூட்டிக் கொண்டு வா...''

''சரி ஐயா...'' என்று கனகசிங்கம் எழுந்து விரைந்து தான். அவன் சென்றதன் பின் அவரின் விழிகள் ராணி யின் பக்கம் திரும்பின.

ராணிக்கு திக்கென்றது. சின்னத்தம்பியை ஐயா எதற்காக வரவழைக்கின்றார்? என்ன எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டு கூப்பிடுகிறாரோ?

''பிள்ளை, நான் கண் மூடுவதற்கு முன்...''

''ஐயா '' என வீரிட்டாள் ராணி. சுபத்திராவும் கண்மணியும் சோர்ந்து அழுதனர். வேலுப்பிள்ளை கவலை யோடு தொடர்ந்தார்;

''உனது எண்ணங்களை நானுணர்வேன், மகளே... உன் இலட்சியங்களை நான் அறியாதவனல்ல ஆனால் உன்னையும் வீணே பலி கொடுக்க என்னால் முடியாது .. நீயாவது ? சின்னத்தம்பி உனக்காக வாழ்பவன் . நல்ல பிள்ளை...''

வானம் குமுறியது. அவள் தலைமீது இடியோடு கூடிய மாரி மேகம் ஒன்று திரண்டு கவிந்ததே? அவளது இலட் சியங்கள் எங்கே? அவள் குடும்பம் உயர்வது எப்போது அவளால் எதுவும் பேச முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் சலவையாளர்களவே மடிய வேண்டியதுதானா?

அவளது படிப்பிற்கு ஊக்கம் தந்து இலட்சியத்தை சுட்டிக் காட்டிய தந்தையே மாறும்போது...?

அவள் மௌனமாகக் கண்ணீர் சொரிந்தாள்.

படலையை எவரோ திறந்து மூடும் சத்தம் கேட்டது

ராணி படலையைப் பார்த்தாள்.

மகாலிங்கம். அவன் மெதுவாகத் தலைவாசலை நோக்கி நடந்து வந்தான்.

எல்லாரது விழிகளும் அவன்மேல் நிலைத்தன வேலுப்பிள்ளை கஷ்டப்பட்டுத் தலையை உயர்த்த முயன்றார்.

''தம்பி, நீர் ஏன் இங்கு வந்நீர்...?''

வேலுப்பிள்ளையின் முதற் கேள்விக்கே பதில் கூற முடியாமல் மகாலிங்கம் தயங்கி நின்றான்.

கரமொன்றால் தலைவாசல் தூணைப்பற்றியபடி, விழிகளை அவர்கள்மீது படரவிட்டான் சோர்ந்து கிடக்கும் வேலுப்பிள்ளையின் மீது ஒருகணம் அவன்விழிகள் நிலைத்தன பின் ராணியின் மீது கண்கள் தரித்தன. அவனது விழிகளை நேருக்கு நேர் சந்திக்கும் வலுவின்றி அவள் தலையைக் குனிந்து கொண்டாள் மகாலிங்கத்தின் கண்கள் வெட்டியெறிந்த வாழைபாகத் துவண்டு கிடந்த சுபத்திராவின் மீது பதிந்து பல கணங்கள் நிலைத்து நின்றன.

அவன் கண்கள் கலங்கித் தவித்தன.

''உட்கார், தம்பி...'' வேலுப்பிள்ளை அவனை அழைத்தார் அவன், அவர் அருகில் வந்து மௌனமாக அமர்ந்தான்.

வானத்தின் மேலைக்கோடியில் இடியொன்று உறுமியது மின்னல் கிளை பரப்பித் தேய்ந்தது. நீண்ட மௌனத்தின் பின் அவன் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்கள் குடும்பத்திற்கு எங்களால் இழைக்கப்பட்ட அநீதிக்கு மிகவும் துன்பப்படுகிறேன்.. நீங்கள் தயவு செய்து எங்களை மன்னிக்க வேண்டும்...''

அவனது கரங்கள் மெதுவாகக் குவிந்தன

குவிந்த அம்மெல்லிய கரங்களை வேலுப்பிள்ளையின் கரம் பற்றியது இதழ்க் கோடியில் ஒரு சிறு புன்னகை வேதனையின் பிரதிபலிப்பாகக் கோடிட்டது

''தம்பி...'' என்று விளித்தார்: வேலுப்பிள்ளை; ''மன்னிப்பதால் என் குடும்ப மானம் காப்பாற்றப்படுமா தம்பி?...மன்னியாமல் நான் விடுவதால் என் குடும்ப மானம் காப்பாற்றப்படுமா? இரண்டுமே ஒன்றுதான் நீர் படித்தனீர்....நான் ஏழை வண்ணான். நீர் நீதி நியாயம் தெரிந்தவர்..''

வேலுப்பிள்ளையின் கண்கள் மீண்டும் கண்ணீர் சிந்தின

''எனக்கு இவை ஒன்றும் தெரியாது ஐயா தெரிந்திருந்தால் இக்கொடுமை நிகழ இடம் அளித்திருக்கவே மாட்டன் இன்றைந கலியாணத்தை அண்ணன் செய்ய விட்டிருக்க மாட்டன்.
எனக்குத் தெரியாமலேயே எல்லாம் நிகழ்ந்து விட்டன''

தலை குனிந்தபடி மகாலிங்கம் தொடர்ந்தான்:

'நேற்று நான் இங்கில்லை.. நான் இல்லாத வேளையில் எல்லாமே நடந்திட்டுது நீங்கள் வந்து மரியாதை கெட்டுப் போனதும் இரவுதான் எனக்குத் தெரியவந்தது இப்படி ஒரு கொடுமை நிகழ்வதை ஒருபோதும் அனுமதியேன் வீட்டில் எனக்கும் மற்றவர்களுக்கும் இரவு முழுவதும் ஒரேசண்டை தந்தை என்னை வீட்டை விட்டுப் போடா என்று கூறுமளவிற்கு...''

வேலுப்பிள்ளை வேதனையோடு குறுக்கிட்டார்

''தம்பி இவற்றால் என்ன பயன்.. நேற்று நான் கொலைகாரனாக மாறியிருப்பன்...உம்மை நினைச்சுத் தான்...எல்லாமே முடிஞ்சு போச்சுது... இனி என்ன இருக்குது..?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலில் கார் ஒன்று வந்து நின்றது

இராசுவும் மனைவியும் ஓடி வந்தார்கள்

சின்னத்தம்பியும் தொடர்ந்து வந்தான்

குமுறல்கள் ஓய்ந்தன: வேலுப்பிள்ளை சின்னத்தம்பியைப் பாசத்தோடு பார்த்தார்.

"நான் ஏன் உன்னை அழைத்தன் தெரியுமா? தம்பி...?,

"தெரியும் மாமா..."

"ஏதேதோ எல்லாம் நடந்து போச்சுது.. உயிரோடை இருக்கேக்கை உன் அப்பன் விரும்பினதை நிறைவேற்றத் தவறிப்போனன்.. படிப்பு, உயர்வு என்பன எங்களைப் பொறுத்த மட்டில் தேவையற்றவைதான்"

மகாலிங்கம் துயரோடும், கலக்கத்தோடும் வேலுப்பிள்ளையைப் பார்த்தான் எவ்வளவு இலட்சியத்துடன் முன்னேறிய குடும்பம்?

ராணியின் இதயம் வெடித்து விடும்போல இருந்தது அவள் என்ன செய்வாள்? சுபத்திரா ஒருத்தியால் எல்லாமே முடிந்து விட்டன எல்லா ஆசா பாசங்களையும் ஒன்று சேர்த்து விடுபவள் போல எச்சிலை மென்றுவிழுங்கினாள். விழிகள் ஓயாது கலங்கின

'மாமா" என்று அழைத்தான் சின்னத்தம்பி சற்று நேர மௌனத்தின் பின் தொடர்ந்தான்: "ராணி ஒருத்தி தான் எனக்கு மனைவியாக முடியும் ..நான் அப்படி எப்பவோ முடிவெடுத்திட்டன் ஆனால் மாமா, நான் நல்லா யோசித்துப் பார்த்தன்...ராணி ஒருத்தியால் நமது சமுகத்தில் மாறுதல்கள் ஏற்பட முடியும் என்றால்.

"தம்பி..." என்று வீரிட்டார் வேலுப்பிள்ளை "நீ என்ன சொல்கிறாய்...?

"மெய்யாத்தான் கதைக்கிறன் மாமா.........ராணி தொடர்ந்து படிக்கட்டும் ..பட்டம் வாங்கட்டும்..... எவ்வளவு காலம் வேண்டுமானாலும் படிக்கட்டும் .... அவளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக நான் காத்திருப்பன்... அவள் படித்து முடிந்ததும் அவள் விரும்பினுல் நிச்சயமாக நான் ஏற்றுக்கொள்வன் ''

ராணியின் கண்கள் சின்னத்தம்பி மீது அன்போடு பதிந்தன, ஒரு கணம் யாவற்றையும் மறந்து சிரிக்க முயன்ருள்.

ஏதோ ஒன்று உள்ளத்தில் முள்ளாக நெருடியது. -மகாலிங்கம் மௌனமாக அமர்ந்திருந்தான். வேலுப் பிள்ளை ஏதோ சொல்ல வாய் திறந்தார்.

அப்போது ''டேய் மகாலிங்கம்... நீ இங்கையா இருக் கிருய் ......எளிய வடுவா ''என்ற குரல் எழுந்தது.

''ஐயோ தம்பி எங்களை விட்டிட்டுப் போயிடாதையடா என்ற குரலும் சேர்ந்து எழுந்தது.

யாவரும் திரும்பிப் பார்த்தனர்.

கந்தையரும், மனைவியும் வேறு சிலரும் முற்றத்தில் நின்றிருந்தனர். அழிந்து போகும் ஒரு முறையைப் பேணிக் காக்க முயலும் விதானையார், அவர் மகன் தங்கராசு ஆகியோரும் நின்றிருந்தனர்.

வேலுப்பிள்ளை வெறியோடு எழுந்தார். கனகசிங்கம் திண்ணையோடு சாய்ந்து வைத்திருந்த கோடரி மீது கண் களைப் பதித்தான்.

''ஏன் இங்கை வந்தியள் ?'' என்று வேலுப்பிள்ளை கத்திஞர்.

''உன்னட்டை ஆரடா வந்தது ? நான் மகாலிங் கத்தைக் கூட்டிப் போக வந்தனான் ?'' என்ருர் கந்தையர்

''கந்தையா...இது என்னுடைய வீடு..''

கந்தையர் கொதித்தார்.

''உன்ரை மோளுக்கு மாப்பிள்ளை தேட அவனை வளைக் கிறியோ?'' தொடர்ந்து கந்தையர் பேசியவை எல்லாரை யும் கோபப்பட வைத்தன. கனசிங்கம் அடக்க முடியாத ஆத்திரத்தோடு கோடலியைத் தூக்கினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாலிங்கம் அவனைப் பார்த்தான். அந்தப் பார்வையின் இரப்பிற்குக் கனகசிங்கம் மதிப்புக் கொடுத்தான் வேலுப்பிள்ளை கத்தினர்.

''எதையும் இங்கை பேசலாம் என்று நினையாதை, கந்தையா நான் கட்டாடிதான் உனக்கு இனியும் மதிப்புத்தர நான் தயாராயில்லை...மானமில்லாதவன் என்று என்னை எண்ணியிடாதை மானத்தை இழந்திட்டு வேட்டி கட்டிக்கொண்டு ரோட்டில் திரிய மாட்டன் உன்னைப் போல ''

''உன்ரை மானத்தை எனக்குத் தெரியாதே...ஆரிட்டையோ பிள்ளை வாங்கிட்டு உன்ரை மோள் எங்களிலை பழி போட வந்தாளே ..?''

''அம்மா '' என்று கத்தினன் மகாலிங்கம் '' பேசுவதை உணர்ந்து பேசுங்கோ ஏன் இஞ்சை வந்நியள்

''நீ ஏன்ரா இங்கே வந்தாய் ?'' என்று கந்தையர் கோபத்தோடு கேட்டார்.

மகாலிங்கம் சிரித்தான்

''நீங்கள் செய்யத் தவறிய ஒன்றைச் செய்ய வந்தேன்

''உன்னையும் வளர்க்கப் போட்டாளவையா...?''

''ஆரும் வளர்க்கவில்லை. என்ரை தங்கச்சியைக் கெடுத்துப்போட்டு ''

''ஆரடி கெடுத்தது...?''

''உன்ரை மோன் தான்''

''நீங்கள் ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடிப்போட்டு பனை வடலியளுக்கை கரைக்குட்டி போடுற சாதி ஆரிட்டையோ உன்ர தங்கச்சி பிள்ளை வாங்கிட்டு ''

''ஐயோ '' என வீரிட்டாள் சுபத்திரா

கணீரென்று மகாலிங்கதின் குரல் ஒலித்தது. அக்குரல் எழாது இருந்திருக்குமானல் கனகசிங்கத்தின் கோடரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்து இறங்கியேயிருக்கும்.

மாகாலிங்கம் தாயைப் பார்த்துக் கத்தினான்:

"ஆரிட்டையும் இல்லை அம்மா என்னிடம்தான்.....— சுபத்திரா என்னிடம்தான் பிள்ளை வாங்கினாள் "

—மாலிங்கம் எழுந்து நின்றான். அவ்விடத்தில் சில கணங்கள் நிசப்தம் நிலவியது. எல்லோரினதும் திக்பிரமைகலையச் சிறிது நேரம் எடுத்தது.

ராணி மகாலிங்கத்தை நோக்கினாள் கடவுள் சிலையைப் பார்ப்பதுபோலப் பக்தியுடன் பார்த்தாள். மகாலிங்கம் ஒரு கணத்தில் எவ்வளவு உயர்ந்து விட்டான்.

"தம்பி " என்று கந்தையர் வீரிட்டார். "இது உனக்கே நல்லா இருக்கா ? என்ரை குடும்ப மானம் மரியாதை என்ரை சாதி ஆசாரம்... எல்லாத்தையும் யோசிச்சியாடா? இது உனக்கே நல்லா இருக்கடா ?

"எது நல்லா இல்லை, ஐயா..? நீங்க செய்ததை விடவா ? உங்கட சாதியும், ஆசாரமும் ஒரு கன்னிப் பெண்ணின் வாழ்வைப் பலிகொள்வதாயிருந்தால் அந்தச் சாதியும் ஆசாரமும் அழிந்தே போய்விடட்டும்", அவன் மேலும் தொடர்ந்தான்:

"நீங்க போங்க வேணுமானால், சுபத்திராவோடை என்னை நீங்கள் வரவேற்கத் தயாராக இருந்தால்...சொல்லுங்கோ வீட்டுக்குத் திரும்பி வாறன்..."

அவனை எவராலும் மாற்றவே முடியாது. சுபத்திரா குளறிக் குளறி அழுதாள்.

ராணியின் கரங்கள் மகாலிங்கத்தை நோக்கிக் குவிந்தன.

வெளியே மாரிமழை ஓய்ந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org